695

APPROVED BY THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION

STANDARD TAMIL READERS

VIDYA MALIKA SERIES

# FIFTH BOOK

வித்தியா மாலிகை

# ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAY 1927
MADRAS

CHRISTIAN LITERATURE SOCIETY

...OCIETY FOR INDIA
...N COLOMBO

விலை, 7 அணா

APPROVED BY THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION

*Standard Tamil Readers*

VIDYA MALIKA SERIES

# FIFTH BOOK

வித்தியா மாலிகை

# ஐந்தாம் புத்தகம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD RANGOON COLOMBO

1927

C. L. S. PRESS, MADRAS—1927

# பொருள் அட்டவணை


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்.—King George the Fifth ... | 1 |
| 2. | ராஜாபிமானம்.—Loyalty ... ... ... ... | 6 |
| 3. | இப்பொழுதே செய்க.—Do it Now ... ... ... | 10 |
| 4. | பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டல்—Kindness to Animals ... ... ... ... ... ... | 12 |
| 5. | சந்திரகுப்தனுடைய பொழுதுபோக்கு.—Chandragupta's Amusements ... ... ... ... ... | 14 |
| 6. | முயற்சி.—Industry ... ... ... ... ... | 17 |
| 7. | கிராம பரிபாலன சபை.—Union Panchayat ... ... | 19 |
| 8. | உவில்லியம் தெல் என்னும் தேசாபிமானி.—William Tell the Patriot ... ... ... ... ... | 24 |
| 9. | ஆபிரிக்கா தேசத்துச் சிங்கம்.—The African Lion ... | 27 |
| 10. | இனியவை கூறல்.—Speaking Kind Words ... ... | 32 |
| 11. | சௌக்கியமாக இருப்பதற்கு வழி.—The Way to Health | 34 |
| 12. | கிளி.—The Parrot ... ... ... ... ... | 38 |
| 13. | அணில்.—The Squirrel ... ... ... ... | 42 |
| 14. | ஆக்ரா நகரம்.—Agra ... ... ... ... ... | 45 |
| 15. | தெய்வபக்தியுள்ள சிறுவன்.—A God-fearing Lad ... | 49 |
| 16. | இரைகுருவி.—The Humming Bird ... ... ... | 53 |
| 17. | பொன்.—Gold ... ... ... ... ... | 56 |
| 18. | மனமுண்டானால் இடமுண்டு.—Where there's a Will there's a Way ... ... ... ... ... | 59 |
| 19. | ராஜ நிருபம்.—Royal Letter to the Princes and the People of India ... ... ... ... ... | 61 |
| 20. | ரங்கூன் பட்டணம்.—Rangoon City ... ... | 64 |
| 21. | அக்பர் சக்கரவர்த்தி.—The Emperor Akbar ... ... | 68 |
| 22. | ஆறுவது சினம்.—Thy Anger Shall Cool ... ... | 73 |

பாடம் பக்கம்
23. சூரியன்.—The Sun ... ... ... ... ... 76
24. என் உயிர் பெரிதல்ல.—My Life Matters Little ... 80
25. ஆங்கிலேய அரசாட்சியில் நாமடைந்துள்ள நன்மை.—The Benefits of the British Rule ... ... ... 85
26. தேனீ.—The Bee ... ... ... ... ... 89
27. திமிங்கிலம்.—The Whale ... ... ... ... 94
28. உத்தம நகரவாசியின் கடமை.—The Duties of a Good Citizen ... ... ... ... ... ... 98
29. டிமோஸ்தினீஸ்.—Demosthenes ... ... ... 103
30. வாந்திபேதி.—Cholera ... ... ... ... 107
31. ஒழுக்கெறும்பு.—The Driver Ant ... ... ... 111
32. குயினீன் என்னும் ஔஷதத்தின் பிரயோஜனம்.—Quinine ... ... ... ... ... ... 113
33. குமாரனும் அடிமையும்.—The Son and the Slave (Hebrew Stories) ... ... ... ... 116
34. எலிஸபெத் பிரை.—Elizabeth Fry ... ... ... 119
இராஜ வாழ்த்துக் கீதம்.—God Save the King ... 126

செய்யுட் பாடம்

நன்னெறி.—Selections from Nanneri ... ... 127
நீதிவெண்பா.— ,, Neethi Venpa ... 131
நீதிநெறிவிளக்கம்.— ,, Neethineri Vilakkam ... 136

வித்தியா மாலிகை

# ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF
2-MAY 1927
MADRAS



## 1. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

இவ்வரசர், முன் நமக்கு அரசரும் சக்கரவர்த்தியுமாக விருந்து நம்மைப் பாதுகாத்து வந்த எட்வர்ட் சக்கரவர்த்தி யின் இரண்டாம் புத்திரர். இப்பொழுது இங்கிலாந்திற்கு அரசரும் நமக்குச் சக்கரவர்த்தியுமாகவிருந்து நம்மைப் பரி பாலித்து வருபவர் இவரே.

இவர் 1865-ம் ஹு ஜூன்மீ 3வ இங்கிலாந்தின் தலை நகராக விளங்கும் லண்டன் பட்டணத்தில், உவேல்ஸ் இளவரசருடைய வாசஸ்தலமாகிய மால்பரோ அரண்மனையில் பிறந்தனர். அலெக்ஸாண்டிரா மகாராணியார் இவருடைய தாயார். தந்தையும் தாயும் இச்செல்வப் புதல்வரை மிக்க அருமையாக வளர்த்து உரிய காலத்தில் அம்மகவுக்கு ஞானஸ்நானம் செய்வித்து ஐந்தாம் ஜார்ஜ் என்று நாமகரணம் செய்தனர்.

மகாராணியாகிய விக்டோரியா சீமாட்டியார் இச்சிறுவருக்குப் பாட்டியாராதலின் இவர் பிறந்தபோது அந்த மகாராணியார் ஆனந்த பரவசராயினர். அவர் இக்குழந்தையின் வளர்ச்சியிலும், கல்வி விஷயத்திலும் கண்ணும் கருத்து முடையவரா யிருந்தார். அடிக்கடி இவ்வரசச் சிறுவர் பாட்டியாரிடத்திற்குச் செல்வதும் அவ்வரசியார் அன்பு பாராட்டுவதும் வழக்கம்.

சிறுவராயிருக்கும்போதே நம்மரசர் மிக்க துணிவுடையவராக விளங்கினர். சிறிதும் அச்சமென்பதில்லாமல் குதிரைகளின்மீது தைரியமாய் ஏறிச் சவாரி செய்வாராம். நீந்தி விளையாடுதல், பந்தடித்தல், பனிக்கட்டியில் வழுக்கியாடுதல் முதலிய ஆட்டங்களில் இவருக்கு வெகு விருப்பு.

இவருடைய தமையனாரும் எட்வர்ட் சக்கரவர்த்தியின் ஜேஷ்ட குமாரருமாகிய அல்பர்ட் விக்டர் என்னும் இளவரசர் 1864-ம் ஹு ஜனவரிமீ 8வ பிறந்தனர். முதற் குமாரராதலின் இவரே பட்டத்திற்குரியவராய் மிக்க அன்பு பாராட்டப் பெற்றூர். வெகு சாந்தமும் அடக்கமுமுடைய இவர் 1892-ம் ஹு ஜனவரிமீ 14வ திடீரென்று இறந்துபோக ஜார்ஜ் இளவரசரே பட்டத்திற்கு உரியவராயினர். 1910-ம் ஹு மேமீ 6வ இவர் தந்தையாகிய

எட்வர்ட் சக்கரவர்த்தி இறந்துபோக இவர் இராச பட்டத்தை யடைந்தனர்.

தந்தையாராகிய எட்வர்ட் சக்கரவர்த்தியாரும், பாட்டியாராகிய மகாராணி விக்டோரியா சீமாட்டியாரும் இச் செல்வச் சிறுவர்களுடைய கல்வி விஷயத்தில் மிக்க சிரத்தையெடுத்து அவர்களுக்குப் போதுமானவளவு கல்வி பயிற்றுவித்ததுமன்றிப் பற்பல தேசங்களுக்குச் சென்று அந்தந்தத் தேசங்களுக்குரிய ஆசாரம், நாகரிகம், பழக்க வழக்கம் முதலியவற்றை நேரிற் கற்றுக்கொள்ளவும் செய்தனர். அவர்கள் அவ்வாறு தேசசஞ்சாரம் செய்தபோது ஜப்பான், இலங்கை, எகிப்து, பலஸ்தீனு முதலிய தேசங்களைத் தரிசித்து அங்குள்ள ஜனங்களைச் சந்தோஷிப்பித்தனர். ஆகையால் நமது அரசர் சிறுவராக விருக்கும்போதே எல்லா விஷயங்களிலும் மிகத் தேர்ச்சியடைந்து ராஜபதவிக்குத் தக்கவராக விளங்கினர்.

எட்வர்ட் அரசர் இறந்தவுடன் ஜார்ஜ் இளவரசர் அரசராகி நம்மை ஆண்டு வருகிறார். இவர் தம் பத்தினி சகிதராய் இந்தியாவிற்கு இரண்டு முறை விஜயம் செய்திருக்கின்றனர். முதல் முறையில் இளவரசர் என்னும் பட்டத்துடன் நமது தேசத்தின் முக்கிய பாகங்களைச் சுற்றிப் பார்த்து, இத்தேசத்து ராஜாக்களாலும் பற்பல பிரபுக்களாலும் சம்மானிக்கப் பெற்றுத் தமது ஜனனதேசஞ் சென்றனர். இரண்டாம் முறையில் நமது சக்கரவர்த்தியாக கிரீடந்தரித்து டில்லி நகரத்தில் ராஜ ராஜாக்கள் சூழ்ந்து நிற்க வெகு விபவத்தோடு பட்டாபிஷேகக் காட்சி தந்து நம்மனைவரையும் மகிழ்வித்தனர்.

ராஜாதி ராஜராகிய ஜார்ஜ் மன்னர் இந்தியாவிற்கு எழுந்தருளியது அங்கிலேய சரித்திரத்தில் முன்னொருபோதும் அறியாத நூதன விஷயம். இவருக்குமுன் அரச

ராயிருந்து செங்கோல் செலுத்திய எட்வர்ட் சக்கரவர்த்தியார் தாம் அரசராவதற்குமுன் ஒருமுறை நமது தேசத்திற்கு விஜயம் செய்தனர். விக்டோரியா மகாராணியார் இத்தேசத்திற்கு ஒருபோதும் விஜயம் செய்ததேயில்லை.

ஜார்ஜ் மன்னருடைய மனைவியார்க்கு மேரி ராணியார் என்று பெயர். இம்மாதரசியார் 1867-ம் ஹு மேமீ 26உ இங்கிலாந்திலுள்ள கென்சிங்டன் மாளிகையிற் பிறந்தவர். அவருக்கும் ஜார்ஜ் அரசருக்கும் 1893-ம் ஹு ஜூலைமீ 6உ விவாக மஹோத்சவம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அன்றுதொட்டு இன்றுகாறும் ராஜதம்பதிகளிருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியாது மிக்க ஒற்றுமையாய் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் திருமணத்தின் பயனாக ஐந்து புத்திரரும் ஓர் புத்திரியும் அவதரித்தனர். இவ்விராஜ குடும்பம் பல்கிப் பெருகிக் குன்றுமேலிட்ட விளக்குப்போல் விளங்குவதாக.

நமது அரசர் தாம் பெற்றெடுத்த அம்மக்களிடத்து மிக்க அன்புடையவர். ராஜாங்க விஷயங்களிற் செலவிடுங் காலந் தவிர மற்ற காலங்களைப் பெரும்பாலும் தம் குழந்தைகளோடு கொஞ்சிக் குலாவிக் கழிப்பார். சாதாரணமாக அவ்வன்பைத் தம் மக்களிடத்திற்போலவே பிறர் மக்களிடத்தும் பாராட்டுவதுண்டு.

ஒருநாள் சாயங்காலம் அவர் வீதி உலாவிவரும்போது சிறுவரிருவர் பாடசாலையிலிருந்து வீட்டுக்குச் செல்வதைக் கண்டார். உடனே அரசர் அவர்களை நிறுத்தி, 'நீங்கள் எப்பாடசாலையில் கல்வி கற்கின்றீர்கள்? என்ன படிக்கின்றீர்கள்?' என்று வினவினர். அதற்கு அவர்கள் தக்கவாறு மறுமொழி பகர்ந்தனர். பிறகு அவர்களுடைய பாட புஸ்தகத்தை வாங்கிப் பார்வையிட்டுச் சில பாடங்களை வாசிக்கச் சொன்னார். அப்பால் அப்பாடங்களை அநுசரித்துச் சில

கேள்விகள் கேட்டார். அவர்கள் கொடுத்த உத்தரம் திருப்திகரமாக விருந்தமையால் அவர்களை மெச்சி உற்சாகப் படுத்தி அனுப்பினர். இது அவர் அயலார் பிள்ளைகளிடத்தில் வைத்த அன்பின் மிகுதி குறிக்கின்றது.

துன்புறுவோரிடத்து அனுதாபப்படுதல் நமது அரசருடைய குணவிசேஷங்களுள் முக்கியமானது. ஒருமுறை இங்கிலாந்தில் அவர் புகைவண்டி நிற்கும் இடத்தில் வண்டியேறச் செல்லும்போது அவ்விடத்துத் தலைவரைச் சந்தித்து நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். முன் அங்கு வேலைபார்த்து வந்த தலைவர் நோயுற்றிருந்தமையால் அவருடைய வேலையைப் பார்த்துக்கொண்டிருந்த இவரிடத்தில் அவருடைய தேகஸ்திதியைப்பற்றி அரசர் மிக்க ஆவலோடு விசாரித்தார். அருகில் நின்ற சிலர் அதைக் கேட்டு மிக்க வியப்படைந்தனர். இத்தகைய பெருங்குணம் நமது சக்கரவர்த்தியாரிடத்தில் இன்றும் விளங்குகின்றது.

1914-ம் ஹு ஆகஸ்ட்மீ ஆரம்பித்த மகா யுத்தவிஷயமாய் ஜார்ஜ் மன்னர் கொண்ட கோட்பாடு முன்னர் ஒருபோதும் இல்லாதவண்ணம் தமது குடிகளது மதிப்பையும் நட்பையும் அவருக்கு சம்பாதித்துக்கொடுத்தது. ஜர்மானியர் யாதொரு நிமித்தமுமின்றி அநியாயமாய் பெல்ஜிய தேசத்தின்மேல் படையெடுத்து அதைப் பிடிக்க எத்தனிக்கவே அத்தேசத்தரசன் தன் தேசத்தைக் காப்பாற்றும்படி ஜார்ஜ் அரசருக்கும் அவர் அரசாங்கத்திற்கும் முறையிட்டான். ஏனெனில் நிரபராதியான அச்சிறிய தேசத்துக்கு வேறு எந்த அரசாங்கத்தினாலாவது ஏதேனும் விபத்து நேரிடும் பட்சத்தில் உதவிபுரிவதாய் நம்மரசர் வாக்களித்திருந்தார். ஆனதுபற்றி ஜர்மானியரை அத்தீச் செயலுக்குட்படாது தடுக்க நமதரசர் கொண்ட சிரமம் கொஞ்சமல்ல. ஜர்மானியர் அதற்கிணங்காது பிடிவாதம் சாதிக்

கவே நமதரசர் தமது அரசாங்கத்து வேண்டுகோளுக்கிசைய பெல்ஜியம், பிரான்ஸ், ருஷியா முதலிய தேசத்தார் பக்கம் சார்ந்து ஜர்மானியரோடும், ஆஸ்திரியரோடும் யுத்தம் தொடுக்கலாயினர். இந்த யுத்தம் தொடங்கிய நாள்முதல் நமதரசரின் பச்சாத்தாபக்குணம் பலவாறு வெளிப்பட்டுளது. பிரான்ஸில் சென்று அங்குள்ள சேனைகளையெல்லாம் தாம் நேராய்ப் பார்வையிட்டு அவர்களைப் புகழ்ந்து உற்சாகப் படுத்தினர். வடகடலிலுள்ள போர்க்கலக்கூட்டங்களுக்கும் தயைபுரிந்து தம் தரிசனமளித்து அங்குள்ள கடற்படை வீரரைக் களிப்பித்தனர். நோயாலாவது காயத்தாலாவது வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகத் தங்கியிருக்கும் வீரர் மீது நமதரசர் பாராட்டும் காருண்யம் மிக மேன்மையானது. அவரைப் பச்சாத்தாபத்துடன் பலமுறை நேரில் சந்தித்து விசேஷித்த வீரத்துவம் காண்பித்தோர்க்குத் தக்க பரிசுகள் தாமே யளிக்கின்றனர். நமதரசர் தமது சரீர சுகத்தையும் வெறுத்து தம் மேன்மைக் குணத்தை வெளியிட்டிருக்கிறார். யுத்தம் ஆரம்பித்த சிறிது காலத்துக்குள் எவ்விதமான மதுபானமும் தம் மேஜைமேல் வைக்கப்படாதெனும் வைதிக கட்டளையைப் பிறப்பித்தனர். இதுவுமன்றி தம் செல்வப் புதல்வரில் வேல்ஸ் இளவரசரை பிரான்ஸில் போர்முனையிலுள்ள ராணுவங்களோடிருக்கவும் இரண்டாம் குமாரரை கடற்படைகளோடிருக்கவும் அனுமதியளித்தனர்.

ஈசன் இறைவனைக் காக்க

## 2. ராஜாபிமானம்

பிரஜைகள் அரசனிடத்தும் அவன் அதிகாரம்பெற்றுத் தத்தம் கடமையைச் செலுத்தும் உத்தியோகஸ்தரிடத்

தும் அன்பும் விசுவாசமும் உடையராயிருத்தலே ராஜாபிமானமெனப்படும். ஜனங்கள் ஒன்றுகூடி வாழுமிடத்து ஒருவர்க்கொருவர் உபத்திரவஞ் செய்யாமலும் ஒருவர் பொருளை ஒருவர் அபகரியாமலும் பாதுகாத்துத் தேசத்திற்குப் பலவிதமான நன்மைகளைச் செய்யும்பொருட்டே ராஜாங்கம் ஏற்பட்டிருக்கின்றது. இராஜாங்கத்திற்குத் தலைவராயிருந்து பிரஜைகளுக்கு வேண்டிய நன்மைகள் செய்வதற்கு அரசர் நியமிக்கப்படுகிறார். ஆகையால் பிரஜைகள் அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஒருவன் தலைவனாயிருக்கின்றானென்று வைத்துக்கொள்ளுவோம். அக்குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அவன் சொற்படி நடந்தால்தான் அக்குடும்பம் க்ஷேமமடையும். அதுபோலவே ராஜ்யத்திற்குத் தலைவனாயிருக்கிற அரசன் கட்டளைப்படி பிரஜைகள் நடந்தால்தான் அவர்கள் சுகமடைவார்கள். ஆதலால் அரசனை நாம் கடவுளுக்கு இரண்டாவதாக மதித்து அவன் கட்டளைப்படி நடப்பதே கடமை. உலகத்திற்கு ஒளியைத் தருவது சூரியன். அதுபோல ராஜ்யத்திற்குச் சிறப்பைத் தருபவன் அரசன். அரசனில்லாத நாடானது தலையில்லாத உடலும், இரவியில்லாப் பகலும் இந்துவில்லா இரவும், தாமரையில்லாத் தடாகமும்போலும். ஆகவே நாம் அரசனை மனப்பூர்வமாய் நேசிக்கவேண்டியது நமது கடமை.

சூரியனில் வெப்பமும், புஷ்பத்தில் முள்ளும், சந்திரனில் களங்கமும் இருப்பதுபோல அரசனிடத்திலும் சில குற்றங் குறைகள் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நாம் அவற்றைப் பாராட்டாது அவன் ஆஞ்ஞைக்கு அமைந்து நடத்தல் வேண்டும். அரசனாவது அவனுடைய அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராவது நம்மிடத்தில் வாங்கும் வரிகள் நமக்கே உபயோகப்படுகின்றமையால் அவ்வரிக

ளைச் சந்தோஷமாய்ச் செலுத்தல்வேண்டும். நாம் தப்பு செய்து தண்டனையடையும்போது அரசன்மீது குறைகூறுதல் தகாது. ராஜதுரோகமான சிந்தை நம்மில் உண்டாகாதபடி மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நாம் ராஜ நிந்தையான வார்த்தைகளைச் சொல்லக்கூடாது; பிறர் பேச இடங்கொடுக்கவும் கூடாது.

இத்தேசத்தாராகிய நாம் ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வருகிறோம். இவர்கள் நமது தேசத்தில் ஆளுகையைக் கைக்கொள்ளுமுன்னர் நாமடைந்த கஷ்டம் கொஞ்சமல்ல. எங்கும் சண்டையும் கலகமுமாகவே இருந்தது. ஜனங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் பொருளுக்கும் ஜீவனுக்கும் எங்கே ஆபத்து வருமோவென்று திகிலடைந்திருந்தனர். பிரயாணம் செய்வது வெகு கஷ்டம். புகைவண்டி அக்காலத்தில் ஏற்படவில்லை. திருடர் பயம் மிகவுமதிகம். தக்கர் என்னும் கொலைபாதகர் அநேகரைக் கொலை செய்தனர். மகளிர், இறந்த தங்கணவரோடு உடன்கட்டையேறுதலும், பெண் சிசுக்களை வதைத்தலும், நரபலியிடுதலும் சாதாரணமாக நடந்துவந்தன. இவ்வித கஷ்டங்களிலிருந்து நம்மை முற்றிலும் விடுவித்து நமக்குச் சந்தோஷத்தையும் சகலவித சுதந்தரத்தையும் தந்தது ஆங்கிலேய அரசாட்சியே. நாம் இப்பொழுது எத்தேசத்திற்கும் சௌக்கியமாய்ப் போய் வரலாம். எந்த மதத்தையும் அநுசரிக்கலாம். உடன்கட்டையேறுதல் முதலிய துராசாரங்கள் தொலைந்தன. புகைவண்டி புகைக்கப்பல் முதலிய பிரயாணத்திற்குரிய சாதனங்கள் நமக்கு எப்போதும் கிடைக்கின்றன. கல்வி மிக்க விருத்தியடைந்து வருகின்றது. ஆதலால் இவை யாவற்றிற்கும் காரணராயுள்ள ஆங்கிலேயரிடத்தில் நாம் மிகவும் அன்புடையவராயிருக்க வேண்டுமல்லவா? காருண்ய சீலராகிய ஐந்தாம் ஜார்ஜ் என்னும்

நமது சக்கரவர்த்தியார் காந்தமானது ஊசியை இழுப்பது போல நமது இருதயங்களைக் கவர்கின்றார். டில்லியில் நடந்த பட்டாபிஷேக மஹோத்சவத்தில் அவர் தமது பத்தினீ சமேதராய்க் கொலுவீற்றிருந்து நமக்களித்த கொடைகள் பல. அடியிற் குறிக்கப்பட்டவை அவற்றுள் விசேஷமானவை. அவையாவன :

1. சிறுவர்களுக்குப் பயிற்றும் இளங் கல்வியை விருத்திசெய்வதற்காக ஐம்பது லட்சம் ரூபாய் கொடுக்க உத்தரவு அளித்தது.

2. ஐம்பது ரூபாய்க்கு உட்பட்ட சம்பளமுடையவர்களுக்கு அரைமாதச் சம்பளம் இனமாகக் கொடுத்தது.

3. இதுவரையிலும் யுத்தத்தில் கீர்த்திபெற்ற ஆங்கிலேயருக்குக் கொடுத்துவந்த கௌரவ பட்டத்தை இனி அப்படிக் கீர்த்திபெறும் இந்தியருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தது.

4. கல்வித்திறமையை உத்தேசித்துக் கொடுக்கப்படும் கௌரவ பட்டங்களைப் பெற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க உத்தரவு செய்தது.

5. குற்றஞ்செய்து தண்டனையடைந்த சில கைதிகளுக்கு மன்னிப்புக் கொடுத்தது.

6. வாங்கின கடனைக் கொடுக்க வழியற்றுச் சிறைச்சாலையிலிருந்த சிலருடைய கடனைக் கொடுத்து அவர்களை மீட்க ஏற்பாடு செய்தது என்பன.

இப்படியே நமது அரசர் இங்கு வந்து நமக்கு இன்னும் அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். ஆகையால் இத்துணை உதாரகுண சீலரான நம் சக்கரவர்த்தியாரிடத்து நாம் மிக்க நன்றியறிதலுடையராய் இருத்தல் வேண்டும்.

## 3. இப்பொழுதே செய்க

நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் செய்து நிறைவேற்றவேண்டிய வேலைகள் பலவுள. அவை சர்வவல்லமையுள்ள கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வேலைகளைத் தக்க காலத்தில் செய்து நிறைவேற்றவேண்டியது நம்முடைய கடமை. எவன் ஒருவன் தனக்கு நியமித்த வேலையை நாளைக்கென்று காலதாமதம் செய்யாது சரியான காலத்திற் செய்து முடிக்கின்றானோ அவனே உத்தமன். இன்றைக்குச் செய்யவேண்டிய வேலையை இன்றைக்கே செய்யாமல் நாளைக்கென்று ஆலசியம் செய்யும் வழக்கம் நம்மவர்களுக்குள் விசேஷமாகக் காணப்படுகின்றது. இவ்வழக்கம் அடியோடு அற்றுப்போகிறவரையில் நமது தேசம் விருத்தியடைகிறதற்குச் சிறிதும் வழியில்லை. ஆகையால் நாம் இவ்வழக்கத்தை வேரோடு களைய முயலவேண்டும்.

நாம் விருத்தியடைய வேண்டுமானால் அன்றன்றைக்குரிய வேலையை அன்றன்றே செய்துமுடிக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். இதை நாம் சிறுவயது முதற்கொண்டு அப்பியசித்து வராவிட்டால் பெரியவர்களாகும்போது இதை அநுசரிப்பது மிகவும் கஷ்டமாக விருக்கும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் உபாத்தியாயர் கொடுக்கும் பாடத்தைப் பிரதிதினமும் படித்து ஒப்பித்தல் வேண்டும். அப்படிச் செய்யாது ஆலசியம் செய்வார்களானால் அடுத்த நாளைக்கென்று குறித்த பாடத்தையும் சேர்த்துப் படிக்கவேண்டியதாகும். ஒரு பாடத்தை ஒரு நாளில் படிக்கமாட்டாத மாணாக்கன் இரண்டு பாடத்தை ஒரு நாளில் படிப்பதெப்படி? இப்படியே நாள் ஏற ஏற

படிக்கவேண்டிய பாடமும் அதிகமாகும். ஆகவே அவனுடைய புத்தி மந்தமாகி அவன் கல்வியை வெறுத்துச் சோம்பேறியாகிக் கெடுவான். தங்கள் வேலைகளை அன்றன்று செய்துமுடியாத யாவருடைய கதியும் இதுதான். ஏழையானாலும் பணக்காரனானாலும் பிரதிதினமும் தன் தன் வேலையைச் செய்து முடிக்கவேண்டும். நாளைக்கென்று ஒருபோதும் ஆலசியம் செய்யலாகாது. இவ்விஷயத்தைக் குறித்துக் கபிலர் அடியில் வருமாறு கூறுகின்றார்.

'ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்
நமனுடை முறைநாள் ஆவது மறியீர்
நம்முடை முறைநாள் ஆவது மறியீர்.'

மரணம் திடீரென்று வரும். ஆகையால் நாம் எடுத்த காரியத்தை உடனே செய்யாவிட்டால் பின்னர் ஒருவேளை அதைச் செய்து நிறைவேற்றாமலே நாம் இறக்கவேண்டி நேர்ந்தாலும் நேரும். அடியில் வரும் சிறிய கதை நமது வேலைகளை நாளைக்கென்று ஆலசியம் செய்யும் சுபாவத்தால் உண்டாகும் கெடுதியை விளக்குகின்றது.

ஒரு பெரிய வர்த்தகசாலையில் ஒரு உத்தியோகம் காலியாயிருந்தது. அவ்வர்த்தகசாலைத் தலைவர் அவ்வுத்தியோகத்திற்கு ஆள் வேண்டியதென்றும் உடனே அதற்காக விண்ணப்பம் கொடுக்கவேண்டியதென்றும் விளம்பரம் செய்திருந்தார். மிகுந்த கல்விமானான ஒருவன் அந்த உத்தியோகத்தைப் பெற விரும்பியும் விண்ணப்பம் செய்யாது சிலநாள் ஆலசியம் செய்து வந்தான். அதே வர்த்தகசாலையில் தாழ்ந்த உத்தியோகத்திலிருந்த மற்றொருவன்

விளம்பாம் செய்த அன்றைக்கே விண்ணப்பம் செய்து கொண்டான். வர்த்தகசாலைத் தலைவர் அவனுக்கு அவ் வுத்தியோகத்தைக் கொடுத்துவிட்டார். அப்பால் அக்கல் விமான் சிலநாட் கழித்து விண்ணப்பஞ் செய்துகொண் டான்; அது பிரயோசனப்படவில்லை. வர்த்தகசாலைத் தலைவர் அவனை நோக்கி, 'நீ பிந்தி வந்தாய், ஆகையால் நான் ஒன்றும் செய்யமுடியாது; முந்தி வந்தவன் வேலை யைப் பெற்றுக்கொண்டான்' என்றார். இதை வாசிக்கும் சிறுவர்களே! இக்கதையினால் நீங்கள் என்ன கற்றுக் கொள்ளுகிறீர்கள்?

## 4. பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டல்.

கடவுள் நம்மைச் சிருட்டித்திருப்பதுபோலவே சகல பிராணிகளையும் சிருட்டித்து அவற்றிற்கும் ஜீவனைக் கொ டுத்துப் பாதுகாத்துவருகின்றார். நம்மைப்போலவே அவை களும் பிறப்பு இறப்பு நோய் முதலிய துன்பங்களுக்கு உட் பட்டிருக்கின்றன. நமது காலில் ஒரு முள் ளு தைத்தால் நமக்கு எப்படி வருத்தமுண்டாகுமோ அப்படியே அவற் றிற்கும் வருத்த மூண்டாகும். இப்படியிருக்கச் சில பிள்ளை கள் சிறிய பிராணிகளைப் பிடித்து மிகவும் குரூரமாய் நடத்துவது எவ்வளவு மதியீனம். பள்ளிக்கூடத்தில் படிக் கும் சிறுவர்கள் பொன்வண்டுகளையும் தும்பிகளையும் வண் ணாத்திப் பூச்சிகளையும் பிடித்து இடுப்பிலே கயிறுகட்டி அங்கும் இங்கும் அலைத்து வருத்துவதை நாம் கண்ணுற் காண்கின்றோம். அவர்கள் அப்பிராணிகளுக்கு வருத்த முண்டாகுமென்பதைச் சிறிதும் உணராமல் அவற்றைக் காற்றாடிபோல் கொண்டு விளையாடுகிறார்கள். சிலர் குண்

டூசியால் குத்தி அவைகளுக்கு வேதனையுண்டாக்குகிறார்கள். இப்படிச் செய்வது மகா பாதகம்.

ஒருநாள் ஓர் ஏழைப் பையன் கையில் தடியொன்றை வைத்துக்கொண்டு ஒரு தெருத்திண்ணையில் உட்கார்ந்து தனக்கு யாரோ கொடுத்த ஒரு தோசையைத் தின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அங்கே ஒரு நாய் படுத்திருக்கக் கண்டு ஒரு தோசைத்துண்டை விண்டு அதற்குக் கொடுக்க விரும்புவதுபோல் கையை நீட்டிக் கூப்பிட்டான். கூப்பிடவே அந்த நாய் ஓடிவந்து அவன் கையை உற்றுப் பார்த்து வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. உடனே அந்தத் துஷ்டப் பையன் தான் வைத்திருந்த தடியால் நாயின் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தான். அடி பட்டதும் நாய் கத்திக்கொண்டு ஓடிப்போயிற்று. அவ்வழியாய்ச் சென்ற ஒரு வித்துவான் இதைப் பார்த்து அப்பையன் செய்தது அக்கிரமமென்றுணர்ந்து அவனுக்கு நல்ல புத்தி புகட்ட எண்ணி இரண்டணாவைக் காட்டி ‘அடே! பையா! இங்கு வா, உனக்கு இரண்டணா கொடுக்கிறேன்’ என்று கூப்பிட்டார். உடனே பையன் அதிகச் சந்தோஷத்தோடு அவரண்டை ஓடிவந்தான். அவன் கிட்ட வந்தவுடன் வித்துவான் தாம் கையில் வைத்திருந்த பிரம்பால் பளீரென்று ஒரு அடி அடித்தார். பையன் பதைத்து அழுதுகொண்டு ‘ஐயா! ஒருவருக்கும் ஒரு கெடுதியும் செய்யாது வீதியோரத்தில் உட்கார்ந்து தோசை சாப்பிட்டுக்கொண்டிருந்த என்னைக் காசு தருகிறேனென்று ஆசைகாட்டி அடிப்பது நியாயமா?’ என்றான். உடனே வித்துவான் ‘தெருவோரத்தில் படுத்திருந்த நாயைத் தோசையைக் காட்டிக் கூப்பிட்டுத் தடியாலடித்தது நியாயமானால் இதுவும் நியாயந்தான்’ என்றார். பையன் வெட்கி யாதொன்றும் பேசாமல் போய் விட்டான்.

இதை வாசிக்கும் மாணாக்கரே! அந்தப் பையன் செய்தது எவ்வளவு அக்கிரமம் பார்த்தீர்களா. நாம் எந்தப் பிராணிக்கும் யாதொரு கெடுதியும் செய்யலாகாது.

## 5. சந்திரகுப்தனுடைய பொழுதுபோக்கு

சந்திரகுப்தன் என்பான் முற்காலத்தில் இந்தியாவை ஆண்ட சக்கரவர்த்திகளிலொருவன். அவன் காலம் கிறிஸ்து சகாப்தத்திற்கு ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கு முற்பட்டது. அவன் மூரா என்னுமோர் இழிகுல மாதின் குமாரனாகையால் உயர்ந்த ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவனல்லவென்று தெரிகிறது. ஆயினும் அவன் தன் விடாமுயற்சியாலும் புஜபல பராக்கிரமத்தாலும் கூர்ந்த புத்தியாலும் தானே அரசனானான். தன் அன்னையின் பெயராகிய மூரா என்பது காரணமாக அவனால் ஸ்தாபிக்கப்பட்ட ராஜபரம்பரைக்கு மௌரிய ராஜபரம்பரை என்று பெயர்; அப்பரம்பரையாருக்கு மௌரியர் என ஓர் பெயர் வழங்குதலுமுண்டு.

சந்திரகுப்தன் பாஞ்சாலம் மகதம் முதலிய நாடுகளை ஜயித்து அக்காலத்தில் இந்தியாவில் முதன்மை பெற்று விளங்கினவன். இக்காலத்தில் பாட்னா என்று வழங்கும் பாடலிபுரத்தை கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்நூற்றிரண்டு வருஷங்களுக்கு முன்னே அவன் தன் ராஜதானியாக்கிக் கொண்டபோது கிரேக்க தேசத்து அரசனாகிய ஸெலூக்கஸ் என்பவன் மெகாஸ்தினேஸ் என்னும் பெயருடைய ஓர் தூதுவனை சந்திரகுப்தனுடைய ஸமஸ்தானத்திற்கு அனுப்பினான். அத்தூதுவனைச் சந்திரகுப்தன் மிக்க அன்புட

னேற்று உபசரித்து வந்தனன். அத்தூதுவன் மிகச் சிறந்த நிபுணன். அவன் அங்கிருந்த காலத்தில் தான் கவனித்த விஷயங்களைப்பற்றி அநேக குறிப்புக்கள் எழுதி வைத்திருந்தான். அவற்றிற் பல இக்காலத்தில் நமது கையிலகப்பட்டுள்ளன. அக்குறிப்புகளிலிருந்து சந்திர குப்தனுடைய வாழ்நாள், பொழுதுபோக்கு முதலியவை எப்படிப்பட்டவையென்று ஒருவாறு அறிதல் கூடும்.

மிருகங்களை ஒன்றோடொன்று சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பது சந்திரகுப்தனுக்கு வெகு பிரியம். இதற்காக அவன் எருதுகளையும், ஆட்டுக்கடாக்களையும், யானைகளையும், காண்டாமிருகங்களையும் விசேஷமாகவளர்த்து வந்தான். மாட்டுப் பந்தயத்திலும் அவ்வரசனுக்கு வெகு விருப்பம். அவ்வித பந்தயத்தை இக்காலத்தில் இந்தியாவில் எவ்விடத்திலும் காண்பதரிது. பந்தயமோடும் பாதை சற் றேறக்குறைய ஆறுயிரம் கஜம் நீளமுடையது. அதில் தேர் பந்தயம் விடுவார்கள்; அத்தேர்கள் ஒவ்வொன்றிலும் குதிரைகளும் மாடுகளும் பூட்டப்பட்டிருக்கும். நடுவில் மாட்டையும் இருபுறத்திலும் குதிரைகளையும் கட்டி வெகு வேகமாகப் பந்தயம் விடுவார்கள். அப்பந்தய வேடிக்கை யைக் கண்ணுற்று அரசன் ஆனந்திப்பான். பந்தயத்தில் கெலிப்பவர்களுக்குச் சன்மானத்துக்கென்று பெருந்தொகை யான பணத்தைக் கிழிகட்டி வைப்பதுமுண்டு.

சில சமயங்களில் அரசன் முன்னிலையிற் சிலம்ப விளை யாட்டு மல்யுத்தம் முதலியவை நடக்கும். திரளான ஜனங் கள் அவ்வேடிக்கையைக் கண்டு களிப்பார்கள். ஆயினும் அரசன் அதிகமாக விரும்புவது விலங்கு வேட்டையே. வேட்டையாடுங் காலங்களில் அரசனுக்கு அதிக சிரமமில் லாமல் சமஸ்தமும் சித்தம் செய்யப்பட்டிருக்கும். அவன்

உட்கார்ந்தபடியே அம்பினுல் கொல்லத்தக்க மிருகங்களை அவனிருக்கும் பக்கமாகவே வேட்டைக்காரர் தூரத்திக் கொண்டு செல்வர்.

அரசன் ஊரிலே சாரிபோகும்போது யானைமீதேறிச் செல்வான். அவனுக்கு மெய்க்காப்பாளராக அநேக ஸ்திரீகள் ஆயுதபாணிகளாக நெருங்கி அவனைச் சூழ்ந்து செல்வார்கள். அவன் செல்லும் மார்க்கம், இருபுறமும் கயிறு கட்டப் பெற்றுப் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட மார்க்கத்தின் குறுக்கே போகிறவர்கள் கொலைக்குள்ளாவார். ஆகையால் ஒருவரும் அதன் கிட்டவும் போகமாட்டார்கள்.

பாடலிபுரத்தில் அவ்வரசனுடைய வாசஸ்தலம் வெகு விநோதமாக அமைக்கப்பெற்றது. அச்சிங்கார மாளிகை புஷ்பமயமாய் விளங்கும் நந்தவனங்களும் அழகிய மீன்கள் துள்ளி விளையாடும் தடாகங்களுமுள்ள பெரிய தோட்டத்தின் மத்தியில் பல பொற்சிகரங்கள் விளங்க ஆகாயத்தை யளாவி நின்றது. அரசன் சிற்சில சமயங்களில் தன் மனைவிமாரோடு அங்குள்ள பூஞ்சோலைகளுக்குட் சென்று பறவைகள் பாடுதல், வண்டுகள் ரீங்காரம் செய்தல், குயில்கள் கூவுதல் முதலியவற்றைக் கேட்டும், மயில்கள் தம் கலாபங்களை விரித்தாடுவதைக் கண்டும் ஆனந்தங்கொள்வான். தடாகங்களில் தின்பண்டங்களை எறிய, மீன்கள் அவற்றைத் தின்னுமாறு கூட்டமாக வரும்; அப்போது அக்காட்சி அவனுக்கு விசேஷித்த இன்பத்தைக் கொடுக்கும்.

அவனுடைய வேலைக்காரர் அவனுக்குத் தேகாரோக்கியத்தை உண்டுபண்ணும்பொருட்டு அவன் உடலைப் பிடித்துத் தேய்ப்பார்கள். சில சமயங்களில் அவனைப் படுக்கச் செய்து கருங்காலி மரத்தாற் செய்யப்பட்ட சிறிய உருள்

கட்டைகளை அவன்மேல் உருட்டுவார்கள். அப்படி அவன் சரீர சிரமபரிகாரம் செய்வித்துக்கொண்டிருக்கும்போது வியாச்சிய விசாரணை செய்வதுமுண்டு.

## 6. முயற்சி

நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள சராசரங்களையும் சிருஷ்டித்த கடவுள் நமது சௌக்கியத்திற்கு அவசியமான வஸ்துக்களைக் கொடுக்கத்தக்கதாகப் பூமியை சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் அவ்வஸ்துக்கள் நம்முடைய முயற்சியின்றி அகப்படுதல் அரிது. நமக்கு வேண்டியவற்றிற்காகக் கஷ்டப்பட்டு உழைப்பதே முயற்சியெனப்படும். இதனால்தான் கற்றுணர்ந்த பெரியோர் 'முயற்சி திருவினை ஆக்கும்' என்றும் 'முயற்சியுடையோன் எவற்றையும் வெல்லுவன்' என்றும் கூறியிருக்கின்றனர்.

முயற்சியில்லாதவர்கள் இவ்வுலகில் ஜீவிப்பது அரிது. நாம் நமது போஜனத்திற்காகத் தானியத்தை விதைத்து அறுத்துக் களஞ்சியங்களிற் சேர்க்கவேண்டியிருக்கின்றது. பருத்திச் செடியைப் பயிராக்கிப் பஞ்சையெடுத்து நூல் நூற்றுத் துணி நெய்யவேண்டியிருக்கின்றது. உலோகங்களை நிலத்திலிருந்து தோண்டியெடுத்து நாணயங்கள் பாத்திரங்கள் முதலியவற்றைச் செய்யவேண்டியிருக்கின்றது. இவையனைத்தும் நம்முடைய முயற்சியின்றி கிடைப்பது அரிது. ஆகையால் நாம் இவ்வுலகில் நமது வாணாளைச் சந்தோஷமாய்க் கழிக்கவேண்டுமானால் முயற்சி அவசியம் வேண்டியது.

இச்சிறந்த குணம் நாம் சிறுவராயிருக்கும்போதே நம்மிடத்தில் உண்டாதல் வேண்டும். பள்ளிக்கூடங்களில்

சாதாரணமாய்ப் படிக்கிற பிள்ளைகளைப் பாருங்கள். உபாத்தியாயர் கஷ்டமான ஒரு பாடத்தைப் படிக்கச் சொன்னாலும் கணக்கைப் போடச்சொன்னாலும் இன்னது செய்வதென்று தெரியாது விழிக்கின்றார்கள். படிக்கவும் கணக்குப்போடவும் முயற்சி செய்கிறதில்லை. தம்மால் கூடாவிட்டால் பக்கத்திலேயுள்ள பையனுடைய கற்பலகையைப் பார்த்து எழுதப் பிரயத்தனப்படுகிறார்கள்.

சில பிள்ளைகள் படிக்கத் தங்களுக்கு நிர்வாகமில்லையென்று படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். விடாப்பிடியாய் வீட்டிற்கு வீடு சென்று யாசகம் செய்து பள்ளிக்கூடத்துச் சம்பளம் கொடுத்துப் படித்து முன்னுக்கு வந்தவர்கள் அநேகருண்டு. வீதிகளிலுள்ள விளக்குகளிற் படித்துக் கல்விமான்களாகி உயர்ந்த உத்தியோகம் பெற்று விளங்கினவர்களில்லையா? அவர்கள் அவ்வித பதவியை அடைந்ததற்குக் காரணமென்ன? முயற்சிதான்.

ஆகையால் ஒருவன் இடைவிடாது முயற்சி செய்வானாயின் எவ்விதமான கஷ்டத்தையும் ஜெயிப்பான். கிரேக்க தேசத்தில் டிமோஸ்த்தெனேஸ் என்னும் கலைக்கியானியார் சிறுவராயிருந்த காலத்தில் நன்றாய்ப் பேசச் சக்தியற்றவராயிருந்தார். பேச ஆரம்பித்தவுடன் நாக்குழறிப் பேசவியலாது அவஸ்தைப்படுவது வழக்கம். இப்படிப்பட்டவர்களைத் தெற்றுவாயரென்று சொல்வதுண்டு. ஆயினும் அவருடைய விடாமுயற்சியினால் பிற்காலத்தில் மிக்க அலங்காரத்தோடு பேசவும் பிரசங்கிக்கவும் திறமுடையவரென்று உலகெங்கும் பிரசித்தி பெற்றார். எப்படியெனில், அவர் வாய் நிறையச் சிறு கூழாங் கற்களைப் போட்டுக்கொண்டு கடற்கரைக்குச் சென்று கடலொலிக் கெதிரொலியாகக் கத்துவாராம். இவ்வாறு விடாமுயற்சியோடு நெடுங்காலம் செய்து வரவே அவர் சிறிதும் தெற்றாது பேசத்தக்

கவரானுர். இவர் செய்த உபந்நியாசங்கள் மிகச் சிறந்தவை யென்று நன்கும்திக்கப்படுகின்றன.

மிக்க கீர்த்திபெற்ற மனிதருடைய வாழ்நாட் சரித்திரங்களை நாம் வாசிக்கும்போது அவர்கள் மிக்க முயற்சியுடையவரா யிருந்தாரென்று காண்கிறோம். இவர்கள் தத்தம் மனோதர்மங்களிலும் குணங்களிலும் வேறுபாடுடையவராயிருந்தாலும் முயற்சியளவில் பேர்பெற்றவரா யிருந்தார்கள். அவர்கள் விடியற்காலையில் எவ்வளவு சீக்கிரம் நித்திரையை விட்டு எழுந்திருந்தார்கள்? இரவில் எவ்வளவு நேரம் விழித்திருந்து தங்கள் வேலையைச் செய்தார்கள்? எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தார்கள் என்பவற்றை நாம் யோசிக்கும்போது மிகவும் ஆச்சரியமுண்டாகும். இதை வாசிக்கும் சிறுவர்களே! விடாமுயற்சியே உங்களுக்குப் பேரணியாய் இருக்கட்டும், பள்ளிக்கூடத்திலும், வெளியிலும், உத்தியோக ஸ்தானத்திலும் முயற்சியைக் கைவிடாதீர்கள். முயற்சியால் ஆகாதது ஒன்றுமில்லை.

'தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்'

அதாவது, '"விதிதான்! என்னாலே ஆகாது!" என்றாலும், முயற்சியானது தான் இருக்கும் உடம்பின் வருத்தத்துக்குத் தகுந்த பலனை அளிக்கும்' என்பது. இதை ஒரு போதும் மறவாது பொன்னேபோல் போற்றுவீராக.

## 7. கிராம பரிபாலன சபை

பூர்வகாலந்தொட்டு நமது இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஒரு தலைவனுக்கு அடங்கி நடக்கும் குணமுள்ளவர்கள் இதற்குக் காரணம் இந்துக்களுடைய குடித்தன முறையாம். விவாகமானவுடன் புருஷனும் பெண்சாதியும் வேறு குடித்

தனம் செய்வது அபூர்வம். ஒருவனுக்கு ஐந்து குமாரர் இருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அந்த ஐந்து பேரும் விவாகமான பின்பும் ஒன்றாகத்தான் வசிக்கிறார்கள். எவ்வளவாக அந்தக் குடும்பம் பலுகிப் பெருகினாலும் அக்குடும்பத்தாரனைவரும் தலைவனாயுள்ள ஒருவனுக்குத் தாழ்ந்து நடக்கிறார்கள். இனி அக்குடும்பத்திற்குத் தொழில்செய்யும் வண்ணான், அம்பட்டன், தச்சன், கொல்லன், பண்ணைக்காரர் முதலிய யாவரும் அவனுக்கு அடங்கி நடக்கிறார்கள். இது நாளடைவில் சிறிது மாறுதலடைந்து ஒரு கிராமத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஒரு தலைவனுக்கு அடங்கி நடக்கும் வழக்கம் ஆங்கிலேயர் நமது தேசத்திற்கு வருவதற்கு முன்னரே ஏற்பட்டுள்ளது.

ஒரு கிராமத்திற்கு ஒரு பெருதனக்காரனே மேலதிகாரி, அவன் இட்டதுதான் சட்டம். அவன்தான் போலீஸ் அதிகாரி, அவன்தான் நியாயாதிபதி, அவன்தான் தேசாதிபதி, அவன்தான் எல்லாம் என்றாலும், அவன் தன் கிராமத்திலுள்ள சில பெரிய மனிதருடைய உதவியுடன் தான் கிராமத்துச் சகல காரியங்களையும் நடத்திவருவான். இப்படி கிராமத்தலைவனும் கிராமத்திலுள்ள சில பெரியோர்களும் ஒன்றாய் சபைகூடி, ஆலோசித்து, கிராமத்திற்குரிய காரியங்களை நடத்திவர ஏற்பட்டிருந்த சபைக்கு பஞ்சாயத்து என்று பெயர். இப்படிப்பட்ட கிராம சங்கங்கள் முற்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலுமிருந்தன. இச்சங்கங்களுக்குட்பட்டு, குடிமக்கள் என்று சொல்லப்படும் தச்சன், கொல்லன், வண்ணான், அம்பட்டன் முதலிய தொழிலாளிகள் யாவரும் தத்தம் தொழிலைக் கிரமமாக நடத்திவந்தார்கள். அக்காலத்தில் கிராமங்களில் ஒருவிதமான சுய அரசாட்சி இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு.

அக்காலத்தில் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்வதற்குப் பாட்டைகள் ஏற்படவில்லை.

பிரயாணத்திற்கு சாதனமாயுள்ள மாட்டுவண்டி, புகை வண்டி முதலியவை இல்லாமையால் கிராமங்கள் பெரும் பாலும், ஒன்றுடனொன்று சம்பந்தமில்லாத தனிக் கிராமங் களாயிருந்தன.

ஆங்கிலேயர் நமது தேசத்தின் அரசாட்சியைக் கைப் பற்றிய பின்னர் இருப்புப்பாதைகளையும் மின் தபால்களையும் எங்கும் ஏற்படுத்தவே இந்தியா முழுவதும் இப்பொழுது பல ராஜதானிகளாகவும், ஜில்லாக்களாகவும், தாலுகாக்க ளாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மகா



காருண்ய சீலரெனப் பெயர்வகித்த ரிப்பன் பிரபு அவர் களின் சகாயத்தால், கிராமங்களில் 'யூனியன்' என்று

சொல்லப்படுகிற கிராம சங்கங்களும், தாலுகாக்களில் தாலுகா போர்டுகளும், ஜில்லாக்களில் ஜில்லா போர்டுகளும், நகரங்களில் நகர சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவைகள் சுயாட்சிச் சங்கங்களாம்.

ஒரு கிராமத்திற்குரிய காரியங்களை நடத்துவதற்கு இராஜாங்கத்தாரும் அவ்வூர் குடிகளும் சிலரைத் தெரிந்து நியமிக்கிறார்கள். அவர்கள் பூஸ்திதியுடையவர்களாகவும், கல்வியறிவுடையவர்களாகவும், யோக்கியர்களாகவும், தக்க அந்தஸ்துடையவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியம். அப்படிப்பட்டவர்கள் சேர்ந்து ஏற்படும் சபைக்குத்தான் கிராம பஞ்சாயத்து என்று பெயர். இதனை ஆங்கிலேய பாஷையில் 'யூனியன்' பஞ்சாயத்து என்பர். கிராமத்தின் விஸ்தீரணத்திற்கும், வேலைக்கும் தக்கபடி ஏற்ற அங்கத்தவர்களைத் தெரிந்து நியமிப்பார்கள். இச்சங்கங்களில் ஐவர் முதல் பன்னிருவர் வரையிலுமுண்டு.

கிராமாதிகாரி இச்சங்கத்தின் முக்கிய அங்கத்தவராவார். மற்றையோர் இராஜாங்கத்தாராலும் வரி செலுத்துவோராலும் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களை நியமிக்குங் காலத்தையும் அவர்கள் அங்கத்தவராயிருக்கத்தக்க காலத்தையும் குறித்து விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி தேசாதிபதி அவர்களாலாவது அவருடைய அதிகாரம் பெற்ற வேறு உத்தியோகஸ்தராலாவது நியமிக்கப்படுவர். அச்சங்கத்தாரின் கடமைகளாவன :—

சங்கத்தின் எல்லைக்குட் தெருக்களை ஏற்படுத்தல், அவைகளைச் சரியான நிலைமையில் வைத்துப் பாதுகாக்கச்செய்தல்.

வாய்க்கால்கள், சாக்கடைகள் முதலியவற்றைக் கட்டுவித்தல்; அவைகளை நன்றாகக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்கச் செய்தல்.

குளம் குட்டைகளையும் கிணறுகளையும் சுத்தமாக வைத்திருக்கச் செய்தல்.

வீதிகளிலுள்ள குப்பைகளை நன்றாகப் பெருக்கி எடுப்பித்து அப்புறப்படுத்துதல்.

இராக்காலங்களில் ஜனங்கள் சுகமாகப் போக்குவரவு செய்வதற்காக வீதிகளில் விளக்கேற்றுவித்தல்.

வாந்திபேதி அம்மை முதலிய நோய்கள் பரவாதபடி சுகாதாரமான காரியங்களைச் செய்வித்தல் என்பன.

இவைகளைச் செய்வதற்குச் சங்கத்தாருக்குப் பணம் வேண்டுமே; அப்பணத்தை வரிகளின் மூலமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

சங்கத்தவர் வீட்டுவரி போடலாம். பந்தல்வரி, கொரட்டுவரி முதலிய சில்லறை வரிகளைத் தண்டலாம். கிராமங்களில் வியாபாரச் சாக்குகளை ஏற்றிவரும் வண்டிகளை நிறுத்துவதற்குப் பிரத்தியேகமாக இடமுண்டு. அங்கு நிறுத்தும் வண்டிகளுக்கெல்லாம் வண்டிக்கு இவ்வளவென்று வரி கொடுக்கவேண்டும்.

இனி குப்பை விற்பதனுலுண்டாகும் வருப்படியும் அவர்களைச் சேர்ந்ததே. இவ்விதமாகச் சேரும் பணம் முழுவதும் செலவுக்குப் போதாவிட்டால், ஜில்லா போர்டாரிடத்திலாவது தாலுகா போர்டாரிடத்திலாவது பணம் வாங்கிக்கொள்ளலாம்.

இப்படியே கிராம சங்கங்கள் தம் அரசாட்சியை நடத்தி ஜனங்களுக்குப் பெரும் பயனுடையனவாய் விளங்குகின்றன. ஆங்கிலேயரிடத்திலிருந்து நமக்குக்கிடைத்த தன் அரசாட்சி பெரும் பேறும். ஆகையால் ராஜவிசுவாசமுடையோராயிருக்கவேண்டியது நமது கடமை.



## 8. உவில்லியம் தேல் என்னும் தேசாபிமானி

மிக்க கீர்த்திவகித்த இத்தேசாபிமானி ஏறக்குறைய ஐந்நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னே ஐரோப்பா கண்டத்தில் மிகச் சிறந்த மலைநாடாக விளங்கும் சுவிட்

ஸர்லாந்து தேசத்திலே ஒரு நல்ல குடும்பத்திற் பிறந்தவன். சிறுவயதிலேயே அவன் தன் தேசத்திற்கடுத்த விஷயங்களில் பிரவேசித்து ஜனங்களுக்கு மிக்க நன்மை செய்து வந்ததுமின்றி, காலக்கிரமத்தில் தன் ஜனன தேசத்தின்மீது மிகுந்த அன்பும் அபிமானமுமுடையவனுனன். அக்காலத்தில் ஆஸ்திரியா தேசத்தவர் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதைத் தம் வசமாக்கிக்கொண்டு, அங்குள்ள குடிகளை மிகக் கொடுமையாகவும் சட்டத்திற்கு மாறுகவும் நடத்திவந்தனர். அப்பொழுது அந்த ஜனங்கள் பட்ட கஷ்டமும் விட்ட கண்ணீரும் கொஞ்சநஞ்சமல்ல. எப்பொழுது ஆஸ்திரிய போர்வீரர் புகுந்து வீடுகளைக் கொள்ளையடித்து அங்குள்ளவர்களைச் சித்திரவதை செய்வார்களோவென்று ஜனங்கள் ஏங்கி உயிரற்றவர்போலிருப்பார்கள். அவ்வாறு வருந்தினவர்களுக்குள் தெல் என்பவனும் ஒருவன். அவன் மன உறுதியும் விடாமுயற்சியும் விசேஷமாய் அமையப் பெற்றவன். வெகு பராக்கிரமமும் தேசாபிமானமும் கலங்காத துணிவுமுடைய அவன் தன் தேசத்தின் நிலைமையைக் குறித்துப் பெரிதும் துக்கித்து அதற்குத் தீங்கு செய்யும் யாவரையும் எதிர்த்து நாசஞ்செய்யத் தன்னுலான பிரயத்தனங்கள் யாவும் செய்து வந்தான்.

ஆஸ்திரியா தேசத்துச் சக்கரவர்த்தி சுவிட்ஸர்லாந்து தேசத்தைப் பிடித்தவுடன் அத்தேசத்தைத் தன் பெயரால் ஆளுவதற்கு ஒரு அதிபதியை ஏற்படுத்தியிருந்தான். அவன் பெயர் கெஸ்லர். அவன் மிக்க அதிகாரப் பிரியனுகி அந்நாட்டவர் அனைவரும் தனக்குத் தக்க மரியாதை செய்ய வேண்டுமென்னும் பேரவாக்கொண்டு, சந்தை வெளியில் ஓர் உயர்ந்த கம்பத்தை நாட்டி அதன்மீது தன் தொப்பியை மாட்டி, அவ்வழியாகச் செல்வோர் யாவரும், தத்தம் தொப்

பியைக் கழற்றி, முழங்காலிட்டு, மரியாதை செய்யவேண்டு மென விளம்பரம் செய்வித்தனன்.

அக்கொடுங்கோலன் செய்த விபரீத கட்டளைக்கு அந் நாட்டார் உடன்படவில்லை. ஒரு மனிதனுடைய தொப்பி யைக் கண்ட மாத்திரத்தில் அரசனுக்குச் செய்யத் தகும் மரியாதையை அவ்வுயிரற்ற வஸ்துவுக்குச் செய்ய யார்தான் உடன்படுவார்? அவ்வாறு உடன்படாதவர்களுள் உவில்லி யம் தேல் என்பவனே முதல்வன். அவனும் அவன் புத் திரனும் சந்தை வெளிவழியாய்ச் செல்லும்போது அத் தொப்பியைக் கண்டும் அதற்கு யாதொரு மரியாதையும் செய்யாது தம் வழியே சென்றனர். அதைக்கண்ட காவலா ளர் அவர்களைக் கொண்டுபோய் அதிபதி ஆகிய கொடுங்கோ லன் முன்னர் விடுத்தனர். தேல் என்பவன் வில்வித்தையில் வெகு நிபுணன். அதிபதியிடத்தில் அவனைக் கொண்டுபோ கும்போது அவனுடைய் கையில் அம்பும் வில்லும் இருந் தன. அதிபதி அவனை நோக்கி: 'நமது தொப்பிக்குத் தக்க படி மரியாதை செய்யாது சென்றவன் நீ தானு' என்றான். தேல்: 'ஐயா! உயிரற்ற தொப்பிக்கு மரியாதை செய்வது நமக்கு வழக்கமில்லை' என்றான். அதிபதி: 'நீ செய்தது பெருந் தப்பு; ஆயினும் நீ சிறந்த வில்வீரனுகையால் நான் சொல்லுகிறபிரகாரம் செய்வாயாயின் உன்னை விடு தலை செய்வேன்' என்றான். தெல்: 'என்ன செய்யவேண் டும்' என்றான். தேசாதிபதி ஒரு மரத்தை அவனுக்குக் காண்பித்து 'அதோ! அந்த மரத்தின்கீழ் உன் மகனை நிறுத்தி அவன் தலைமீது ஓர் அத்திப்பழத்தை வைப்பேன்; அதை உன் அம்பினல் குறி தவருமல் அடிப்பாயானல் நீ விடுதலையாவாய்; இல்லாவிட்டால் உடனே சிரச்சேதம் செய்யப்படுவாய்' என்றான். வில்வீரனுகிய தெல் அதற்கு உடன்பட்டான்.

கொடுங்கோலனாகிய அவ்வதிபதி சொன்னபிரகாரம் தெல்லுடைய குமாரனை மரத்தண்டை நிறுத்தி அவன் தலையில் ஒரு அத்திப்பழத்தை வைத்தான். தெல் அம்பை வில்லில் தொடுத்து மிகவும் ஜாக்கிரதையாகக் குறிபார்த்தான். அவன் கண்களில் நீர் தளம்பினது. ஆயினும் தைரியத்தைக் கைவிடாது அம்பை விடுத்தான். சரேலென்று வாயுவேகமாகச் சென்ற அம்பு பையனுக்கு யாதொரு கெடுதியும் செய்யாது பழத்தை மாத்திரம் சின்னபின்னப்படுத்திச் சென்றது. அதைக் கண்டோர் யாவரும் கைகொட்டிச் சந்தோஷித்து 'ஹாஹா! இவனே வில் வீரன்' என்று புகழ்ந்தார்கள். அதிபதியும் தெல்லிடஞ் சென்று அவன் திறமையை மெச்சினான்.

பிறகு அவனிடத்தில் பின்னுமொரு அம்பு இருக்கக் கண்டு 'இந்த அம்பை என்ன காரணத்திற்காக வைத்திருக்கின்றாய்' என்று கேட்டான். அதற்கு தெல், 'முன் விடுத்த அம்பு குறிதவறி என் மகனைக் கொல்லுமாயின் உடனே உன்னைக் கொல்லுவதற்கே இந்த அம்பை வைத்திருந்தேன்' என்றான். அதிபதி அவனுடைய தைரியத்தை மிகவும் புகழ்ந்து தகப்பனையும் மகனையும் சுகமாகப் போக விடுத்தான்.

## 9. ஆபிரிக்கா தேசத்துச் சிங்கம்

சிங்கம் ஆச்சரியகரமான வீரமும் பயங்கரமான ரூபமுமுடைய ஓர் ஜந்து. அது விசேஷமாய் ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள காடுகளில் சஞ்சரிக்கும். அரேபியாவில் மணல் செறிந்த வனங்களிலும், பாரசீக தேசத்திலும், வட இந்தியாவில் செடியடர்ந்த காடுகளிலும் சிங்கங்கள் சில காணப்படும்.



மிகப் பருத்த சிங்கம் தலைமுதல் வால் அடிவரையில் ஒன்பதடி நீளமும் நாலைந்தடி உயரமும் உள்ளது. அதன் வால் ஏறக்குறைய நாலடி நீளமுள்ளது. சிங்கம் பார்வைக்கு மிக்க மாட்சிமையுடையது. அதன் பருத்த தலையும் சடைத்துச் சுருண்டை மயிரும் வேண்டும்போது நிமிர்த்தக்கூடியதாயுள்ள பிடரிமயிரும் பெருத்த நெற்றிப்புருவமும் பந்துபோல் திரண்டத் தீக் கண்களும் பார்ப்பவர்களைத் திகிலுறச் செய்யும்.

ஆபிரிக்கா தேசத்துச் சிங்கமானது மற்ற தேசத்துச் சிங்கங்களைவிட மிகவும் மேலானது. ஆகையால் அத்தேசத்துச் சிங்கங்களின் தன்மையைச் சிறிது விசாரிப்போம்.

அமெரிக்கா தேசத்திலுள்ள ஐக்கிய மாகாணங்களின் அதிபதியாயிருந்த தியடோர். ரூஸ்வெல்ட் பிரபு வேட்டையாடுவதில் மகா சமர்த்தர். அவர் ஆபிரிக்கா தேசத்துச் சிங்கங்களைப்பற்றி அடியில் வருமாறு கூறுகின்றார்:—

சிங்கம் ஆபிரிக்காவில் மிகவும் சாதாரணமாகக் காணப்படுகின்றது. பெண் சிங்கம் மலைச்சாரலிலுள்ள குகைகளிலாவது, அடர்ந்த செடிகளுக்குள்ளாவது, உயர்ந்த புற்களினிடையிலாவது வாசஞ்செய்துகொண்டு அங்கேயே குட்டி

போடும். குட்டிபோடச் சிங்கத்திற்குக் கால நியமம் கிடையாது; வருஷத்தில் எந்தக் காலத்திலும் குட்டி போடும்.

போட்ட குட்டிகளை அவ்விடத்திலேயே விட்டுத் தாய்ச் சிங்கம் இரை தேடுவதற்காக நெடுநேரம் சுற்றித் திரியும், சில சமயங்களில் அது திரும்பிவர இரண்டு நாட் செல்லும்; ஆயினும் குட்டிகள் சந்தடி செய்யாது தாயின் வரவை எதிர்பார்த்திருக்கும்.

பிறந்து இரண்டு மூன்று மாதமானபின் குட்டிகள் தாயுடன் இரைதேடச் செல்லும். அப்பொழுது தாய்ச் சிங்கம் தான் கொன்ற மிருகத்தைக் குட்டிகள் இஷ்டப் படி தின்னப் பார்த்துச் சந்தோஷிக்கும், மீந்த பாகத் தைத் தான் தின்னும். பூனைக்குட்டிகளைப் போலவே சிங் கக் குட்டிகளும் ஊட்டுமறப்பதற்குமுன் மாமிசம் தின்ன ஆரம்பிக்கின்றன. மிகவும் இளம் பருவத்திலேயே அவை பட்சிகளையும் சிறு மிருகங்களையும் வேட்டையாடுகின்றன; பிறகு வளர வளர அவை தாய்ச்சிங்கத்தோடு கூடச்சென்று அதற்கு உதவி செய்யும்; அப்பால் அவை தாமே பெரிய விலங்குகளை வேட்டையாட எத்தனிக்கும்.

சிங்கத்தின் குடும்பவாழ்க்கை எப்பொழுதும் ஒரே மாதிரி யாக இருக்கிறதில்லை. சில சமயங்களில் வயதில் முதிர்ந்த ஆண் சிங்கம் தனியே வாசஞ்செய்யும். அடிக்கடி இரண்டு ஆண் சிங்கங்கள் ஒற்றுமையாக வாசஞ்செய்வதைக் காண லாம். சிற்சில சமயங்களில் ஒரு ஆண் சிங்கமும் இரண்டு மூன்று பெண் சிங்கங்களும் ஒன்றுகூடி வசிப்பதுமுண்டு. பெண் சிங்கமொன்று தனியாய் ஜீவிப்பதுமுண்டு. சில சமயங்களில் மூன்று நாலு ஆண் சிங்கங்களும் பல பெண் சிங்கங்களும் குட்டிகளும் ஒரு குடும்பமாக வசிக்கும். ஆனால் அப்படிப்பட்ட கூட்டுறவு நெடுநாள் நிலைநிற்பதில்லை.

சிங்கத்தின் கர்ச்சனை மிகவும் பயங்கரமானது. ஆண் சிங்கம் முன்னர் ஆரம்பிக்க மற்றவை முதலில் மெதுவாய்க் கர்ச்சித்துப் படிப்படியாய்க் கேட்போர் காதுகள் செவிடு படும்படி சத்தமிடும்; அப்பால் அவற்றின் தொனி படிப் படியாய்க் குறைந்து முடிவில் உறுமுவதுபோல் கேட்கும். சிங்கமானது தனக்கு இரையாகும் பிராணியைக் கொல்லும் வரையில் சாதாரணமாகக் கர்ச்சிப்பதில்லை; ஆனால் சில சமயங்களில் குறும்புத்தனத்தினாலாவது வேறு சிங்கங்களுக் குத் தன் வரவைத் தெரிவிக்கும்பொருட்டாவது அது வேட்டைக்குச் செல்லும்போது கர்ச்சிப்பதுண்டு. தான் வேட்டையாடும் பிராணிகளைப் பயமுறுத்தி அங்கிங்கு அசை யவொட்டாது செய்வதற்காகவும், வேறு சிங்கங்கள் பதி விருக்கு மிடத்திற்கு அவற்றைத் துரத்திவிடுவதற்காகவும் கர்ச்சிப்பதன்றி வேறொரு காரணத்தினாலும் அது வேட்டை யாடும்பொழுது கர்ச்சிப்பதில்லை. வேட்டையாடும் பிராணி களை எச்சரிக்கக்கூடிய எவ்விதமான சந்தடியையும் அது செய்யாது. குட்டிகளை இழந்துவிட்டாலும் தன் கூடவி ருந்த ஆண் சிங்கமானது கொல்லப்பட்டாலும் பெண் சிங்கம் மிக மூர்க்கமாகக் கர்ச்சிக்கும். தப்பியோட இடம் பெறாது ஒரு சிங்கமானது மடக்கப்படுமாயின் அது இடை விடாது உறுமி அடிக்கடி கர்ச்சித்து உக்கிரமாய்த் தன் சத்துருவை எதிர்க்கும்; சந்தடி கேட்டுப் பயந்தோடுமாயின் உறுமிக்கொண்டே விரைந்தோடி மறையும்.

சிங்கங்கள் பகற்காலத்தில் செடிகளடர்ந்த நடுக்காட்டில் தங்கா; அவை பெரும்பாலும் காட்டின் ஓரங்களிலேயே தங்கும். வெளியிடத்தை யடுத்திருக்கும் காடுகளும், நாணற் புல்லடர்ந்த இடங்களும் முட்செடிகளடர்ந்த காடுகளும் அவற்றிற்கு வெகு விருப்பமானவை. ஓங்கிவளர்ந்த புற் களின் நடுவிலும் சிங்கம் சில சமயங்களில் மறைந்து கிடக்

கும். சிலவேளை ஒரு மேட்டில் அல்லது ஒரு மாத்து நிழலில் அது படுத்திருக்கக் காணலாம்.

அதிகமாய் இம்சை செய்யப்பட்டாலன்றிச் சிங்கம் பகலி லும் நடமாடுவதுண்டு. மனிதரால் அதிக இடையூறு நேரிடும் பொழுது அது இரவில் மாத்திரம்தான் வெளியே நடமாடும். ஒருநாள் மத்தியான வேளையில் ஆண் சிங்கமொன்று தான் கொன்று தின்று மீதியாக வைத்திருந்த மாமிசத்தை மீண் டும் தின்னச் சென்றதைப் பார்த்ததாக ரூஸ்வெல்ட் பிரபு எழுதியிருக்கிறார். அப்படியே வேறு சமயங்களிலும் அவர் சிங்கங்களைப் பகலிற் சந்தித்திருக்கிறார். சிங்கத்தின் வாழ்க் கையை உற்று நோக்கும்போது கொள்ளையடிப்பதே அதின் நோக்கமாகக் காணப்படுகின்றது. யானை, காண்டாமிருகம் முதலியவை தவிர மற்ற மனவிலங்குகள் யாவும் சிங்கத் தைக் காணுமிடத்துத் திகிலடையும். திருட்டுத்தனம், விரை விற் பாய்ந்து விழுதல், உக்கிரம், தைரியம் முதலியவை அதன் விசேஷித்த குணங்களாம். அது, பெரும்பான்மை இரவிலும் சிறுபான்மை பகலிலும் வேட்டையர்டச் செல் லும்.

சிங்கம் வெளிறின கபில வர்ணமுடையதாதலால் பாய்வ தற்கு எத்தனித்து அது பதிவிருப்பது மற்ற மிருகங்களுக்கு எளிதில் தெரியாது. நீர்நிலைகளுக்குச் சமீபத்திலும் ஆற்றங் கரை யோரங்களிலும் அது மறைந்திருக்கும்போது காட்டு விலங்குகள் அச்சூதையறியாது தண்ணீர் பருகத் தாராள மாக வரும்; அப்பொழுது அது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவற்றைக் கொல்லும். இருட்டிலும் மழை காலத்திலும் சிங்கத்திற்குத் தீரமும் உக்கிரமும் அதிகம். ஆயினும் யானை காண்டாமிருகம் முதலிய பெரிய விலங்கு களை ஒரு சிங்கம் தனியாய்த் தாக்குகிறதில்லை; பல சிங்கங் கள் கூடித்தான் அவற்றையடிக்கும்.

நரபக்ஷணம் செய்யும் சிங்கங்கள் ஆபிரிக்காவில் விசேஷமாயுண்டு. இரண்டு சிங்கங்கள் புகைவண்டிப் பாதையில் வேலை செய்துகொண்டிருந்தவர்களை அடிக்கடி பக்ஷித்து வேலை நடவாதபடி தடைசெய்துகொண்டிருந்தன; கடைசியாய் அவை கொல்லப்பட்டன. வேறொரு சிங்கம் பல வேலைக்காரரைக் கொன்று தின்றபின் அவர்களுக்கு மேலதிகாரியாயிருந்த துரையையும் கொன்று தூக்கிக்கொண்டு போய்விட்டதாம். ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் சிங்கங்கள் கிராமவாசிகளை இராத்திரியில் தூக்கிக்கொண்டு போய்விடுகின்றன. இப்படியே சிங்கமானது ஆபிரிக்காவிலுள்ளவர்களுக்கு அபாயகாரியாயும், மிருகஜாதிகளுக்கு எமனுயும் இருக்கின்றது.

## 10. இனியவை கூறல்

யாவரிடத்திலும் இதமாய்ப் பேசுவதே தாய்தந்தையரிடத்திற் படிக்கவேண்டிய முதற் பாடமென்று ஓர் சிறந்த வித்துவான் கூறியிருக்கின்றார். நமது வாயினின்றும் புறப்படும் வார்த்தை ஒவ்வொன்றையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்தபின்னன்றி ஒருபோதும் வெளியிடலாகாது. அவ்வாறு புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் அன்போடு கலந்ததாயும் தனக்கும் பிறர்க்கும் கெடுதி விளைக்காததாயும் இருத்தல் வேண்டும்.

‘ இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது ’

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். இதமான வார்த்தைகளைப் பேசுவதால் நன்மையுண்டாகும்போது கொடிய வார்த்தைகளை

ஒருவன் பேசுவதற்குக் காரணம் யாது என்பது மேலே எடுத்தாளப்பட்ட செய்யுளின் கருத்து. அநேகர் இக்கருத்தை யோசியாது, எப்பொழுதும் கடுகடுப்பாகவே பேசுவார்கள். மனைவி மக்களிடத்திற் பேசும்போதும் கோபமாய் வெடுவெடுத்துப் பேசுவார்கள். அதனால் மனைவி மக்களும் அவர்களிடத்தில் பிரீதியாயிருப்பதில்லை.

'இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

என்று இத்தெய்வப்புலவர் இன்னோரிடத்திற் கூறுகின்றார். ஒருவன் இதமான வார்த்தைகளைப் பேசவேண்டுமானால் அவனிடத்தில் அத்தன்மையான வார்த்தைகள் இல்லையா? அவனுக்கு நல்ல வார்த்தைகளைப் பேசத் தெரியாதா? இனிய வார்த்தைகளிருந்தும் அவைகளை உபயோகியாது கொடிய வார்த்தைகளையே பேசுவது ஒரு மாத்திலே கனிகளிருந்தும் காய்களைப் பறிப்பதுபோலிருக்கும் என்பது இம்மேற்கோளின் அபிப்பிராயம். இதுவே உத்தம குணமுடையவர்களுடைய அபிப்பிராயமுமாம்.

இனிய வார்த்தைகளைப் பேசுதல் இலேசான காரியமல்ல. சிறுவயதுமுதல் பயின்று வந்தால்தான் அது வழக்கத்தில் வரும். நாம் மாணாக்கராயிருக்கும்போதே நம்முடனொத்த மாணாக்கரிடத்து அன்புடன் பேசப் பயிலல் வேண்டும். அவர்கள் குரூரமான வார்த்தைகளைச் சொன்னாலும் அவற்றை லக்ஷியம் செய்யாது என்றும் இதமான வார்த்தைகளையே பேசவேண்டும்.

கடுமையாகப் பேசுவோரிடத்தில் ஒருவரும் சேரமாட்டார்கள். எப்பொழுதும் கடுகடுத்துக் கோபமாகப் பேசும் ஒரு வர்த்தகன் இருக்கிறானென்று வைத்துக்கொள்வோம். அவனிடத்தில் கணக்கப்பிள்ளை, குமஸ்தா முதலியவர்கள் ஒருவரும் நிலைத்து வேலை செய்யமாட்டார்கள். ஒருகால் சில

காலம் வேலைசெய்தாலும் பிரீதியாக வேலைசெய்யவே மாட்டார்கள். வேறு வேலை சப்பாதித்துக்கொண்டு இக்கொடியனைவிட்டு எப்போது நீங்கப்போகிறோம் என்று எதிர்பார்த்த வண்ணமாயிருப்பார்கள். எசமானனுடைய பண்டம் பணம் முதலியவற்றில் அவர்களுக்குப் போதுமான அளவு கண்ணேணாக்கமிராது. அவன் பொருள் எப்படிப் போனாலும் போகட்டுமென்று சும்மா விருப்பார்கள்.

வீட்டு வேலைக்காரர் முதற்கொண்டு எவரும் அவனுக்குப் பிரீதியாய் வேலை செய்யமாட்டார்கள். மனைவி மக்களும் அவனிடத்தில் நெருங்க அஞ்சுவார்கள்; அவனுடைய நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது பாருங்கள்.

> ''இன்சொலாலன்றி யிருநீர் வியனுலகம்
> வன்சொலா லென்றும் மகிழாது.'

ஆகையால் நாம் நமது பேச்சினாலும் நடக்கையினாலும் மற்றையோரை வசீகரிக்கப் பிரயத்தனப்படவேண்டும்; ஒருவரையும் நோகச் சொல்லலாகாது. 'நொய்யவுரையேல்' என்னும் ஒளவையாருடைய அருமைத் திருமொழியை நாம் ஒருபோதும் மறவாதிருப்போமாக. அப்பொழுது தான் நாம் அனைவராலும் மதிக்கப்படுவோம். மாணாக்கரே, நீங்கள் நல்லவர்கள் என்னும் பெயர்பெற விரும்பினால் இது முதற்கொண்டே ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாய்ப் பேசப் பழகல் வேண்டும்.

## சௌக்கியமாக இருப்பதற்கு வழி

சௌக்கியம் சகல தனத்திலும் மேலானது. ஒருவனுக்கு எவ்வகையான செல்வமிருந்தும் சௌக்கியமொன்றில்லாவிட்டால் பிரயோஜனமில்லை. செல்வத்தை அனுபவிப்பதற்கு வேண்டிய தேக சௌக்கியமில்லாமையால்

அவன் எப்பொழுதும் துன்பமடைகின்றான். உலகத்தில் தோன்றும் நோய்களில் பெரும்பான்மையானவை சௌக்கியத்திற்குரிய சாதாரண விதிகளை அசட்டை செய்வதனால் உண்டாகின்றன. அதனால் பெரும்பான்மையோர் இக்காலத்தில் அகால மரணமடைகின்றனர். இவ்விந்துதேசத்தில் பிரதி தினமும் ஏறக்குறைய ஆயிரம் பேர் இலேசாய் தடுக்கத்தக்க வியாதிகளினால் இறக்கின்றனர். இந்துக்களில் அநேகர் சில வியாதிகள் தேவதைகளின் கோபத்தினால் உண்டாகின்றனவென்று எண்ணுகிறார்கள். சௌக்கியத்திற்குரிய வழிகளை முற்றிலும் அசட்டை செய்வதனாலும் அறியாமையினாலும் தங்களையும் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் எமனுக்கிரையாக்குகிறார்களென்பதை அவர்கள் உணருகிறதில்லை. ஆகையால் சௌக்கியமாயிருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் எப்பொழுதும் தேடவேண்டியவர்களாயிருக்கிறோம். அவை யாவையெனச் சிறிது விசாரிப்போம்:

பரிசுத்தமான காற்றைச் சுவாசிக்கவேண்டும். நாம் பல நாள் ஆகாரமின்றி ஜீவிக்கலாம்; காற்றில்லாவிடில் இரண்டொரு நிமிஷங்களுக்குள் இறந்துவிடுவோம். நாம் மூச்சுவிடும் ஒவ்வொரு முறையும் நமது ஜீவனுக்கு ஆதாரமாகிய பிராணவாயுவை உட்கொள்ளுகின்றோம். அது சுவாசப் பைகளின்வழியாய் உட்சென்று இரத்தக் குழாய்களுட் பிரவேசித்து இரத்தத்தைச் சுத்திசெய்து கரியமிலவாயு என்னுமோர் நச்சுக்காற்றாக வெளிப்படுகின்றது. அவ்வாறு வெளிப்படும்போது நாம் மறுபடியும் சுத்தமான காற்றை உட்கொள்ள வேண்டியிருக்கின்றது. நச்சுக்காற்றையே மறுபடியும் உட்கொள்வோமானால் மரணம் நேரிடும். ஏனெனில் நச்சுக்காற்று இரத்தத்தைச் சுத்திகரிக்க மாட்டாது. ஆகையால் சுத்தமான காற்று நமது சௌக்கியத்திற்கு மிக்க அவசியமானது.

நாம் ஜீவித்திருப்பதற்கு காற்று எப்படி அவசியமான தோ அப்படியே ஆகாரமும் அவசியமானது. ஆகாரத்தை நாம் உட்கொண்டவுடன் அதன் ஸத்தான பாகம் இரத்தமாக மாறி நமது தேகத்திற்குப் பலத்தையும் அனலையும் தரும். அஸத்தான பாகம் மலமாக மாறிச் சரீரத்தைவிட்டு வெளிப் படும். இனி, நாம் உட்கொள்ளும் ஆகாரம் சுத்தமானதாயும், ஆரோக்கியத்தை உண்டாக்கத்தக்கதாயும் இருக்கவேண்டும்; மேலும் தேகத்திற்கு புஷ்டியைத் தரக்கூடியதாயும் இருக்க வேண்டும். கோதுமை, மாமிசம், முட்டை, பால், நெய், பருப்பு முதலியவைகள் சிறந்த உணவுப் பொருள்கள்.

தித்திப்புப் பண்டங்கள் தேக சௌக்கியத்திற்கு ஏற் றவையல்ல. அவற்றை மிதமாகச் சாப்படுதல் வேண்டும். அழுகின பழங்களையும் நன்றாய்ப் பழுக்காத காய்களையும் புசிக்கக்கூடாது. பழைய உணவு சுகத்திற் கேற்றதல்ல. வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்கள் நடமாடும் காலங் களில் சாப்பாட்டைப்பற்றி எச்சரிக்கையா யிருக்கவேண்டும். குறித்த காலங்களில் மாத்திரம் உணவை உட்கொள்ள வேண்டுமேயன்றி அடிக்கடி போஜனம் செய்தல் கெடுதியை யுண்டாக்கும்.

சுத்தமான ஜலத்தை உபயோகிக்கவேண்டும். அசுத்த ஜலத்தைப் பருகுவதனால் அநேக வியாதிகள் உண்டாகின் றன. பானத்துக்குத் தண்ணீரெடுக்கிற குளங்களில் ஜனங் கள் ஸ்நானம் செய்து துணி முதலியவற்றைத் தோய்க்கிறார் கள். மாடு முதலியவற்றையும் அவற்றில் கழுவுகிறார்கள். வெயிற் காலத்தில் ஜலம் வற்றி மிகக் குறைந்திருக்கிற குட்டை குளங்களில் தண்ணீர் ஒருபோதும் எடுத்து உப யோகப்படுத்தக்கூடாது. தண்ணீரைக் காய்ச்சி வடிகட்டி உபயோகிப்பது மிகவும் உத்தமம். கிணற்று ஜலம் தாகத்

திற்கு மிக்க உசிதமானது. மழை நீரும் பானம்பண்ணத் தகுந்ததே.

நாடோறும் விடியற்காலத்தில் ஸ்நானம்செய்து தேகத்தைச் சுத்தியாய் வைத்துக்கொள்ளவேண்டும். நமது தேகத்தில் கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த துவாரங்களுண்டு. நாம் ஸ்நானஞ்செய்து தேகத்தைச் சுத்திசெய்யாவிட்டால் அந்தத் துவாரங்கள் அடைபட்டு வேர்வை வெளிப்படாது தடைபடும். அதனுல் சிரங்கு முதலிய உபாதிகள் உண்டாகும். ஆகையால் உடலும் உடையும் படுக்கையும் சுத்தமாயிருக்கவேண்டும். தேகசுத்தி தெய்வபக்திக்கடுத்ததென்பதை ஒருபோதும் மறக்கலாகாது.

தினந்தோறும் தவருமல் தேகாப்பியாசம் பண்ணிவரவேண்டும். இந்த விஷயத்தை இத்தேசத்து மாணுக்கர் பெரிதும் அசட்டை செய்கின்றனர். இடைவிடாது படிப்பதும் பரீட்சைகளிற் சித்திபெறுவதுமே போதுமானவையென்று நினைக்கிருர்கள். இது பெரிய தவறு. உடற்பயிற்சி செய்வதனுல் இரத்தமானது உடலின் உறுப்புக்களில் எங்கும் நன்ருய் ஓடிச் செறிந்து அவற்றைப் பலப்படுத்தும். மூளைக்கும் இரத்தம் அதிகமாய்ச் செல்லுவதனுல் அதுவும் மிக உழைப்பதற்கு உறுதிபெறும்.

போதுமான அளவு நித்திரை செய்யவேண்டும். சிலர் 'அனந்தலாடேல்' என்னும் அருமைச் சூத்திரத்தின் பொருளைச் சிறிதும் கவனியாது அதிகமாகத் தூங்கி எப்பொழுதும் சோம்பி வருந்துகிருர்கள். வேறு சிலர் 'சேமம்புகினும் சாமத்துறங்கு' என்னும் உபதேசத்தை உள்ளத்துக்கொள்ளாது இரவில் போதுமான அளவு உறங்காது கண்விழித்து அதிக வேலைசெய்து மூளைக்குக் கெடுதி விளைக்கின்றனர். இடைவிடாது வேலைசெய்துகொண்டிருக்கிற மூளை நித்திரையில்தான் இளைப்பாறுகின்றது. ஒய்ச்சல் ஒழிவு

இல்லாமல் வேலைசெய்தால் சரீர சௌக்கியத்தை இழக்க நேரிடும். ஆகையால் முன் மாலையில் ஒரு யாமம் கழித்துப் படுத்து பின் மாலையில் எழுந்திருக்கவேண்டும்; அப்படிச் செய்தால் சரீரம் சௌக்கியமாயிருக்கும். அதனல் தேக பலமும் அதுகாரணமாக சம்பத்தும் உண்டாகும். தேக சுகத்தை விரும்புவோன் மதுபானம் செய்யலாகாது. அது பாம்புக்கடிபோல் பிராணனுக்கு ஆபத்தை விளைக்கும். சாராயம் தேக சௌக்கியத்திற்கேற்றதல்ல; அதை ஒருபோதும் தொடலாகாது. சிநேகிதர் யாரேனும் மதியை மருட்டி மதுபானம் செய்ய அழைத்தாலும் அதற்கு இணங்கலாகாது; மேற்கூறியவற்றைக் கவனித்து நடப்பவர் தம்மை நோயணுகாது ஒருவாறு காத்துக்கொள்வர்.



## 12. கிளி

கிளி நாம் வீடுகளின் சமீபத்திலுள்ள தோப்புகளில், சாதாரணமாகக் காண்கின்ற ஓர் அழகான பட்சி. அது பெரும்பாலும் உஷ்ண தேசங்களில் வாசஞ்செய்யும். கிளி

களிற் பல வகைகளுண்டு. அவை நிறம், வடிவு, அளவு, தொனி முதலியவற்றில் வேறுபடுகின்றமையால் பலவகை யாகத் தோன்றுகின்றன.



கிளியின் தலை உருண்டையானது. அதன் கண்கள் மிகச் சிறியவை. அவற்றினுதவியினால் அது மிகக் கூர்மையாகப் பார்க்கும். கிளியின் மூக்கு மிக்க உறுதியானது. அம்மூக்கின் மேற்புறம் வளைந்து நுனியிற் கூர்மையாயிருக்கும். கீழ்ப்புறம் மேற்புறத்தைவிடக் குறுகியிருக்கும்.

கிளியின் கால்களில் நான்கு விரல்களுண்டு. அவை கைவிரல்களைப்போல் எந்த வஸ்துவையும் பிடிக்கத்தக்கன. ஆகையால்தான் கிளிகள் மரக்கிளைகளில் உட்கார்ந்து பழங்களைப் பறித்துக் கால்விரல்களினால் பிடித்து மூக்கினால் கொத்தித் தின்னக்கூடியவையாக இருக்கின்றன.

கிளிகளும் மற்றப் பறவைகளைப்போல் தரையில் விசேஷமாய் நடக்கிறதில்லை. அவை கால், மூக்கு இவற்றின் உதவியைக்கொண்டு ஒருவிதமாய் நகர்ந்து செல்லும்.

கிளிகள் முக்கியமாகப் பழங்களைத் தின்று ஜீவிக்கும். வீடுகளில் வளர்க்கும் கிளிகள் மனிதர் உண்ணும் பண்டங்களை எல்லாம் உண்ணும். சில கிளிகள் மாமிசமும் புசிப்பதுண்டு. அடிக்கடி தண்ணீரில் முழுகுவதும் அந்நீரைக் குடிப்பதும் அவற்றிற்கு வெகு விருப்பமானவை. உஷ்ண

காலங்களில் அவை உஷ்ணத்தைத் தணிக்கும்பொருட்டுக் கூட்டம் கூட்டமாகச் சென்று நீர் நிலைகளில் மூழ்கி விளையாடும்.

கிளிகள் ஒன்றுகூடிச் சஞ்சரிக்கும் சுபாவமுடையவை. அவைகளிற் பல ஒன்றுகூடிப் பறப்பதையும் மரக் கிளைகளிலுட்கார்ந்து கொஞ்சிக் கூவிக்கொண்டிருப்பதையும் நாம் அடிக்கடி காணலாம். ஏதாவது அரவம் கேட்டவுடன் ஒரு கிளி பறக்குமாயின் அனைத்து மொருங்கே பறந்துசெல்லும்.

பெண்கிளிகள் மற்றப் பறவைகளைப்போலவே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். பெரிய மரத்தின் பொந்துகளிலாவது பாறைகளின் வெடிப்பிலாவது அவை முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும்போது அவற்றிற்குச் சிறகுகளிரா. பிறகு நாளுக்கு நாள் அவை வளர்ந்து பூர்ணமாவதற்கு ஏறக்குறைய மூன்றுமாதம் செல்லும். கிளிகளின் சிறகு மிக்க மினுமினுப்பாயும் அழகாயுமிருக்கும்.

மனிதர் பேசுவதுபோலக் கிளிகளுக்கும் பேசக் கற்றுக் கொடுக்கலாம். அவைகள் பேசுவதைக் கேட்பது மிகவும் ஆனந்தமாயிருக்கும். அவை மனிதர் சொன்னதைத் திருப்பிச் சொல்லுமேயன்றித் தாமாய் ஒன்றும் சொல்லத் திறமுடையனவல்ல. அதுபற்றியே 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்று ஓர் பழமொழியும் வழங்கிவருகின்றது.

கிளிகள் நெடுங்காலம் ஜீவித்திருக்கும். சில கிளிகள் சற்றேறக்குறைய நூறுண்டு ஜீவித்திருந்ததாகத் தெரியவருகின்றது. கிளிகள் வேடிக்கையான பலவகை யாட்டங்களை ஆடக் கற்றுக்கொள்ளும். சில கிளிகள் மிருகங்கள் சத்தமிடுவதுபோலவும், பறவைகள் பாடுவதுபோலவும், அடிக்கடி மாறுபட்ட குரல் காட்டும்.

ஒரு துரைசானி ஒரு கிளியைக் குழந்தைபோல் மிக்க அருமை பெருமையாய் வளர்த்து வந்தாள். அக்கிளியோ வெகு சாமர்த்தியமுடையது. சமயம் நேரும்போதெல்லாம் அவள் அக்கிளிக்குப் பேச்சுக் கற்றுக்கொடுப்பாள். கிளியும் தன் சாமர்த்தியத்தால் குழந்தைபோல் அழவும், சிரிக்கவும், நாய்போல் குரைக்கவும், பூனைபோல் சீறவும், மனிதன் போல் தெளிவாய்ப் பேசவும் கற்றுக்கொண்டது.

ஒருநாள் துரைசானி அக்குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தூங்குவித்து சமையலறையில் வேலை செய்துகொண்டிருந்தாள். அச்சமயத்தில், மாணிடக்குழந்தை வீரிட்டழுவது போல அக்கிளி அழுதது. துரைசானி தன் பிள்ளையாகிய கிள்ளைக்கு ஏதோ அபாயம் நேர்ந்ததென்று கதறிக்கொண்டு ஓடிவந்தாள். அதைக்கண்ட கிளி பரிகாசம் செய்து சிரித்தது. துரைசானி கிளி தன்னை ஏமாற்றியதென்று கண்டு பழையபடியே தன் வேலைக்குச் சென்றாள்.

கிளிகள் மிகவும் அழகான பறவைகள். அவை பல வர்ணமுடையவை. சில வெளுப்பாயும், சில சிவப்பாயும், சில பச்சையாயும் இருக்கும். ஒரே கிளியில் ஐந்து வர்ணம் பொருந்தியிருப்பதுமுண்டு. அவ்வகைக் கிளிகளுக்குப் பஞ்சவர்ணக் கிளிகளென்று பெயர். அவை அகப்படுவது வெகு அருமை. அகப்பட்டாலும் விலையேறப்பெற்றவை. ராஜ ஸ்திரீகளும் தனவான்கள் வீட்டுப் பெண்மணிகளுமே அவற்றை வளர்ப்பார்கள். கிளிகளிடத்தில் நாம் மிகவும் அன்பாயிருத்தல் வேண்டும்.



## 13. அணில்

அணில் மிருக ஜாதியில் ஓர் வகையானது. அது தீங்கற்றதும் அழகுடையதுமான பிராணி. சுறுசுறுப்பு அதன் விசேஷ லக்ஷணம். அதன் தலை வீட்டெலிகளின் தலை போன்றிருக்கும். அதற்கு முதுகில் மூன்று வரிகளுண்டு. அணிலுக்கு அழகைத் தருவது அவ்வரிகளே.

அணிலுக்கு நீண்டு சடைத்த வாலுண்டு. அதனுதவியைக்கொண்டு அது ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மிகவும் சுலபமாய்த் தாண்டும். மரங்களிலும் கிளைகளிலும் அது வெகு விரைவா யோடும்போது தன் சமநிலையைக் காப்பதற்கு அதன் வால் மிக்க உதவியாயிருக்கின்றது. அப்படியில்லாவிடில் அது கீழே விழுந்துவிட நேரும். அணிலின் நான்கு கால்களிலும் உறுதியான கூறிய சிறிய நகங்களுண்டு. கிளைகளில் உட்காரும்போது அது அந்நகங்களால் கிளைகளை நன்றாய்ப் பிடித்துக்கொள்ளும். சில சமயங்களில் மரக்கிளையிலிருக்கும்போது அணில்

இறக்க நேரிட்டாலும் தான் பிடித்த பிடியை இலேசாய் விடுகிறதில்லை.

அணிலின் காதுகள் வட்டமானவை. சிறிது அரவங் கேட்பினும் அது தன் காதுகளை நிமிர்த்தி மிக்க குறிப்பாய் கவனிக்கும். பருந்தாவது, பூனையாவது, வேறெந்தச் சத்துருவாவது கண்ணுக்குத் தென்பட்டால் உடனே கீச்சிட்டுக்கொண்டு ஓடும்.

அணிலின் முன்வாயில் இரண்டு நீண்ட கூறிய பற்களுண்டு. அவற்றினால் அது பழங்களை அரித்துத் தின்னும். காய், கனி, கொட்டை முதலியவைகளே அணிலுக்குப் பிரியமான உணவு. நுங்கும் இளநீரும் அதற்கு வெகு பிரியமானவை. அதன் முன்கால் இரண்டும் கைபோலுபயோகப்படுகின்றன. ஏதாவது ஒரு பழமேனும் கொட்டையேனும் அகப்பட்டால் அது மரக்கிளையிற் குந்தி முன்கால் இரண்டினாலும் அதைப் பிடித்துப் பக்குவமாகக் கொந்தித் தின்னும். அணிலொன்று அவ்வாறு உட்கார்ந்து தின்பதைப் படத்திலே பார்க்கலாம்.

நாம் இதுவரையில் வீடுகளிலும் தோட்டங்களிலும் சாதாரணமாய் காணப்படும் அணிலைப்பற்றிப் பேசினோம். இவ்வணிலுக்கு நரையணில் என்று பெயர். இன்னும் வேறு விதமான அணில்களுமுண்டு. மரமடர்ந்த பெரிய காடுகளில் வசிக்கும் ஒருவகை அணிலுக்குப் பாயும் அணில் என்று பெயர். சிலர் அதைப் பறக்கும் அணில் என்றும் சொல்லுவார்கள். அவ்வணிலின் முன்கால் பின்கால்களுக்கிடையில் ஒரு தடிப்பான தோலுண்டு. அத்தோல் அது வேண்டும்போது விரிக்கவும் சுருக்கவும் கூடியதாயிருக்கின்றது. அத்தோலின் உதவியால் அவ்வணில் ஒரு மரத்திலிருந்து தூரத்திலுள்ள மற்றொரு மரத்திற்குப் பாயும். சில வணில்கள் ஏறக்குறைய நாற்பதடி தூரம் தாண்டும்.

அவ்வணில் பகலெல்லாம் உறங்கி இராவில் இரைதேடப் புறப்படுமாம்.

பிறிதோர் வகையான அணிலும் காட்டில் காணப்படும். அதற்குச் செவ்வணில் என்று பெயர். அது ஏறக்குறைய ஒரு பூனையளவிருக்கும்.

அணில் வீடுகளிலும் தோட்டங்களிலும தோப்புகளிலும் காடுகளிலும் சாதாரணமாய்ச் சஞ்சரிக்கும். நரையணில் வீடுகளில் கூடு கட்டிக்கொள்வதைக் காணலாம்.

அணில் தன் குட்டிகளுக்கு வெகு ஜாக்கிரதையாகப் பால் கொடுத்து வளர்க்கும். யாரேனும் குட்டிகளின் அருகில் சென்றால் அது காது செவிடுபடும்படி கூச்சலிட்டு அவரைப் போகவொட்டாது தடுக்க முயலும். சிலவேளை தன் கூரிய பற்களால் கடிப்பதுமுண்டு.

சிலர் அணிலின் மாமிசத்தை ஆவலோடு புசிப்பார்கள். அதற்காக, பலர் கூடி நாய்களையும் கொண்டு அதை வேட்டையாடச் செல்வார்கள். அணிலினிறைச்சி சிற்சில வியாதிகளுக்குச் சிறந்த ஔஷதமென்று இந்நாட்டு வைத்தியருள் சிலர் கூறுவர். தென்னிந்தியாவில் அணிலைப் புசிப்பவர் மிகச் சிலர். ஆகையால் அதை ஒருவரும் கொல்லுவதில்லை.

நரையணில் ஒவ்வொரு தோட்டத்திலும் மிகுதியாகக் காணப்படும். மனிதர் இரையிட்டு வழக்கம் பண்ணினால் அது பயம் தீர்ந்து அவர்களிடத்து விளையாடுங் குணமுடையது. ஆனால் யாராவது அதை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தொந்தரவுசெய்தால் உடனே தன் கூரிய பற்களாற் கடிக்கும்.



## 14. ஆக்ரா நகரம்

ஆக்ரா நகரம் இந்தியா தேசத்திலுள்ள சிறந்த புராதன நகரங்களிலொன்று. அது யமுனா நதியின் மேற்குக்கரையில் மிக்க விநோதமாகக் கட்டப்பட்டுள்ளது. அங்கிருந்து அலகபாத்து நகருக்கு புகைவண்டி வழியாகப் போகவேண்டுமானால் சற்றேறக்குறைய இருநூற்று எழுபத்தொன்பது மைல் செல்லவேண்டும். வளைந்து செல்லும் அந்நதியின் வழியாகப் போகவேண்டுமானால் பின்னும் வெகு தூரம் பிரயாணம் செய்யவேண்டும்.

ஆக்ரா நகர் ஐக்கிய மாகாணம் என்று சொல்லப்படுகிற ஒரு பிரிவில் கட்டப்பட்டிருக்கிறது. அப்பிரிவு இந்தியாவின் பற்பல பிரிவுகளில் ஒன்று. யமுனாநதி ஐக்கிய மாகாணத்தூடு சென்று கங்காநதியோடு கலக்கின்றது. வடக்குத் தெற்காக வோடும் அந்நதி சிறிதுதூரம் சென்ற

பின் சற்றுக் கிழக்கே திரும்புகின்றது. அப்படித் திரும்பு மிடத்திலேதான் ஆக்ரா நகர் நிலைபெற்றுத் தன் பண்டைச் சிறப்போடு விளங்குகின்றது. அதன் ஜனத்தொகை ஒரு லக்ஷத்து எண்பத்தெண்ணாயிரமென்று கணக்கிடப்பட்டுள் ளது. ஆகவே அலகபாத்து நகரின் ஜனத்தொகையிலும் அதிகமென்று தெரிகிறது.

இந்துதேச சரித்திரத்தில் மிக்க கீர்த்திபெற்று விளங் கும் அக்பர் சக்கரவர்த்தி காலத்திற்கு முன் லோடி வம்ச அரசர் ஆக்ராவில் வசித்தனர். அக்காலத்தில் ஆக்ரா யமுனு நதியின் கிழக்குக் கரையோரமாகக் கட்டப்பட்டிருந்தது. பேபர் சக்கரவர்த்தியும் 1526-ம் வூ ஜயமடைந்தபின் ஆக்ராவிலேயே வசித்து அங்கேயே இறந்தனர். அவரு டைய சரீரத்தைக் காபூல் நகருக்குக் கொண்டுபோய் அடக் கஞ் செய்தனர்.

பேபருடைய புத்திரனுகிய ஹுமாயூன் என்பவன் டில்லியை ராஜதானியாக்கிக்கொண்டான். அவனுடைய புத்திரனுகிய அக்பர் தற்காலத்தில் புகழ்பெற்று விளங்கும் ஆக்ரா நகரை யமுனு நதியின் மேற்குக் கரையோரமாகக் கட்டி அங்கு தன் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தான். அதன்பின் அவன் அங்கு பற்பல சிங்காரமான அரண்மனைகளைக் கட்ட வாரம்பித்தான். ஆக்ரா கோட்டை அவனுற் கட்டப்பட்டது. அஃது சந்தனக் கற்களால் வெகு விசித்திரமாக வமைக்கப் பட்டிருக்கின்றது. அதன் சுவர்களோ நாற்பதடி உயரமுள் ளவை. அக்கோட்டைக்குள் ஒரு மகமதிய அரசனுக்கு வேண்டிய மாடமாளிகைகளும் சிங்கார வனங்களும் சித்திர மேடைகளும் வெகு அழகாய் அமைக்கப்பட்டுள்ளன. கொலுமண்டபம், சபாமண்டபம் முதலிய ராஜமண்டபங் களும் அங்கு காணப்படும். அவற்றிலுள்ள அறைகளும் கூடங்களும் சலவைக் கற்களால் சமைக்கப்பட்டவை.



சிற்றுளி வேலைசெய்த மிக வழகிய சிறு தூண் பத்திகள் தாங்கி நிற்கும் விசித்திர மாடங்களும், மெத்தை முகப்புகளும் அங்குச் சிறந்து விளங்கும். அங்குக் கண்ணாடி அரண்மனையென்று பெயர்பெற்று ஆயிரக்கணக்கான கண்ணாடிகளால் விளங்கும் ஓர் மஞ்சனசாலையுமுண்டு.

மூத்திமஸ்ஜித் என்ற பேர்பெற்ற பிறிதோர் கட்டடமும் அங்குண்டு. அது ஷாஜஹான் என்னும் மகமதிய சக்கரவர்த்தியார் கட்டியது. மணற்கல் என்னும் ஓர்வகை வெண்கல்லினாலாக்கப்பட்ட உயர்ந்த மேடையின்மீது அதியுன்னதமாகக் கட்டப்பட்ட அந்த மஸ்ஜித் சலவைக்கற்களாற் சமைத்த மூன்று சிறந்த வில்மச்சு மண்டபங்களையும்

பொன்மயமாக விளங்கும் ஸ்தூபிகளையுமுடையதாய்க் கம்பீரமாகக் காணப்படுகின்றது.

ஷாஜஹான் தனது அரிய மனைவியின் ஞாபகத்தை நிலைநிறுத்தும்பொருட்டுக் கட்டிய மற்றோர் கட்டடமும் அங்குக் காணலாம். அதற்கு டாஜ் மஹால் என்று பெயர். அதன் அழகை உள்ளபடி எடுத்துக் கூறுவது யார்க்குமரிது. யமுனா நதிக்கரையில் அவளை அடக்கம் பண்ணினவிடத்தில் கட்டியிருக்கும் அந்தக் கோரிபோல் இவ்வுலகில் வேறெங்கும் காணக் கிடையாது. அது ஓர் சிங்காரமான தோட்டத்தின் மத்தியில் இருக்கின்றது. அத்தோட்டத்தில் ஆகாயத்தை யளாவிய விருக்ஷங்களும், கமகமவென்று பரிமளம் வீசுகின்ற செழிப்பான பூஞ்செடிகளும், சலவைக் கற்களால் சமைத்த வாவிகளும் பல வுண்டு.

கைதேர்ந்த இருபதினாயிரம் வேலைக்காரர் அவ்வழகிய கட்டடத்தை ஏறக்குறைய இருபத்திரண்டு வருஷகாலங் கட்டி முடித்தனர். அக்கோரிக்குச் செலவான ரூபாய் ஒரு கோடி. இத்தாலி தேசத்துச் சிறந்த சிற்பிகளே அதைக் கட்டிப் புகழ்பெற்றனர். அதற்கு வேண்டிய நவமணிகள் இலங்கை, கோல்க்கொண்டா, காபூல் முதலிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன.

மொகலாய ராஜ்ஜியத்தின் பெருமைக்கு அடையாளமாக நின்று விளங்கும் டாஜ் மஹாலில் வெகு நுட்பமான வேலைப்பாடுகளைக் காணலாம். நேற்றுத்தான் சித்திரித்தது போலப் புதிதாகத் தோன்றும் சலவைக்கற்சுவர்களும், பளபளவென்று பிரகாசிக்கும் மணிக்கற்களும், ஜகஜ்ஜோதியாக விளங்குகின்ற விமானமும், வில்வளைவா யமைந்த தோரண வாயில்களும், அவற்றினிடையே வெண்டாமரை மலர்போல் வெண்கற் குஞ்சங்கள் அணியணியாகத் தொங்கும் சிறப்பும் இன்றும் விசித்திரமாக விளங்குகின்றன.

தேசசஞ்சாரம் செய்யும் கண்டாந்தர வாசிகளும் அதனைக் கண்டு களியாது ஒழியார். இவ்வழகிய மண்டபத்தை நன்னிலையில் வைத்து அழியாது பாதுகாப்பது ராஜாங்கத்தார் கடனாகும். இவ்வகைக் கட்டடங்களாற் சிறப்புற்று விளங்கும் ஆக்ரா நகரம் பல புகைத்தேர் வீதிகளோடு சம்பந்தமுடையதா யிருக்கின்றது. பல்வகைத் தானியங்களும் அங்கே ஏராளமாக வரும். சலவைக் கல்லில் செய்த நுண்ணிய சிற்றுளி வேலைக்கு ஆக்ரா பேர்போனது.

## 15. தெய்வபக்தியுள்ள சிறுவன்

அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய வர்த்தகசாலையில் ஒரு வேலை காலியாயிருந்தது. அந்த வேலை வெகு உத்தரவாதமானது. அந்த வேலையைச் செய்வோன் யோக்கியனாக விருக்கவேண்டுமென்பது அவ்வர்த்தகசாலைத் தலைவருடைய அபிப்பிராயம். ஆகையால் அவர் ஓர் சிறந்த கிறிஸ்தவ வாலிபனைத் தேடி அவ்வுத்தியோகத்தில் வைக்கவேண்டுமென்று கருதியிருந்தார். அவ்வபிப்பிராயத்துடன் அவர் தக்க யோக்கியதையுடைய வாலிபனொருவன் தமது உத்தியோகசாலைக்கு வேண்டுமென்று பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தார்.

எங்கே வேலை காலியாயிருக்குமென்று அநேகர் பத்திரிகைகளைப் பார்ப்பதுமுண்டு. அவ்வண்ணமே பத்திரிகைகளைப் பார்த்த அநேகர் இந்த வேலைக்காக விண்ணப்ப பத்திரம் அனுப்பினார்கள். அவர்களுள் போதுமானவளவு கல்வி கற்று நற்குண நற்செய்கைக ளமைந்த ஒரு கிறிஸ்தவ வாலிபனிருந்தான். அவனுக்குச் சிறு வயதிலேயே தந்தை இறந்துவிட அவன் தாய் சில பிரபுக்களிடத்தில் யாசகம் செய்து அவனுக்குக் கல்வி பயிற்றுவித்தாள். அவன் வெகு



அடக்கமுடையவன். சிறு பருவமுதல் கிறிஸ்துவையே தன்னுடைய ஆசாரியனாகக்கொண்டு அவருடைய சித்தாந்தப்படி நடந்தவன். அன்பே உருவாய் அமைந்த புத்திர சிகாமணி அவன்.

விண்ணப்ப பத்திரங்கள் யாவும் உத்தியோகசாலைத் தலைவரிடத்தில் சேர்ந்தன. அவற்றை அவர் ஒன்றொன்றாய்ப் பார்வையிட்டபின் மூன்று பத்திரங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிட்டார். அம் மூன்று பத்திரங்களுள் மேற்கூறிய வாலிபனது ஒன்று. தள்ளிவிட்ட விண்ணப்ப பத்திரங்களை அனுப்பின ஒவ்வொருவனும் தன் தன் திறமையை அளவுக்கு மிஞ்சப் புகழ்ந்து, எந்த வேலையைக் கொடுத்தாலும் செய்வதாகவும், அதிக கல்வி கற்றிருப்பதாகவும், உத்தியோக அனுபவம் அதிகமாகவுண்டென்றும் பல வீண் வார்த்தைகளை விண்ணப்ப பத்திரத்தில் வரைந்தனுப்பினான். இக்கிறிஸ்தவ வாலிபனோ, வேலையொன்று காலியாக விருப்பதாகப் பத்தி

175043

ரிகை மூலமாகத் தெரிந்துகொண்டதாகவும், அவ்வேலை தனக்குக் கிடைக்கும் பட்சத்தில் தன்னுடைய கடமையைத் திறமையோடு செலுத்த மனப்பூர்வமாகப் பாடுபடுவதாகவும் தேவனுக்குச் சித்தமானல் அகத்தியம் முடியுமென்றும், தன்னுடைய விண்ணப்ப பத்திரத்தை உத்தியோகசாலைத் தலைவருக்கன்றி, தேவனுக்கே தத்தம் செய்திருப்பதாகவும் விண்ணப்ப பத்திரத்தில் எழுதி அனுப்பியிருந்தான்.

தலைவர் தாம் தெரிந்தெடுத்த மூன்று பத்திரங்களையும் தமது மேசையின்மேல் வைத்துக்கொண்டு அவற்றை அனுப்பினவர்களுக்குக் கடிதமனுப்பி அவர்களை வரவழைத்தார். மூன்றுபேரும் உத்தியோகசாலைக்கு வந்தார்கள். முதலிரண்டு பத்திரங்களைப் படித்து அவற்றை அனுப்பின வாலிபரை வெளியே நிறுத்தியபின் மூன்றாவதாக கிறிஸ்தவ வாலிபனை யழைத்தார். அவன் உள்ளே நுழைந்தவுடன் தன் தொப்பியைக் கழற்றித் தலைவருக்கு மரியாதை செய்தான். பிறகு தலைவர் அவனை நோக்கிச் சிறிது கோபக்குறியுடன், 'உத்தியோகம் வேண்டியவர்கள் எனக்கு விண்ணப்ப பத்திரம் அனுப்பவேண்டுமென்று விளம்பரம் செய்தேன், நீயோ எனக்கு விண்ணப்ப பத்திரம் அனுப்பவில்லை, இதோ! உன் பத்திரம்; எடுத்துக்கொண்டு வெளியே போ' என்று பத்திரத்தை எறிந்தார். வாலிபன் பிரமித்து, 'ஐயா, தங்களுக்குத்தான் விலாசமிட்டு அனுப்பினேன், பாரும்' என்று பத்திரத்தை எடுத்து மீண்டும் நீட்டினன். தலைவர், 'அப்படியல்ல, நீ உன் பத்திரத்தை எனக்கன்றி தேவனுக்குத் தத்தம் செய்திருப்பதாக எழுதியிருக்கிறாய்' என்றார். வாலிபன் புன்னகையோடு, 'மெய்தான் எல்லாம் வல்ல தேவனல்லது ஜகமேயில்லை. "அவரன்றி ஓரணுவும் அசையாது." இப்பெரிய வர்த்தகசாலையின் தலை

வாயிருக்கும் தங்களுக்கும் ஏழையும் திக்கற்றவனுமாக உத்தியோகந் தேடித் தங்களையடைந்த எனக்கும் அன்றன்றைக்கும் வேண்டிய அப்பத்தை அவரே அளிக்கிறார். ஆகையால் எனது விண்ணப்ப பத்திரத்தை அவருக்குச் சமர்ப்பித்தது தப்பிதமாகுமா? இப்பொழுதும் நான் பிரதிதினமும் அவருக்கே என்னுடைய விண்ணப்பத்தை அனுப்பிக்கொண்டிருக்கின்றேன்' என்றனன்.

உத்தியோகசாலைத் தலைவர் அதுகேட்டு வியப்படைந்து ஒன்றும் பேசாது சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர். அவரோ மிகுந்த பக்திமான்; ஜீவகோடிகளிடத்து மெய்யன்புடையவர். ஆயினும் வாலிபனைப் பின்னும் பரீட்சிக்க வெண்ணி, 'சிநேகிதனே, தேவனுக்கு உன் விண்ணப்ப பத்திரத்தை நீ அனுப்பியிருக்கிறபடியால் அவரே உனக்கு வேலை கொடுக்கட்டும்; என்னிடத்தில் வேலை யொன்று மில்லை; இதோ உன் பத்திரத்தை எடுத்துக்கொண்டு உன் வீட்டிற்குப் போ' என்று சொல்லிப் பத்திரத்தை எடுத்துக் கொடுத்தார். வாலிபன் அதை வாங்கிக்கொண்டு, 'கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக' என்று கூறி வீட்டிற்குத் திரும்பினன்.

உடனே தலைவர் அவனை அழைத்து, 'உத்தமனே, நான் உன் பக்தி நிலையை இப்பொழுதுதான் உள்ளவாறு அறிந்துகொண்டேன். காலியாயிருக்கும் உத்தியோகத்திற்கு நீயே தகுந்தவன். அதோ அங்கிருக்கும் ஆசனத்தில் உட்கார்ந்து இன்று முதல் என்னுடைய அந்தரங்க காரியதரிசியாக உன் கடமையைச் செலுத்திவா' என்றார்.

வாலிபன் அப்படியே தனக்குக் கொடுத்த வேலையை மிக ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தான். தன் வேலையிற் கண்ணும் கருத்துமாக விருந்து மிக்க திறமையைக் காட்டவே தலைவர் அவ்வாலிபனுக்குத் தாம் கொடுக்கும்

சம்பளத்தோடு வர்த்தகத்திலும் ஒரு பங்கு வைத்தார், வர்த்தகம் விருத்தியடைய அவ்வாலிபனும் பெரிய தனவானுனன். வர்த்தகசாலைத் தலைவர் அவனுடைய தெய்வபக்தியையும் அது காரணமாக அவனிடத்திற் காணப்பட்ட நற்குண நற்செய்கையையும் கண்டு அவனுக்கு ஏகபுத்திரியாகிய தன் குமாரத்தியை விவாகஞ் செய்து கொடுத்தார். பிறகு அவர் இறந்தபின் அவ்வாலிபனே அவருடைய வர்த்தகசாலைக்கும் சொத்துகளுக்கும் சொந்தக்காரனுனன்.

## 16. இரைகுருவி

இரைகுருவியென்னும் இந்த அற்புதமான பறவை அமெரிக்காவிலேதான் காணப்படுகின்றது. அது ஒரு புஷ்பத்திலிருந்து மற்றொரு புஷ்பத்திற்குப் பறந்து செல்லும்போது தேன் வண்டுகள் இரைவதுபோல ஒரு விதமாக இரைவதனல் அதற்கு இரைகுருவி யென்று பெயர். அதன் நிறம் இன்னதுதானென்று சொல்லுதல் கூடாது. இக்குருவிகள் வெயிலெரிக்கும் நேரத்தில் அதிவேகமாய்ப் பறக்கும்போது ஒருகால் மாணிக்க வர்ணமுடையனவாகவும் மற்றொருகால் மரகத வர்ணமுடையனவாகவும் பிறிதொருகால் பொன்னிறமுடையனவாகவும் இப்படிப் பலவர்ணமுடையனவாகத் தோன்றும். சூரியனுடைய காந்தி அவற்றின் இறகுகளிற் படுவதற்குத் தக்கதாக நிறம் மாறித்தோன்றும். சாதாரணமான இரைகுருவி ஏறக்குறைய ஒரு வண்டளவிருக்கும். அதன் கால்கள் மிகவும் நுண்ணியவை. மூக்கு மெல்லியதாயும் நீண்டதாயுமிருக்கும். அப்படி இருப்பது புஷ்பத்தின் மத்தியில் மூக்கைச் செலுத்தி அதிலுள்ள தேனை உறிஞ்சுவதற்கு அனுகூலமாயிருக்கின்றது. அதன்



நாக்கு மிக நீண்டது. அதை இக்குருவி தன் வாய்க்குள் மடித்து வைத்திருந்து வேண்டும்போது நீட்டிக்கொள்ளும்.

இக்குருவியின் இறகுகள் அதிகப் பிரகாசமானவை. தனக்கிஷ்டமானபோது தனது நீண்டு கறுத்த மெல்லிய அலகினால் அவற்றைக் கோதி, ஒழுங்காக்கி சுத்தம் செய்யும். இறகுகள் தூக்கிக்கொண்டு ஒழுங்கீனமாயிருப்பது அதற்கு மிகவும் வெறுப்பு. ஆகையால் பிரதிதினமும் அது இரண்டு மூன்று முறை தன் சிறகுகளைச் சுத்தஞ்செய்து ஒழுங்கு படுத்தும்.

இந்தப் பட்சி சாதாரணமாய் எங்கும் உட்காராது, எப்பொழுதும் இரைதேடிப் பறந்துகொண்டே யிருக்கும். புஷ்பத்திலிருக்கிற தேனும் சிறு பூச்சி புழுக்களுமே அதற்கு விசேஷித்த ஆகாரம். புஷ்பத்தின் சமீபத்தில் சென்றவுடன் அது தன் நுண்ணிய இரண்டு சிறகுகளை யும் அதிவேகமாய் அசைத்துக்கொண்டு அந்தரத்தில் அசைவற நிற்பது வெகு விநோதமாகத் தோன்றும். சிறகை யடித்துக்கொண்டிருப்பது கண்ணுக்குப் புலப்படாமையால் அப்பட்சி ஒரு நுண்ணிய கயிற்றினாற் கட்டித் தொங்க விட்டதுபோலிருக்கும்.



இக்குருவியின் நாவின் உட்புறம் பிசுபிசுப்பாக விருக்கும். ஆகையால் பூச்சி புழுக்கள் அதில் சுலபமாய் ஒட்டிக் கொள்ளும். அகப்பட்ட பூச்சியை விழுங்கிவிட்டவுடன் எங்கே பூச்சிகள் அகப்படுமோவென்று திரும்பவும் நாக்கை வெளியில் நீட்டிக்கொண்டு பறந்து திரியும்.

இரைகுருவியின் கூண்டு ஒரு கோழிமுட்டையிற் பாதியளவிருக்கும். அது மிகவும் அழகாயமைக்கப்பட்டு உட்புறத்தில் மென்மையான பஞ்சினுல் அணையிடப்பட்டிருக்கும். கூண்டுகள் பெரும்பாலும் கிளையின் நுனியிற் கட்டப்படுவதால், காற்று அடிக்கும்போதெல்லாம் அசைந்து கொண்டே யிருக்கும்.

இரைகுருவி முறைக்கு இரண்டு முட்டைகளே இடும். அவை ஒரு பய்றளவாய்ப் பனிக்கட்டிபோல் வெளுத்திருக்கும்; ஆனுல் இங்கும் அங்கும் சில மஞ்சள் புள்ளிகள் காணப்படும். அது அவயங்காக்கும்போது வேறொரு பிராணியையும் கிட்ட வரவொட்டாது. ஆண்பறவையும் எந்தப் பிராணி வந்தாலும் சீறிச் சினந்து எதிர்த்துத் துரத்தும்.

இரைகுருவி மேனேக்கிப் பறக்கும்போது உடலை ஒருவிதமாக ஒடுக்கி ஒரு அம்பு செல்வதுபோல வெகு வேகமாய்ச் செல்லும். அதற்கு கோபமுண்டாகும்போது தான் அப்படிப் பறக்கும். சில சமயங்களில் தன்னிலும் இரண்டத்தனை பெரிய பட்சிகளையும் அது வெருட்டித் துரத்தும். படத்திலே ஒரு இரைகுருவி மேனேக்கிப் பறப்பதைப் பாருங்கள். இரைகுருவிகளில் பலவகையுண்டு. சில தேனீயளவாயும், சில சிட்டுக்குருவியளவாயும் இருக்கும். அமெரிக்காவின் சில பாகங்களில் அவை வண்ணுத்திப் பூச்சிகளைப்போல் ஏராளமாகக் காணப்படும். பலவர்ணமான இறகுகளையுடைய அவை கூட்டமாகப் பறப்பது வெகு அழகாகத் தோன்றும். இரைகுருவியின் இறகுகளை அழகிய ஆபரணமாகப் பெண்கள் தரித்துக்கொள்ளுகிறார்கள். அதற்காகவே அதை வேட்டையாடுகிறார்கள்.

## 17. பொன்

பொன்னனது லோகவகைகள் எல்லாவற்றிலும் மிக விலையேறப்பெற்றது. அஃது மஞ்சள் நிறமுடையது. பஞ்சலோகங்களுள் அதுவே சிரேஷ்டமானது. ஆகையால் மனிதர் அதைப் பெரிதும் விரும்புகின்றனர்.

பொன் மலைவெடிப்புகளிலும் பாறைகளிலும் பாளம் பாளமாகக் காணப்படும். சில சமயங்களில் அஃது ஆற்று

மணலோடு மணலாகக் கலந்து கண்ணுக்குப் பளீர் பளீர் என்று பிரகாசிக்கும். எங்குக் காணப்பட்டாலும் அது தனியாகக் காணப்படாது; மண்ணோடேனும் மணலோடேனும் கலந்தேயிருக்கும்.

பொன் விளையும் பூமிகளில் பொன் எடுப்பவர்கள் பூமிக்குள் பெரிய சுரங்கங்களை வெட்டிக்கொண்டு போவர். அச்சுரங்கங்களிற் சில பூமிக்குள் பல மைல் தூரம் சென்று, போகப்போக இருட்டாக இருக்கும்.

பொன்னெடுப்போர் ஊஞ்சல்போன்ற ஒரு தட்டிலேறிக் கொண்டு கையில் விளக்கையும், பாறைகளைத் தகர்த்து பொன்னை யெடுப்பதற்கு வேண்டிய ஆயுதங்களையும் கொண்டு உள்ளே செல்வார்கள். வழியோ மிகவும் கரடு முரடாகவிருக்கும். உள்ளே செல்லச் செல்ல, பாறைகளில் இங்குமங்கும் சிறு பொன்மணிகள் மின்னிக்கொண்டிருக்கும். பார்வைக்குப் பிரயோஜனமற்றவைபோற் காணப்படும் பாறைகளும் சிலபோது அதிக பொன்னைக் கொடுப்பதுண்டு. அப்படிப்பட்ட பாறைகளை யந்திரங்களின் மூலமாகத் துளைத்துப் பொன்னை எடுப்பார்கள்.

இப்படிக் காணப்படும் பொன் மண்ணோடு கலந்திருப்பதனால் அதை நன்றாகக் கழுவிச் சுத்தஞ்செய்து பெரிய மூசைகளிலிட்டு உருக்குவார்கள்.

பொன் மிகப் பளுவுள்ளது. அதைப் புடமிடப் புடமிட மாற்று உயர்ந்தும் எடை குறைந்தும் வரும். பொன்னில் துருவாவது களிம்பாவது ஏறுகிறதில்லை. இவ்விஷயத்தில் அது மற்ற லோகங்களுக்கு முற்றிலும் மாறானது.

பொன் வெள்ளியைப் பார்க்கிலும் பளுவானது. அது அடித்து நீட்டப்பெறும் தன்மையுள்ளது. ஓர் குன்றுமணி எடையுள்ள பொன்னை ஒரு அடி நீளம் அரை அடி அகலமுள்ள மெல்லிய தகடாக அடிக்கலாம். ஒரு பை

எடையுள்ள பொன்னை நெடுந்தூரம் நீளத்தக்க கம்பியாக இழுத்து நீட்டலாம்.

தனிப்பொன் மெழுகுபோல் மெதுவாய் இருக்கும். அதை கலப்புள்ளதாக்கினலன்றி அது வேலைக்கு உதவாது. ஆகையால் அதனோடு சிறிது செம்பாவது வெள்ளியாவது சேர்த்துருக்கி நகைகளையும் நாணயங்களையும் செய்து கொள்வார்கள். பொன் நாணயங்களாகிய மோரா, பூவராகன் முதலியவற்றிலும் இக்காலத்தில் நாம் வழங்கிவரும் ஸவரன் என்று சொல்லப்படுகிற ஆங்கிலேய நாணயத்திலும் பதினொன்றில் ஒரு பங்கு செம்பாக இருக்கும்.

பொன் ஆபரணங்கள் செய்வதற்கே பெரும்பாலும் உபயோகப்படுகிறது. அதனிமித்தம் பொன் எப்பொழுதும் வேண்டியதாகவேயிருக்கின்றது. நமது தேசத்து ஸ்திரீகள் தலைமுதல் இடுப்புவரையில் பொன் அணிகளை அணிந்து கொண்டிருக்கிறார்கள். நமது ஜனங்கள் நகைக்காக வருடந்தோறும் எத்தனை கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள்? அத்தனை ரூபாயையும் வர்த்தகத்திலாவது விவசாயத்திலாவது செலவிட்டால் நமது தேசத்திற்கு எத்துணைப் பெரும்பயன் விளையும்.

பொன் ஆபிரிக்காவிலும் அமெரிக்காவிலும் அகப்படுகின்றது. கலிபோர்ணியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் நமது இந்து தேசத்திலே கோலார் என்னுமிடத்திலும் பொன் சுரங்கங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவற்றிலிருந்து ஏராளமான பொன் எடுக்கப்படுகின்றது. நமது தேசத்தவர்கள் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்று நான்குவகையான பொன் இருப்பதாகக் கூறுகின்றனர். அவற்றின் இலக்கணம் இன்னதென்றும் இக்காலத்தில் நன்றாகத் தெரியாது.

# 18. மனமுண்டானல் இடமுண்டு

ஸ்பேயின் தேசத்தில் முன்னொருகால் கலகம் நடந்த போது டம்பாஸிஸியு என்னும் பெயரையுடைய ஓர் சேனுபதி சேனைக்குரிய கடமையைச் செலுத்திக்கொண்டிருந்தான். ராமோன் என்னும் பெயரையுடைய நண்பனொருவன் எதிர்க்கட்சியிலிருந்தான். இவர்களிருவரும் மிக அந்நியோந்நியமான சிநேகிதர்.

இப்படியிருக்க பாஸிஸியுவும் இன்னுமிருபது போர் வீரரும் சத்துருக்கள் கையிலகப்பட்டு, அக்கணமே சுட்டுக் கொல்லப்படவேண்டுமென்று தளகர்த்தனுடைய தீர்ப்பும் பெற்றனர். அப்படியே கைதிகளை ஒருவரொருவராய்ச் சுட்டுக்கொண்டே வந்தனர். கைதிகளின் வரிசையில் பத்தாவதாக நிறுத்தப்பட்டிருந்த பாஸிஸியுவினுடைய முறை வந்தது. அப்பொழுது பக்கத்தில் நின்ற அவன் நண்பனுகிய ராமோன் விரைந்தோடிப்போய் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு 'தளகர்த்தனே! இவனைக் கொல்லவேண்டாம்' என்று கூவினன்.

'ஏன் வேண்டாம், இவன் வாத்தியக்காரனு' என்றனன் தளகர்த்தன். வாத்தியக்காரர் யாதொரு கெடுதியும் செய்பவரல்லராதலாலும் சைனியங்கள் செல்லும்போது யுத்த வீரரை உற்சாகப்படுத்துவதற்கு எக்காளங்களை ஊதுபவராதலாலும் அவர்களைக் கொல்லாது விடுவது வழக்கம்.

'வாத்தியக்காரனென்று கேட்கின்றீர்? ஆம், ஆம், அவன் வாத்தியக்காரன்தான், வெகு சிறந்த வாத்தியக்காரன்' என்றுன் ராமோன்.

'எந்த விதமான வாத்தியக்கருவியை இவன் வாசிக்கக்கூடும்' என்று தளகர்த்தன் வினவினன்.

ராமோன் சற்றுத் தாமதித்து ஒன்றுஞ் சொல்லத் தோன்றாது, 'அந்த......பிராஞ்சிய எக்காளத்தை அவன் ஊதக்கூடும்' என்றான். உண்மையில் சங்கீதமே அவனுக்குத் தெரியாது.

ராமோன் கொடுத்த பிரதியுத்தரம் தளகர்த்தனுடைய மனதில் சந்தேகத்தை உண்டாக்கிற்று. ஆயினும் அவன் மீண்டும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டமையால் வேறொரு கேள்வியும் கேளாது பாஸிலியுவை அச்சமயத்தில் தப்ப விட்டு உண்மையை அறியும்படி பின்வரும் உபாயத்தைச் செய்தனன்; அதாவது :—

இரண்டு வாரங்களுக்குப் பின் ஏற்படப்போகிற ஒரு வாத்திய கோஷ்டியில் பாஸிலியு ஒருவனாக நியமிக்கப் பட்டனன். அப்பொழுது அவனுக்கு வாத்தியம் வாசிக்கத் தெரியாவிடில் அவனுடைய மோசம் வெளிக்கு வரும்; உடனே கொல்லப்படுவான்—என்பது.

அவ்வுபாயத்தின்படி அவன் கொல்லப்பட்டானா? இல்லை; பாஸிலியு அவன் நண்பனை நோக்கி, 'பதினான்கு தினங்களுக்குள் நான் சங்கீதம் கற்றுக்கொள்வேன்; அந்தப் பதினான்காவது தினத்தில் நான் எக்காளத்தை வாசிப்பேன்' என்றான். அப்படியே அவன் தனியே வயல் வெளியிற் சென்று அங்கே இருந்த ஒரு சங்கீத வித்துவானிடத்தில் சங்கீதாப்பியாசஞ் செய்தான். இதைப்பற்றி பாஸிலியு பிற்காலத்தில் அடிக்கடி பின்வருமாறு சொல்வதுண்டு; அதாவது,—

'அப்பதினான்கு தினங்களும் ஒருவரோடும் பேசாமலும் ஊணுறக்கமில்லாமலும் இரவும் பகலும் அதுவே வேலையாக சங்கீதப் பயிற்சி செய்தேன்; பிராஞ்சிய எக்காளமே அச்சங்கீதம். அதை நான் நன்றாகக் கற்றுக்கொண்டேன்.

'நான் உயிரோடிருப்பதற்காக பிராஞ்சிய எக்காளத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து அப்படியே கற்றுக்கொண்டேன். எல்லாவற்றிற்கும் மனது தான் காரணம்; மனமே மிக்க வலிமையுடையது. எனக்கு மனதிருந்தது, செய்து முடித்தேன்' என்பது.

பதினன்கு தினங்களுக்குள் பரஸிலியு பிராஞ்சிய எக்காளத்தை வாசிக்கக் கற்றுக்கொண்டு, அவன் வாத்திய கோஷ்டியைச் சேர்ந்து, உயிர் பிழைத்தான்.

மனமும் தீர்மானமு முண்டானல் நம்மாலாகாதது ஒன்றுமில்லை.

## 19. ராஜ நிருபம்

இப்பொழுது நமது சக்கரவர்த்தியாக விருக்கும் ஐந்தாம் ஜார்ஜ் அரசருக்கு முன்னே நமது சக்கரவர்த்தியாக விருந்து நம்மைப் பாதுகாத்து வந்தவர் ஏழாம் எட்வர்ட் அரசர் என்பவர். அவர் மிகப் பொறுமையுடையவர். சமாதான குணமே அரிய ஆபரணமாக அமையப் பெற்றவர். அதனல் அவருக்குச் சமாதானப் பிரியரான எட்வர்ட் என்று ஓர் சிறப்புப் பெயருண்டு. அவர் 1910-ளு மேமீ 6வ இறக்கவே அவருடைய குமாரரும் இப்போது நமது சக்கரவர்த்தியாக விளங்குபவருமாகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி சிங்காசன மேறினர். அப்பொழுது அவர் இந்தியாவிலுள்ள சுதேச அரசர்கட்கும் பிரஜைகட்கும் ஓர் நிருபம் அனுப்பினர். அதற்குத்தான் நாம் 'ராஜ நிருபம்' என்று பெயரிட்டிருக்கிறோம். அது வருமாறு:—

இந்திய அரசர்கட்கும சாதாரண ஜனங்களுக்கும்:—

'யான் மிக்க அருமையாக அன்பு செலுததிவந்த என் பிதாவுக்கு எவரும் எதிர்பாராவண்ணம் திடீரென்று அனே



எட்வர்ட் சக்கரவர்த்தி

வரும் சோகிக்கும்படி மரணம் நேர்ந்தமையால் பூர்வீக மானதும் பெருமைபெற்றதுமான ஓர் ராஜபரம்பரையின் சுதந்தரமாக எனக்குரியதாகும் சிங்காசனத்தில் யான் அரச னாகவும் சக்கரவர்த்தியாகவும் வீற்றிருக்க வேண்டிற்று. ஆகையால், இந்திய அரசர்கட்கும், ராஜாதிகாரிகட்கும், நமது இந்திய ராஜ்ஜியத்தில் வசிக்கும் மற்றைய குடிஜனங்க ளுக்கும் யான் மங்கல வாழ்த்துக் கூறுகின்றேன். சோகிக் கத்தக்க என் பிதாவின் மரணத்தாலுண்டான இத்துக்கம் சம்பவித்த காலத்தில், ஜாதி, குலம், மதம் முதலியவற்றால் வேறுபடும் பற்பல வகையரான இந்திய ஜனங்கள் காட்டிய ராஜ விசுவாசத்திற்காகவும், ராஜ கிரீடத்தைத் தரித்தவர் மீது வைத்துள்ள பிரீதி விசேஷத்திற்காகவும் யான் மனப் பூர்த்தியாக நன்றி கூறுகின்றேன்.

'யாவராலும் மிக்க கௌரவமாகக் கொண்டாடப்படும் விக்டோரியா மகாராணியார் 1858-ம் வருஷத்தில் இந்திய ராஜ்ஜியபாரத்தைத் தாமே நேரில் வகித்தபோது தமது இந்திய பிரஜைகட்கும் சிற்றரசர்கட்கும் மங்கல வாழ்த்துக் கூறி ஓர் நிருபம் அனுப்பினர். ஐம்பது வருஷங்களுக்குப் பின்னர் அவ்வரசியாரின் குமாரரும், மிக்க கீர்த்திபெற்று அனைவராலும் நேசிக்கப்பட்டவருமான என் தந்தையார் உங்களுக்கனுப்பிய பிரசித்த பத்திரத்தின் மூலமாக அவ் விசேஷித்த சம்பவத்தை நினைப்பூட்டி யிருக்கின்றார். இவை சக்கராதிபத்தியத்தின் பெருமையையும் கருணையையும் விளக்கும் சாசனங்களாம். அச்சாசனங்களிற் கண்ட நோக்கத்தை என் ஆயுள் நாளெல்லாம் மிக்க ஆதரவோடு அனுசரித்து ஒழுகுவேன்.

'காலஞ்சென்ற மாட்சிமை தங்கிய நமது அரசருடைய விருப்பத்தின்படி அவர் மாதிரியைப் பின்பற்றி யான் ஐந்து வருஷங்களுக்குமுன் பத்தினி சகிதமாக இந்தியாவைக் கண்டு களித்தேன். அப்பொழுது இதிகாசத்திற் பெயர் பெற்று விளங்கிய பெரிய ராஜ்ஜியங்களையும், எங்கள் நாகரிகத்திலும் பூர்வீகமான நாகரிகத்தையும், பண்டைக்காலத்து வழக்கங்களையும் ஆசாரங்களையும், சுதேச அதிகாரிகளையும் நமது ஜனங்களையும், அப்பெருந்தேசம் முழுவதிலுமுள்ள நகரங்களையும் கிராமங்களையும் நேரில் கண்டோம். அவ்வற்புத யாத்திரைக் காலத்தில் எங்கள் மனதிற் பதிந்த எண்ணங்களும், அவ்வாத்திரையோடு சம்பந்தப்பட்ட சந்தோஷகரமான விஷயங்களும் எம்முள்ளத்தைவிட்டு ஒருபோதும் அகலா, மங்கவும் மாட்டா. நான் இனிச் செய்ய வேண்டிய மேன்மையும் கஷ்டமுமான ராஜ கடமைகளை நன்றாய் நிறைவேற்றுவதற்கு நீங்கள் விசுவாசத்தோடும் ஊக்கத்தோடும் உதவிபுரிவீர்களென்று யான் உறுதியாக

நம்புகிறேன். என் ஆளுகையின் சிறப்புக்கு ஊற்றாயிருக்கும் இந்தியாவின் அபிவிருத்தி விஷயத்தில் எனக்குள்ள ஆவலுக்கு ஈடான ஆவலை நீங்கள் காட்டுவீர்களென்று யான் எதிர்பார்க்கின்றேன்.'

ராஜ கரங்களினின்றும் வந்து அன்புமயமாக விளங்கி ராஜலக்ஷணத்தைச் சிறக்கக்காட்டிய இந்நிருபம் ஆங்கிலேய அரசாட்சியின் மீது என்றும் மாறாத அன்பையும், ராஜச் சக்கரவர்த்தியாரது ஆழ்ந்த பக்தியையும் நம்முள்ளத்தில் நிலைநிறுத்தி, இறைவணங்கிய ஜார்ஜ் அரசன் சிரஞ்சீவியாய் வீற்றிருந்து சகலவிதமான போக பாக்கியங்களையும் பெற்று நம்மைப் பாதுகாக்க எல்லாம் வல்ல ஈசன் திருவருள் பாலிப்பாராக.

## 20. ரங்கூன் பட்டணம்

ரங்கூன் பட்டணம் பர்மா தேசத்தின் சிறந்த நகரங்களில் ஒன்றாகவும் கீழ்பர்மாவின் தலைநகராகவும் வர்த்தகத்திற் பிரசித்திபெற்றதாகவும் விளங்குகின்றது. அப்பட்டணம் சமுத்திரத்திலிருந்து இருபத்தொருமைல் தூரத்தில் ஐராவதியின் ஒரு உபநதியின் கீழ்க்கரையில் வெகு அழகாய்க் கட்டப்பட்டிருக்கின்றது.

ஐராவதி நதி வங்காளத்திலுள்ள ஹூக்ளி நதியின் கீழ்ப் பாகத்தைப்போலிருக்கும். அதன் அகலமும் ஏறக்குறைய ஹூக்ளி நதியின் அகலமளவுதானிருக்கும். நதியிற் செல்லச் செல்ல அதினிருபுறத்திலும் தோன்றுங் காட்சி வெகு வற்புதமாக விருக்கும். நதியின் இருகரையிலுமுள்ள நிலங்கள் சமமாகவும் காடுகளடர்ந்தனவாகவும் தோன்றும். இவ்வழகிய நதியே ரங்கூன் பட்டணத்தின் பெருமைக்குக் காரணம்.



ஐராவதி நதி ரங்கூனுக் கருகில் அதிக அகலமும் ஆழமுமாக அமைந்துள்ளது. இக்காரணத்தால் கப்பல்கள் ரங்கூன்வரையில் தாராளமாகப் போக்குவரவு செய்யக்கூடியனவாக விருக்கின்றன. அந்நதியின் ஒரு கரை மேடைபோல் மிகவும் விநோதமா யமைக்கப்பட்டிருக்கின்றது. கப்பல்கள் ஆற்றங்கரையை யடுத்து நின்று ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு அது வெகு அனுகூலமானது. அவை இடைவிடாது போக்குவரவு செய்வதும் துறையை யடுத்து நிற்பதும் ஆயிரக்கணக்கான கூலிக்காரர் அங்கு வேலைசெய்வதும் காண்பதற்கு வெகு அழகாகத் தோன்றும்.

ரங்கூன் பட்டணம் செல்வப் பெருக்குடையதாதலால் அது பலரும் விரும்பத்தக்க ஓர் ஸ்தலமாக விளங்குகின்றது. அங்கு கண்டோர் வியக்கத்தக்க இரண்டு கோவில்களுண்டு. அவற்றுள் புத்த மதத்தவர் சென்று அங்குள்ள புத்தனைத்

தொழுவார்கள். அவற்றிற் செய்யப்பட்டுள்ள வேலைத்திறங்களும் விநோத அலங்காரங்களும் பொன்மயமாக விளங்காநின்ற சிகரங்களும் காண்போர் எவர்க்கும் களிப்பை யுண்டாக்கும்.

ரங்கூன் பட்டணத்து வீதிகள் யாவும் அதிக அழகாய் அமைக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றை யொன்று குறுக்கில் ஒழுங்கீனமாகக் கடந்து செல்லாது, ஒன்றின் பக்கத்திலொன்றாய் வெகு சுத்தமாகச் செப்பனிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வீதிக்கும் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகையால் ஒரு வீதியைக் கண்டுபிடிக்க வேண்டுமாயின் இத்தனையாவது எண்ணுடைய வீதி என்றால் சுலபமாய்க் கண்டுபிடித்துக்கொள்ளலாம். பிரதானமான வீதிகள் யாவும் அதிக சுத்தமாய் இருக்கும். சாக்கடைகள் மாத்திரம் இந்தியாவிலுள்ள பட்டணங்களிற்போலவே இருக்கும்.

பர்மாவின் மற்றைப் பாகங்களில் உள்ளதுபோலவே ரங்கூனிலுள்ள வீடுகள் கம்பங்கள் நாட்டி அவற்றின்மீது கட்டப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் பர்மாவைக் கைப்பற்றிய பின்னர் டல்ஹௌசி பிரபு ரங்கூன் நகரத்துக்குச்சென்று அங்கு என்ன திருத்தங்களைச் செய்யலாமென்று யோசித்தார். இப்பொழுது ரங்கூன் அடைந்திருக்கும் சீர்திருத்தங்கள் யாவற்றிற்கும் அப்பிரபுவே காரணபூதர். அங்கிருந்த சிங்காரமான ராஜவனங்களையெல்லாம் சாதாரண ஜனங்களுடைய உபயோகத்திற்கு இனமாகக் கொடுத்துவிட்டார். இப்பொழுது அந்நகரத்திலுள்ள ஜனங்கள் சாயங்கால வேளையில் அங்குச் சென்று உல்லாசமாகப் பொழுதுபோக்குகின்றனர். அத்தோட்டங்களில் சிங்காரமான பல தடாகங்களுண்டு.

தேவாலய விஷயத்தில் ரங்கூன் சிறந்ததென்றாலும் அங்குள்ள அநேகர் கேவலமான மூங்கில் குடிசைகளிலேயே வசிக்கின்றார்கள். கம்பங்களை நிறுத்தி பூமியிலிருந்து

ஏழு எட்டடி உயரத்தில் வீடுகளைக் கட்டுவதினுல் மழை காலத்தில் வெள்ளத்தினுல் அபாயம் நேரிடாதென்பது அவர்கள் கருத்து.

ரங்கூன் பட்டணத்தில் பெரும்பாலும் பர்மியரே வாசஞ் செய்கின்றனர். அவர்கள் பொறுமையும் ரம்மியமுமுள்ள ஜனங்களென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. கிடைத்த அளவில் போதுமென்று திருப்தியடைவதே தவிர அதிகமாய் பணம் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆசை அவர்களுக்கில்லை. அவர்கள் மிக்க முகமலர்ச்சியுடையவர்கள். எப்பொழுதும் உல்லாசமாகத் திரிந்துகொண்டிருப்பார்கள். சுருட்டுப் பிடிப்பதில் அவர்களுக்கு வெகு பிரியம். அவர்களைத் தவிர ரங்கூனில் சீனர், ஜப்பானியர், இந்துக்கள், ஆங்கிலேயர், மகமதியர் முதலியோரையும் காணலாம்.

வர்த்தக விஷயத்தில் ரங்கூன் கல்கத்தாவுக்கு அடுத்ததென்று சொல்லலாம். ரங்கூன் அரிசி மிகவும் உத்தமமானதென்பது உலகமறிந்த விஷயம். ஆகையால் அரிசி ரங்கூனில் ஏற்றுமதியாவதுபோல வேறு எந்த விடத்திலும் ஏற்றுமதியாகிறதில்லை. சென்னையில் உபயோகப்படும் பச்சரிசி விசேஷமாக அங்கிருந்தே வருகின்றது.

ரங்கூன் பட்டணத்தில் வேலைக்காரர் கிடைப்பது வெகு அருமை. கிடைத்தாலும் அவர்கள் சிரத்தையாய் வேலை செய்யமாட்டார்கள். வேலைக்காரர் அநேகமாய் இந்தியாவிலிருந்தே போகிறுர்கள். உத்தியோகநிமித்தமும் வர்த்தகத்தின்பொருட்டும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அங்குச் சென்று குடியேறியிருக்கின்றனர்.

ரங்கூன் முன்னர் பர்மிய அரசன் கையிலிருந்தது. பர்மியர் ஆங்கிலேயருக்குச் சில கெடுதிகளைச் செய்யத் தலைப்பட, 1824-ம் வூ மேமீ ஸர் ஆர்ச்சிபால்ட் காம்பெல் என்னும் ஆங்கிலேய தளகர்த்தர் ஒரு பட்டாளத்துடன்

கப்பலேறி ஐராவதி நதியின் வழியாகச் சென்று ரங்கூனுக்கு அருகில் நங்கூரம் போட்டார். பர்மியர் அவரை எதிர்க்கமாட்டாது ரங்கூனை ஆங்கிலேயருக்கு அர்ப்பணஞ் செய்தனர். இப்பொழுது பர்மா முழுவதும் அவர்களுடையதாய் விட்டது.

## 21. அக்பர் சக்கரவர்த்தி

முற்காலத்தில் இந்தியா தேசத்தைப் பற்பல பாரம்பரையான மகமதிய வீரரும் சிறந்த இந்து அரசரும் ஆண்டு வந்தனர். அவர்களில் மொகலாயரென்ற மகமதிய ராஜ பாரம்பரையார் ஒரு சாரார். அப்பாரம்பரையை ஸ்தாபித்தவன் பேபர் என்னும் பேர்பெற்ற மகமதிய சக்கரவர்த்தி. அச்சக்கரவர்த்திக்கு ஹூமாயூன் என்னும் குமாரனொருவனுண்டு. அவன் பேபர் இறந்தபின் சிங்காசனாதிபதியாயினன். அவன் ஹமிடா பீகம் என்னுமோர் அழகிய மாதை மணந்தனன். அவர்களின் புத்திரன் அக்பர் சக்கரவர்த்தி.

அக்பர், அழகும் நற்குணமும் தைரியமும் வாய்ந்த ராஜ குமாரன். ராஜ தம்பதிகள், அக்பர் சிறுவனாயிருந்த காலத்தில் அவனை வளர்ப்புத்தாய் கையில் ஒப்புவிப்பதுண்டு. அக்காலத்தில் அவனுக்கு அநேக ஆபத்துகள் நேர்ந்தன. அக்பருடைய சிற்றப்பன்மார் வெகு துஷ்டர். அவர்கள் அக்பருடைய தந்தையாகிய ஹூமாயூனுக்கு முட்களைப்போல் நெடுகிலும் உபத்திரவஞ் செய்தனர். காம்றன் என்னும் ஒரு சிற்றப்பன் படையெடுத்துச் சென்று ஆப்கானிஸ்தானத்தின் தலைநகராகிய காபூலைப் பிடித்துக்கொண்டான். சிறுவனாகிய அக்பர் பல தடவைகளில் சிற்றப்பனாகிய காம்றன் கையிலகப்பட்டதுண்டு. ஹூமாயூன் தன் சகோதரனாகிய காம்றன் வசமிருந்த காபூலைப் பிடிக்க



முயன்று பீரங்கிகளை அப்பட்டணத்தின்மீது பிரயோகித்த போது குண்டுகள் அதிகமாக விழுந்த காம்றனுடைய மதி லின்மேல் குழந்தையாகிய அக்பர் நின்றிருந்தான். தெய்வ சங்கற்பத்தால் அவன் உயிர் பிழைத்துப் பிற்காலத்தில் பெரிய சக்கரவர்த்தியெனப் பெயர்பெற்று விளங்கினன்.

அக்பர் சிறுபருவம் தொட்டுக் கல்வியைப் பெரிதும் அசட்டை செய்தவன். ஆகவே அவன் மிக்க வித்யாவா னென்று சொல்வதற்கிடமில்லை. அவனுக்குப் பதின்மூன் ரும் வயதில் அவன் தந்தை இறந்தனன். அவன் உடனே சிங்காசனுதிபதியாய் செங்கோல் செலுத்தவேண்டியவனு னன். ஆயினும் அவனுக்கு ஆளும் பருவம் வராமையால் பைறும்கான் என்னுமொரு மகமதிய பிரபு ராஜாங்க விஷயங்களை அவன் பெயரால் நடத்தி வந்தனன். முற்றி லும் ராஜ்ஜியபாரத்தைத் தாங்கி நீதி வழுவாது செங்

கோல் செலுத்தப் பின்னும் நான்கு வருஷங்கள் சென்றன. ஆகையால் அவனுடைய பதினேழாவது வயதிலேதான் ராஜ்ஜிய விஷயங்கள் யாவும் அவன் கையில் ஒப்புவிக்கப் பட்டன. பைரும்கான் அக்பர்மீது பொறாமைகொண்டு கலகஞ்செய்தான். ஆனால் அக்பர் அவனை மன்னித்து மக்காவுக்கு யாத்திரைபோக உத்தரவு செய்தான்.

அக்பர் ராஜ்ஜியாதிகாரம் செலுத்த ஆரம்பித்தவுடன் அநேக நாடுகளை ஜயித்துத் தன்னதாக்கிக்கொண்டான். நான்கு வருஷங்களுக்குள் குவாலியர், லக்நோ, ஜான்பூர், மாளவம் முதலிய நாடுகள் அவன் கைவசமாயின. பிறகு சித்தூரை முற்றுகையிட்டான். ராஜபுத்திர வீரர் எதிர்த்தனராயினும் அக்பர் அவர்களை ஜயித்து சித்தூரைக் கொள்ளையிட்டான். சித்தூர் முற்றிலும் அழிந்தது. அப்பரிதாபகரமான காட்சியை அடுத்த பக்கத்திலுள்ள படத்தில் காணலாம். இப்படியே அக்பர் ராஜபுத்திரரை ஜயித்து கூர்ஜ்ஜர நாட்டையும் தன்னுடையதாக்கினான். காஸ்மீரம், கண்டகார் முதலிய நகரங்கள் அவனுக்குரியவாயின. இவ்விதமாக அக்பருடைய ராஜ்ஜியம் பலத்து விந்திய பருவதத்திற்கு வடக்கேயுள்ள இந்துஸ்தானத்திலும், காஸ்மீரத்திலும், தக்ஷிண தேசத்தில் விந்திய பருவதத்திற்கு சமீபத்திலுள்ள சில நாடுகளிலும், ஆப்கானிஸ்தானத்திலும் வியாபித்திருந்தது. அக்பர் பெரிய சக்கரவர்த்தியென்று உலகமெங்கும் பெயர் பெற்றான். இந்துஸ்தானத்தில் அரசு செலுத்திய மகமதியருள் அக்பரைப்போற் சிறந்தவர் ஒருவருமில்லை.

அக்பர் கொஞ்சம் உயரமும் அழகுமுடைய புருஷன். அகன்ற மார்பும் நீண்ட கையும் வலுத்த காலும் சிங்க நடையும் சிறந்த திடசித்தமும் காருண்யமுமுடையவன். அவன் கண்ணும் மயிரும் மிகக் கறுத்தவை. குதிரைச் சாரி செய்வதில் அவனுக்கு ஈடானவர் எவருமில்லை.



அக்பர் சக்கரவர்த்திக்கு வெளியான இடத்தில் ஆடும் ஆட்டங்களிலே வெகு விருப்பு. அவற்றுள் 'சௌகன்' என்னு மாட்டமே அவனுக்கு விசேஷ பொழுதுபோக்கு. இதை ஆங்கிலேயர் 'போலோ ஆட்டம்' என்று சொல்லு வார்கள். ஏறக்குறையத் தனக்குச் சரியான பிரபுக்களோடு அவன் குதிரைமீதேறி இந்த ஆட்டத்தை ஆடுவான். அதற்கு வேண்டிய குண்டுகள் பாலைமரத்தினாற் செய்யப் பட்டு, இரும்புபோல் மிக வுறுதியாயிருப்பதால் ஊறு படாது, நெடுநாள் வலுவாக நிற்கும். வெகு காலையில் ஆட ஆரம்பித்து வெயிலுக்குமுன் நிறுத்திவிடுவார்கள். அவ் வாட்டத்திற்குச் செல்லும்போது அக்பர் மிக்க அழகான ஆடையாபரணங்களைத் தரித்துச் சொர்ணமயமாக விளங்கும் குதிரைமீ திவர்ந்து செல்லுங் காட்சி என்றும் மறக்கத்தக்க தன்றென அக்காலத்து வித்துவானொருவர் கூறியுள்ளார்.

புஸ்தகங்களைப் பிறர் வாசிக்கக் கேட்பதில் அவனுக்கு வெகு இஷ்டம். ஆகையால் அவனிடத்தில் ஐயாயிரத்திற்

கதிகமான புஸ்தகங்களடங்கிய புஸ்தகசாலை யொன்றிருந்தது. பண்டிதர், பாவலர் முதலியோரை அன்புடன் ஆதரிப்பதே அவனுடைய பெருவிருப்பு.

எல்லா மதத்திலும் பலனுண்டென்பது அவனுடைய கொள்கை. மதத்தினிமித்தம் அவன் ஒருவருக்கும் தீங்கு விளைத்ததில்லை. கற்றுணர்ந்த சகல மதானுசாரிகளையும் அவன் தன் அரண்மனைக்கு அழைப்பிப்பான். மகமதியர், ஹிந்து, கிறிஸ்தவர், பார்ஸிக்காரர் முதலிய பற்பல மதஸ்தர் அவனுடைய அரண்மனையில் வந்து கூடுவதுண்டு. மதவிஷயமாய் அவர்கள் சொல்லும் யாவற்றையும் அவன் அதிஜாக்கிரதையாகக் கவனிப்பான்.

தொழுவதற்கென்றேற்படுத்தியகாலத்தில் தொழாமலும், மகமதிய மதசித்தாந்தங்களை அவன் நம்பாமலும் இருந்தமையால் மகமதியரிற் சிலர் அவனை அவிசுவாசி என்பார்கள். மதவிஷயமான சகல விவகாரங்களையும் தானே விசாரித்துத் தீர்மானஞ் செய்வதற்குக் கடவுளிடத்திலிருந்து அதிகாரம் பெற்றிருப்பதாக அவன் சொல்லிக்கொள்வான். அவனுடைய அரண்மனையைச் சேர்ந்தவர்கள் அவன்மீது அன்பு வைத்து அவனை ஸ்வாமியினுடைய அவதாரமென மதித்து மரியாதை செய்தார்கள். சிசு விவாகத்தையும் உடன்கட்டையேறும் வழக்கத்தையும் நிறுத்த அக்பர் வெகு பிரயாசப்பட்டான்.

மகளிர் இறந்த தங்கணவரோடு தகனம் செய்யப்படுவதற்கு உடன்கட்டையேறுதல் அல்லது சதியென்று பெயர். அவ்வாறு தகனம் செய்யப்பட விரும்பாத ஸ்திரீகள் பதிவிரதைகளல்ல வென்பது அக்காலத்துக் கோட்பாடு. சில ஸ்திரீகள் புருஷரோடு இறக்க இசையாவிட்டால் பலாத்காரமாக அவரைத் தீயிலிட்டெரிப்பதுமுண்டு. ஸ்திரீகள் இஷ்டப்படாவிட்டால் அவர்களைக் கணவர் சிதை

யில் தள்ளி எரிக்கக்கூடாதென்று அக்பர் சக்கரவர்த்தி தடைசெய்தான்.

ராஜா உடேஸிங் என்பவருடைய புத்திரி கணவனிறந்த போது உடன்கட்டை யேறமாட்டேனென்று மறுத்தாள். அவள் குடும்பத்தவர் அவளை இழுத்துக்கொண்டுபோய் ஒரு கம்பத்தோடு கட்டி, சுற்றி விறகுகளை அடுக்கி நெருப்பை மூட்டும் சமயத்தில், அக்பருக்குத் தெரியவந்தது. உடனே அவன் சென்று அத்தீயைத் தணிக்கச் செய்து ராஜகுமாரத்தியைக் கொடிய மரணத்தினின்று தப்புவித்து அதற்குக் காரணமாயிருந்தவரைத் தண்டித்தான்.

அக்பருடைய ராஜ்ஜியபாரம் இந்துதேச சரித்திரத்தில் மிக்க கீர்த்திபெற்றதாயினும் அவனுடைய வார்த்தகதசை மிக்க விசனத்திற்கிடமானது. ஆயினும் அவன் தனக்கு வந்த கஷ்டங்களையெல்லாம் சகித்து நாற்பத்தொன்பது வருஷம் அரசுசெலுத்திப் பின்னர் பரலோகம் சேர்ந்தான். அக்பர் மிக்க சிறப்புற்றவனாகையால் அவன் பெயர் இன்னும் நிலைபெற்று நிற்கின்றது.

## 22. ஆறுவது சினம்

'ஆறுவது சினம்' என்பது பெண்மணியாகிய ஔவையார் திருவாக்கு. 'கோபம் பாவமறியாது' 'தீராக் கோபம் போராய் முடியும்' என்பவை முதலான முன்னோர் முதுமொழிகள் பலவற்றையும் நாம் கேட்டு வருகிறோம். இவ்வுலகின்கண் கோபத்தினால் விளைந்த தீமைகள் இவ்வளவென்று ஒருவராலும் அளவிடுதல் கூடாது. கோபத்தினாலுண்டான மரணங்கள் எத்தனையென்று யாரால் சொல்லக் கூடும்? ஆகையாலேதான் நமது கல்விச் செல்வியார் கோபம் ஆற்றப்படவேண்டியதென்று எடுத்துரைத்தார்.

ஆகையால் கோபமாவது என்னவென்று நாம் முதலில் விசாரிப்போம்.

நமது தேகத்தில் வேறு வியாதிகளுண்டாவதுபோலவே ஒருவன் நமக்குத் தீங்கு செய்யும்போதும் நம்மைத் திட்டும்போதும் நமக்குக் கோபமென்னும் வியாதி உண்டாகிறது. கோபமானது சிறிதுநேரம் நிற்கும் பைத்தியம் என்றுஞ் சொல்லப்படுகிறது. மிகவும் அநீதியான ஒரு செயலை நாம் கண்டால் நீதியைப்பற்றிய நமது உணர்ச்சியோடு அது மாறுபட்டு தக்ஷணமே கோபமுண்டாகிறது. அக்கோபம் நமக்குச் சுபாவமானது.

தக்க காரணமுளதாயின் நாம் கோபங்கொள்ளவேண்டியது நியாயம்தான். ஆயினும் அது எல்லைகடந்து மற்றையோர்க்குத் தீமை விளைக்காதபடி நாம் ஜாக்கிரதையாக இருத்தல்வேண்டும். அது தீமைசெய்ய நம்மைத் தூண்டும்போது சற்றும் இடங்கொடுக்கலாகாது. 'நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது' என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். நீங்கள் தக்க சமயங்களில் கோபங்கொள்ளலாம்; ஆனால் அது காரணமாக நீங்கள் யாதொரு அக்கிரமமும் செய்யக்கூடாது. அந்தச் சமயம் நீங்கினபின் வெந்நீர் ஆறிவிடுவதுபோல உங்கள் கோபமும் ஆறிவிடவேண்டும்.

கோபத்தின் செயல் அவரவர் குணத்திற்குத் தக்கபடியிருக்கும்: மூடன் தூஷிப்பதனாலும் சண்டையிடுவதனாலும் தன் கோபத்தை வெளிப்படுத்துவான். சற்றுச் சீர்திருத்தமுள்ளவன் தன்னைக் கோபமூட்டினவனைக் கண்டனையினாலாவது தண்டனையினாலாவது ஊறு செய்வான். இவ்விரண்டு வழிகளும் சரியானவையல்ல. மேன்மேலும் உங்களைத் தீமைக்குட்படுத்தாமல் இருக்கத்தக்க பொறுமை

யும் உறுதியுமான வார்த்தைகளால் உங்கள் கோபத்தை வெளியிடவேண்டும்.

பொறுமை கடலிலும் பெரிதாதலின், அது எல்லோரா லும் மதிக்கப்படத்தக்க பெருங்குணம். அது நமது சுகத் திற்கு முக்கியமானது. நமது வாழ்நாளில் நமக்குக் கோபத் தையும் விசனத்தையும் விளைக்கத்தக்க அநேக காரியங்கள் நாடோறும் நேரும். அவை ஒவ்வொன்றையும் பார்த்து நாம் கோபித்துப் புகைந்துகொண்டே யிருப்போமானால் மிகுந்த நிர்ப்பாக்கியராயும் பிறர்க்குச் சங்கடத்தை உண்டு பண்ணுகிறவர்களாயு மிருப்போம். ஒருவன் உனக்குத் தீங்கு செய்தால் அதை உடனே மன்னி; ஒருமுறை மாத் திரமல்ல ஒன்பது முறையும் மன்னி. இது புத்திமான் களுக்குரிய மிகவும் மேலான குணம்; அப்படிச் செய்யாது கோபித்துப் பழிவாங்கப் பிரயத்தனப்படுவது மிருககுணம். கோபியாமல் மன்னிக்கும் குணம் சத்துருவையும் மித்துரு வாக்கும்; கோபித்துப் பழிவாங்க நினைப்பது மித்துருவையும் பலத்த சத்துருவாக்கும். எந்தக் குணம் விசேஷமானது?

கிரேக்க சாஸ்திரியாராகிய சாக்கிரெட்டிஸ் என்பவர் கோபத்தை யடக்குவதாகிய பொறுமைக்குணத்தில் மிகச் சிறந்தவர். ஒரு முறை யாரோ அவரைக் கோபித்தபோது தாமும் கோபியாமல் சிரித்துக்கொண்டு 'தலைச்சீராவை எப்பொழுது தரித்துக்கொள்ளவேண்டுமென்று தெரியாம லிருப்பது துரதிருஷ்டம்தான்' என்று சொல்லித் தம் மைத் திருப்திசெய்துகொண்டார். அவருடைய மனைவி மிக்க மூர்க்ககுணமுடையவள். அவ்வளவு மூர்க்ககுண முடைய ஸ்திரீயை எங்கும் காண்பதரிது. அவள் அவரை எப்பொழுதும் திட்டிக்கொண்டேயிருப்பாள். ஒரு தடவை சில சிநேகிதரோடு அவர் தெருவில் போகும்போது அவள் மிக உக்கிரமாய் அவருடைய அங்கியை இழுத்துக் கிழித்து

விட்டாள். அவர் சினேகிதர், அவளை நன்றாய் அடிக்க வேண்டுமென்று அவருக்குப் போதனை செய்தார்கள். அவரோ அப்படிச் செய்யாது, 'அவள் பலவீனமானவள்; அவளை மன்னிக்கவேண்டும்' என்றார். பின்னொரு தடவை அவள் அவர்மேற் கோபங்கொண்டு இரைந்து மேல்வீட்டிலிருந்து ஒரு சட்டி அசுத்த ஜலத்தை அவர்மீது இறைத்தாள். அதற்கு அவர் முகமலர்ச்சியோடு 'இவ்வளவு முழக்கத்திற்குச் சிறிது மழையும் வேண்டியதுதான்' என்று போயினர். இப்படியே அவர் பலமுறையும் தம்முடைய கோபத்தை முற்றிலுமடக்கி வெகு பொறுமையுடைய புண்ணியவானென்று உலகெங்கும் பெயர்பெற்றார். பொறுமையே கோபத்தை யடக்குவதற்கு அவர் கையாண்ட சாதனம்.

யாராவது தப்பிதஞ்செய்தால், சிலர் முதலில் மிக்க கோபங்கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு முற்கோபிகளென்று பெயர். உடனே அவர்கள் கோபம் மாறிவிடும். எவ்விதமாகவாவது நாம் கோபித்துக்கொள்ளாதிருத்தல் மிக நல்லது.

கோபத்தை யடக்குவதற்கும் அது உண்டாகாது தடுப்பதற்கும் நாம் பொறுமை, இனியவை கூறல், இரக்கம் முதலிய சிறந்த குணங்களைக் கையாளவேண்டும். இக்குணங்கள் நம்மிடத்து அமையுமாறு பராபரனைப் பிரார்த்திப்போமாக.

## 23. சூரியன்

இப்பூவுலகில் வசிக்கும் நம்மனைவருக்கும் வெளிச்சம் வெப்பம் என்பவற்றின் பிரயோசனம் இன்னதென்று நன்றாய்த் தெரியும். இவை யிரண்டு மில்லாவிட்டால் நாம் ஜீவித்திருத்தல் கூடாது. இவை யிரண்டையும் தருவது

ஆகாயத்தில் தோன்றும் ஒரு பெரிய கோளம். அதற்குச் சூரியன் என்று பெயர்.

சூரியனுடைய குறுக்களவு ஏறக்குறைய எட்டுலக்ஷத்து அறுபத்தேழாயிரம் மைல். தூரத்திலிருக்கும் எந்த வஸ்துவும் நமது கண்ணுக்குச் சிறிதாகவே தோன்றும். சூரியன் நம்மிலிருந்து ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல் தூரத்திலிருப்பதால் அது மிகச் சிறிய பொருளாக நமது கண்ணுக்குப் புலப்படுகின்றது. நாம் வசிக்கும் பூமியைவிட சூரியன் பதின்மூன்று லக்ஷம் மடங்கு பெரிது.




சூரியன், பூமியைப்போல இருபக்கங்களிலும் தட்டையான பெரிய பந்து வடிவமாயுள்ளது. அது பூமிக்கு மாத்திரமேயன்றி மற்றெல்லாக் கிரகங்களுக்கும் வெளிச்சத்தைத் தருகின்றமையால் அதை மிக்க பிரயோசனமான கிரகமென்றே சொல்லவேண்டும். அதை நமது இஷ்டப்படி எடுக்கவும் வைக்கவும் கூடிய ஒரு வஸ்துவாக எண்ணி ஆகாயத்திலிருந்து முற்றிலும் அதை அகற்றிவிட்டதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது யாது சம்பவிக்கும்? பூமியெங்கும் இருட்டாகவே இருக்கும். ஜீவகோடிகள்

பூமியில் வாசஞ்செய்தல் வெகு கஷ்டமாக முடியும். புல், பூண்டு, மரம், செடி முதலிய தாவரவர்க்கங்கள் முளைக்கவும் வளரவும் மாட்டா. மழை ஒருபோதும் பெய்யாது. மாரிக் காலம், கோடைக்காலம் முதலிய காலபேதங்கள் ஏற்படா. இவ்விதமாக எல்லாம் கஷ்டமாகவே முடியும்.

ஆகையால் அக்கினி மயமாக விளங்கும் சூரியன் சமஸ்த பிராணிகளுக்கும் தாவரவர்க்கங்களுக்கும் இன்றியமையாதது. சூரியன் வெகு உஷ்ணமுடையது. அதைச்சுற்றிப் பல்லாயிரம் மைல் தூரத்திற்கு அக்கினிச் சுவாலை வீசுங் காற்று கடல்போல் கொந்தளித்து அல்லும் பகலும் இடையறாது உஷ்ணமாகவே யிருக்கும்.

நாம் சூரியனிலிருந்து ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல் தூரத்திலிருப்பதாக முன்பே சொன்னோம். நாம் அதிலிருந்து அத்தனை லக்ஷம் மைல் தூரத்திலிருந்தாலும் அதன் கிரணங்கள் நம்மால் சகிக்கக்கூடாதவ்வளவு உஷ்ணமாயிருக்கின்றன.

சூரியனைச் சுற்றியோடும் கிரகங்கள் பல உண்டு. அவை புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் என்பவை முதலியன. இவை தமது குறுகிய அச்சின்மேல் சுழன்றுகொண்டே சூரியனையும் சுற்றியோடுகின்றன. பூமி முந்நூற்று அறுபத்து ஐந்தே கால் நாட்களுக்கொருதடவை சூரியனைச்சுற்றி வருகின்றது. இதனால்தான் வருஷம் ஏற்படுகின்றது. சூரியனைச்சுற்றிப் பூமி செல்லும் பாதைக்கு மண்டலம் என்று பெயர். பூமி ஒரு நிமிஷத்திற்கு ஆயிரம் மைல் வீதம் ஓடுகின்றது. அவ்வாறு பூமி சூரியனைச் சுற்றியோடுவதனால் இளவேனிற் காலம், கோடைக்காலம், இலையுதிர்காலம், மாரிக்காலம் முதலிய பருவங்கள் ஏற்படுகின்றன.

சூரியன் பிரகாசம் கண்கூசத்தக்க ஒளிமயமாக விருப்ப தால் வெறுங்கண்ணால் அதைப் பார்க்கச் சாத்தியப்படாது. பச்சைக் கண்ணாடியைக்கொண்டாவது தூரதிருஷ்டிக் கருவியைக்கொண்டாவது நாம் சூரியனைச் சோதித்தால் சில சமயங்களில் அதிற் சில கறைகளிருப்பதாகத் தோன்றும். அத்தன்மையான இரண்டு கறைகளின் பெருப்பித்த தோற்றத்தைக் கீழுள்ள படத்தில் காணலாம். அக்கறைகளை நாளா



வர்த்தியில் கவனித்துப் பார்த்தபோது அவை கிழக்கிருந்து மேற்கு நோக்கிச் சூரிய முகப்பிற் கடந்து செல்வதாகவும், அப்பால் மறைந்துபோய் பின்பு இரண்டு வாரங்களுக்கப்புறம் சூரியனுடைய கீழ்ப்புறத்தில் தோன்றி முன்போலவே சூரியமுகத்தைக் கடந்து செல்வதாகவும் காணப்பட்டன. ஆகையால்தான் சூரியன் இருபத்தைந்து நாட்களுக் கொருமுறை தன்னிலையிலேயே சுழல்கின்றதென்று வானசாஸ்திரிகள் ஊகிக்கின்றனர்.

சில காலங்களில் சூரியனுடைய இயல்பான வெளிச்சம் மறைவுபடுவதுண்டு. அப்படி மறைவுபடும் தோற்றத்திற்குச் சூரிய கிரகணம் என்று பெயர். சூரியனுக்கும்

பூமிக்கும் மத்தியில் சில காலங்களில் சந்திரன் வரும். அப்பொழுது சூரியனுடைய வெளிச்சத்தைச் சந்திரன் மறைப்பதனால் சூரியனுடைய வெளிச்சத்திற் பாதி மறைந்து தோன்றும். சந்திரன் மாதமொருமுறை பூமியைச் சுற்றி வருகின்றது. அப்படி வருகையில் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வருமாயின் சூரிய கிரகண முண்டாகும். சூரியன் முற்றிலும் மறைந்து தோன்றுமாயின் அதற்குக் கங்கணக் கிரகணமென்று பெயர்.

மேற்கூறியவற்றால், சூரியன் ஆகாயத்தில் ஓடுகிறதில்லை யென்றும், பூமியே சூரியனைச் சுற்றி யோடுகிறதென்றும், சூரியன் தன் குறுக்களவில் சுமார் இருபத்தைந்து நாட்களுக்கொருதடவை தன்னிலையிலேயே சுற்றுகிறதென்றும் புலப்படும். சூரியனை ஒரு புருஷனாகப் பாவித்து, அவன் ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச்சக்கரத் தேரிலேறிச் செல்கின்றானென்றும், சூரியனுடைய சாரதி அருணன் என்றும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் வானசாஸ்திரிகள் அங்கீகரிக்கத் தக்கவையல்ல. சூரியனையும் சந்திரனையும் மற்றும் யாவற்றையும் படைத்த சர்வ வல்லமையுள்ள கடவுளை நாம் என்றும் ஏத்துவோமாக.

## 24. என் உயிர் பெரிதல்ல

உலகத்திலுள்ள மிகப் பெரிய புகைக்கப்பலுள் ஒன்றாகிய 'திட்டானிக்' என்னும் புகைக்கப்பல், 1912-ஆம் ஏப்பிரல்மீ 15உ இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குப் பிரயாணப்பட்டது. அக்கப்பலில் பிரயாணிகளும் வேலைக்காரரும் ஏறக்குறைய ஆயிரம் பேர் இருந்தனர். அவர்கள்



வெகு உல்லாசமாகப் போய்க்கொண்டிருக்கும்போது சமுத்திர ஜலத்தில் உறைந்து கிடந்த மிகப் பெரிய 'பனிக்கட்டிப் படலமொன்றில் கப்பல் வேகமாய் மோதவே நீர்மட்டத்தின்கீழிருந்த கப்பலின் தகடுகள் கிழிந்து தண்ணீர் உட்செல்வதாயிற்று. உடனே அது நீரில் அமிழத் தலைப்பட்டது. அச்சமயத்தில் கப்பலிலுள்ளவர்கள் பட்ட திகிலையும் மனக்கலக்கத்தையும் யாரே எடுத்துரைக்க வல்லார்? அபாயம் நேரிடத்தொடங்கிய நான்குமணி நேரத்திற்குள் கப்பல் அமிழ்ந்துவிட்டது. அத்துக்க சமாசாரம் உலகம் முழுவதையும் அதிரச்செய்தது. அந்நான்குமணி நேரத்திற்குள் எத்தனைபேரைக் காப்பாற்றக்கூடுமோ அத்தனைபேரைக் காப்பாற்றவேண்டியது கப்பலிலுள்ள மாலுமி முதலிய அதிகாரிகளின் கடமை. பிரயாணிகள் யாவரும் கப்பலின் மேற்றட்டில் கூடித் தங்களுக்கு நேரிடப்போகிற

அபாயத்தை நினைத்துப் பலவாறு வருந்திப் பரிதபித்துக்கொண்டிருந்தனர். அபாயமான காலங்களில் உபயோகப்படும்பொருட்டுக் கப்பலில் கட்டித் தொங்கவிட்டிருந்த சிறு படவுகள் அவிழ்த்து இறக்கப்பட்டன. பெண்டுகளும் பிள்ளைகளுமே முதலில் இறங்கவேண்டுமென்ற உத்தரவு பிறந்தது. மிக்க தைரியமுடைய ஆண்மக்கள் தங்களுக்கு நேரிடப்போகும் தீங்கைச் சிறிதும் சட்டைசெய்யாது, சமுத்திரத்தில் அமிழ்ந்துகொண்டிருக்கிற கப்பலிலிருந்து பெண்டுகளையும், பிள்ளைகளையும் காக்கவேண்டி அவர்களை பத்திரமாகப் படவுகளில் இறக்கினார்கள். அந்த இரவோ குளிரும் இருட்டும் கூடியிருந்தது; படவுகள் மிகவும் சிறியவையாகக் காணப்பட்டன; அபாயத்திற்கு உள்ளான அந்த 'திட்டானிக்' என்னும் கப்பலிலிருப்பதிலும் சிறு படவுகளிலிறங்கி அத்லான்டிக் மகா சமுத்திரத்தில் திசை தடுமாறித் திரிவது க்ஷேமமென்று எண்ணும்படி இருந்தது.

கப்பலின் தட்டில் நின்று தாம் தப்பிப் பிழைப்பதற்கு வேறு படவுகள் அகப்படாவென்னும் நிச்சயத்தோடு இந்தப் படவுகள் ஒன்றொன்றாகச் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த வீரசிகாமணிகளுடைய பேரை நமது பல கவலைகளினால் மறந்துவிட்டோம். அவர்கள் பேர் நமது ஞாபகத்தைவிட்டு நீங்கினாலும் அச்சமயத்தில் தம் நலத்தை முற்றிலும் மறந்து பிற உயிர்களைக் காப்பதில் அவர்கள் கணப்பொழுதேனும் வீண்போக்காது வெளியிட்ட மேலான தைரியகுணமும் ஒருபோதும் நம்மால் மறக்கத்தக்கதன்று. அவர்கள் மிகச் சாதாரணமான மனிதரே. அவர்களுள் வர்த்தகர், இலேககர், பிரயாணிகள், உபாத்தியாயர்கள், தொழிலாளிகள், பத்திரிகாசிரியர் முதலிய பல்வகையோர் இருந்தனர். ஆயினும் சமயம் வந்தபோது அவர்கள் யாவரும்

ஒன்று சேர்ந்து தத்தம் கடமையைத் தீரமாய்ச் செலுத்தினர்கள். கப்பல் அமிழ்வதற்கு இரண்டொருமணி நேரத்திற்கு முன் அவர்கள் ஒருவருக்கொருவர் வந்தனோபசாரங் கூறி மரணத்திற்குத் தங்களைச் சித்தப்படுத்திக்கொண்டது அவர்களுடைய பெருந்தகைமையை நன்கு விளக்குகின்றது.

முற்காலத்து ஸ்திரீகள்போலவே இப்போதும் சில ஸ்திரீகள் தம் உயிர் காக்கப்படுவதற்கு இஷ்டப்படவில்லை. புருஷரில் அநேகருக்குத் தாங்கள் தப்பித்துக்கொள்ள வழியில்லை யென்பது தெரியும். அமிழ்ந்துபோகிற கப்பலோடு அவர்களும் கீழே ஆழ்ந்துபோவது நிச்சயம். பெண்டுகளுடைய கதி அப்படியல்ல; எந்தப் பெண்பிள்ளையேனும் வந்து படவிலேறிக்கொண்டால் அவள் உயிர் பிழைக்க வழியுண்டு. சில ஸ்திரீகள் தாம் உயிர் பிழைத்திருப்பதிலும் தங் கணவரோடு உயிர் துறப்பதே நலமெனக் கருதி அவர் பக்கலிலே நின்றுவிட்டமை வெகுவாய் வியக்கத்தக்கதே.

மூழ்கிக்கொண்டிருந்த 'திட்டானிக்' கப்பலிலிருந்து இறக்கப்பெற்ற படவுகள் சீக்கிரத்தில் ஜனம் நிறையப்பெறவில்லை. அபாயம் நேரிட்டிருப்பதை ஜனங்கள் நம்பவில்லை; மேலும் மிக்க கோஷமுடைய அத்லான்டிக் மகா சமுத்திரத்தில் சிறு படவை ஆதாரமாகக்கொண்டு இறங்க ஸ்திரீகள் மனம் துணியவில்லை. ஆயினும் நேரிட்டிருக்குமபாயம் மிகவும் பயங்கரமானதென்று தெரிந்துகொண்டபின், படவிலேறுவதற்கு ஸ்திரீகள் கப்பலின் தட்டில் அதிகமாய் வந்து கூடினார்கள். கடைசியாக எல்லாப் படவுகளும் ஜனங்கள் நிறையப்பெற்றன. அவற்றுளொன்றைச் சமுத்திரத்தில் இறக்கும்போது, அக்கப்பலின் மாலுமி அத்தனைபேருடன் அப்படவு சமுத்திரத்தில் மிதப்பது சாத்தியமல்லவென்று நினைத்து, 'அப்படவிலிருந்து யாராவது ஒரு பெண்பிள்ளை வெளியே வரவேண்டும்; இல்லா

விடில் அந்தப் படவு நீருள் அமிழ்ந்துவிடும்' என்று கண்டிப்பாகச் சொன்னான். துடுப்புத்தள்ளி படவை ஓட்டுவதற்கு எத்தனை ஆண்மக்கள் வேண்டுமோ அத்தனை ஆண்மக்களே அதிலிருந்தனர். அவர்களில் ஒருவனையும் இறக்க முடியவில்லை. ஏறக்குறைய நாற்பது பெண்டுகளும் குழந்தைகளும் அப்படவிலிருந்தனர். அவருள் ஒருத்தி 'சேமமடையப்போகிற அப்படவைவிட்டு நிச்சயமாக அழிவடையப்போகிற திட்டானிக் கப்பலுக்குத் திரும்பிப்போகவேண்டும். ஜீவித்திருப்பதற்குப் பதிலாக மரணத்தை அடைய வேண்டும்' என்றாள்.

அதுகேட்டு க்ஷணநேரம் எல்லாரும் அமைதியாக விருந்தார்கள். உடனே ஒரு சிறு பெண் எழுந்தாள். 'நீ போகப் போகிறாயோ?' என்று யாரோ அவளைக் கேட்க, அவள் 'ஆம், நீங்கள் யாவரும் தாய்மார்கள்; உங்களுக்குக் குழந்தைகளிருக்கின்றன. நீங்கள் அக்குழந்தைகளைவிட்டுப் போகக்கூடாது. எனக்குக் குழந்தை இல்லை, என்னைப் பற்றி விசாரமில்லை, என்றால் அநேக தாய்மார்களும் குழந்தைகளும் உயிர் பிழைப்பாராகில், என்னுயிர்ப் பெரிதல்ல' என்றனள். வேறேதும் சொல்வதற்கு அவகாசமில்லாமையால் அவள் உடனே கப்பலில் ஏறிப்போனாள். அப்போது கப்பல் மாலுமி, அரசச் சீமாட்டிமார்களும் செய்யப்பெறாத அரிய மரியாதையோடு அவளைக் கைகொடுத்துக் கப்பலேற்றினான்.

பிறகு படவைக் கடலிலிறக்கினார்கள். அப்படவிலிருந்தோரனைவரும் உயிர் பிழைத்தார்கள். அந்த உத்தம குணமுடைய பெண் 'திட்டானிக்' கப்பலோடு கடலில் அமிழ்ந்தாள். பரோபகாரியாகிய இம்மாது சிரோமணியை மனமகிழ்ந்து புகழாதார் யார்?

## 25. ஆங்கிலேய அரசாட்சியில் நாமடைந்துள்ள நன்மை

இந்தியர்களாகிய நாம் இப்பொழுது ஆங்கிலேயரால் ஆளப்படுகிறோம். ஆங்கிலேயர் என்பவர்கள் இங்கிலாந்து தேசத்தைத் தமக்கு ஜனன பூமியாக உடையவர். அவர்கள் ஆளுகையில் நாமடைந்திருக்கும் நன்மையும் நமக்கு கிடைத்திருக்கும் சுதந்தரங்களும் அநேகம்.

முற்காலத்தில் நாம் இந்து அரசர்களாலும் மகமதிய சக்கரவர்த்திகளாலும் ஆளப்பட்டோம். அக்காலத்தில் பிரஜைகளுக்கு மனச்சமாதானமாவது சந்தோஷமாவது கிடையாது. ஜனங்கள் எப்பொழுது தங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் பொருளுக்கும் ஆபத்து வருமோவென்று திகிலடைந்தவர்களாக விருந்தனர். தனக்கு இஷ்டமான மதத்தை அனுசரிக்க யாருக்கும் சுவாதீனம் கிடையாது. பிரயாணம் செய்வதற்குத் தகுந்த மார்க்கங்கள் அக்காலத்தில் ஏற்படவில்லை. ஆகையால் ஜனங்கள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்வது மிக்க அபாயமாயிருந்தது. திருடர் உபத்திரவம் எங்கே பார்த்தாலும் அதிகமாயிருந்தது.

தக்கர் என்னும் ஒரு வகுப்புத் திருடர் பதிவிருந்து பாட்டைசாரிகளை வழிமறித்துப் பறித்து பிராணனை வாங்கினர். மகளிர் இறந்த தம் கணவரோடு உடன்கட்டையேறுதலும் பெண் சிசுக்களை வதைத்தலும் அக்காலத்தில் மிகச் சாதாரணமான வழக்கம். இனி ஆங்கிலேயர் நமது தேசத்தைக் கைப்பற்றியபின் நாமடைந்திருக்கும் நன்மைகள் எவையென்று விசாரிப்போம்:—

1. ஆங்கிலேயர் ஆளுகை நமக்கும் நமது சொத்துக்களுக்கும் போதுமான அளவு பாதுகாப்பளித்திருக்கிறது. நமது தேசத்தில் குதிரைச் சேனைகளையும் காலாட் சேனை

களையும் அடிக்கடி பார்க்கிறோம். ஆனால், அவைகள் நமது நாட்டில் யுத்தம் செய்ததை நாம் பார்க்கவில்லை. ஆகையால் நமது தேசத்தில் சமாதானம் நிலைத்திருக்கின்ற தென்பது நன்றாய்த் தெரிகிறது.

2. நீதி தவறாது சரியாய்ச் செலுத்தப்பட்டு வருகின்றது. நீதியே ஆங்கிலேய ராஜ்ஜியத்திற்கு ஆதாரம். ஏழையென்றும் பணக்காரனென்றும் பேதமின்றி அனைவருக்கும் ஒரேவிதமாய் நியாயம் செலுத்தப்படுகிறது. சர்க்கார் சட்டப்பிரகாரம் குடியானவனுடைய உயிரும், தனவானுடைய உயிரும் ஒன்றுதான். பிறன்பொருளை அபகரிப்பவன் சட்டப்படி தக்ஷணமே தண்டிக்கப்படுவான். எந்தக் குற்றம் செய்தவரையும் தீர விசாரணை செய்து குற்றவாளியென்று கண்டபின்னன்றித் தண்டிப்பதில்லை. ஏழைக்கும் பணக்காரனுக்கும் விசாரணை ஒரேமாதிரிதான் நடக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் பல நியாயஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜில்லாக்கடோறும் ஒவ்வொரு நியாயாதிபதிக்கும் உதவி செய்வதோடு சகலவிதமான குற்றங்களைத் தடுப்பதற்காகவும் போலீஸ் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

3. ஆங்கிலேயர் நம்மைப் பஞ்சம் பலவழிப் படுத்தாதிருக்கும்படியான வழிகளைச் செய்திருக்கின்றனர். முற்காலத்தில் பயிரிடுவோர் மழையை நம்பியே பயிரிட வேண்டியதாயிருந்தது. மழையில்லாவிட்டால் வேளாண்மையில்லை. வேளாண்மை யில்லாவிட்டால் பஞ்சம்தான். ஆங்கிலேய அரசாங்கத்தார் இவ்விஷயமாகத் தேசத்திற்கு மிக்க நன்மை செய்திருக்கின்றனர். ஆறுகளிலிருந்து கால்வாய்கள் வெட்டி நாட்டிற்குக்கொண்டுபோய் ஜனங்கள் மழையை எதிர்பாராது தங்கள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய சௌகரியங்களை செய்திருக்கின்றனர். கங்காநதியிலிருந்து அறுநூறு

மைல் நீளமுள்ள ஓர் பெருங்கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. நீர் பாய்ச்சுதலுக்கென்று இவ்வுலகில் செய்யப்பட்டுள்ள வேலைகள் யாவற்றிலும் அதுவே பெரியது. தென்னிந்தியாவிலுள்ள பிரதானமான ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டியிருப்பதால் ஏராளமான நிலங்களுக்கு நீர் பாய்கிறது. சில மாகாணங்களில், மழையினால் ஒரு போகமும், ஆற்றின் ஜலத்தால் ஒரு போகமுமாக இருபோகம் விளையும்.

4. ஜனங்கள் பயமின்றிப் போக்குவரவு செய்வதற்கும் தானியங்களை ஊருக்கூர் எளிதில் கொண்டு செல்வதற்கும் மார்க்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு விரைவாய்ச் செல்லவும் சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யவும் புகைவண்டிப் பாதைகளையும் ஆங்கிலேயர் அமைத்திருக்கின்றனர். இதனால் வர்த்தகம் விருத்தியடைவதற்கும் மிக்க அனுகூலமுண்டு. முற்காலத்தில் தென் இந்தியா பஞ்சத்தினால் வருந்தியபோது பாஞ்சால தேசத்தில் நல்ல விளைச்சல் விளைந்தது. ஆனால், அப்போது புகைவண்டிகள் முதலிய சாதனங்கள் ஏற்படாமையால் பஞ்சத்தால் வருந்துமிடங்களுக்கு அந்தத் தானியத்தைக் கொண்டுபோகச் சாத்தியப்படவில்லை. இப்பொழுதோ அப்படியல்ல.

5. ஜனங்களுடைய தேகாரோக்கியமும் கவனிக்கப்படுகின்றது. தேக அப்பியாசமே தேகாரோக்கியத்திற்கு ஏற்ற வழியென்று கண்டு பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் மாணாக்கர் தேக அப்பியாசம் தவறாது செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். அம்மை குத்துவதினால் வைசூரி என்னும் நோய் பரவாது தடுக்கப்படுகிறது. வாந்திபேதி, கொள்ளைநோய் முதலானவைகளைத் தடுப்பதற்கு வேண்டிய சாதனங்கள் யாவும் கையாளப்பட்டு வருகின்றன. ஏழைகளுக்கும் தனவான்களுக்கும் தக்கபடி வைத்தியசாலைகள்

ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி பிரதானமான ஒவ்வொரு வியாதிக்கும் பிரத்தியேகமான வைத்தியசாலைகளுண்டு.

ஜனங்கள் யதேஷ்டமாய்ப் பயமின்றிப் பருகத்தக்க சுத்த ஜலம் குழாய்கள் மூலமாய்ப் பட்டணங்களில் வருவிக்கப் பட்டுள்ளது. சகல விதமான அழுக்குகளையும் போக்குவதற்கு ஜலதாரைகளும் சாக்கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப்படியே ஜனங்களின் சௌக்கியத்திற்கும் விருத்திக்கும் ஏற்ற எல்லா நன்மைகளையும் ராஜாங்கத்தார் நமக்குச் செய்கின்றனர்.

6. நமது தேசத்தில் கல்வியறிவைப் பெருக்கி அஞ்ஞான இருளை அகற்றுவதற்குப் போதுமான முயற்சி செய்கின்றனர். தேசமெங்கும் கலாசாலைகளையும் வித்தியாசாலைகளையும் காணலாம். ஜாதிபேதம் மதபேதமின்றி யாவரும் கல்வி கற்கலாம். நன்றாய்க் கல்விகற்கும் மாணாக்கருக்கு ராஜாங்கத்தார் உபகார வேதனமும் கொடுத்து வருகின்றார்கள். வித்தியாசாலைகளுக்கும் திறமைக்குத் தக்கவாறு வருஷவாரி சகாய திரவியமும் கொடுக்கின்றார்கள். கல்வியின் பொருட்டு அவர்கள் வருஷந்தோறும் செலவு செய்யும் பணம் எத்தனையோ லக்ஷம். நாம் அடைந்திருக்கும் கல்விக்கும் சீர்திருத்தத்திற்கும் காரணம் நமது அரசாங்கத்தாரின் பரோபகார குணவிசேஷமே யல்லவோ?

7. பலவிதமான துராசாரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டது. மகளிரை இறந்த தங்கணவரோடு தீயிலிட்டு எரிக்கும் வழக்கம் முற்றிலும் நிறுத்தப்பட்டது. துஷ்ட தேவதைகளுக்குச் சில சமயங்களில் மனிதரைப் பலியிடுவதுண்டு. அதற்கு நரபலியிடுதல் என்று பெயர். அது முற்றிலும் ஒழிந்து போயிற்று. பெண்குழந்தைகளைக் கொல்லுதல், மனிதரை அடிமையாக விற்றல் முதலிய கெட்ட வழக்கங்கள் இப்பொ

மூது கிடையா. இக்காலத்தில் யாராவது மேலே கூறிய தீச்செயல்களைச் செய்வாராயின் உடனே தக்க தண்டனை யடைவர். இப்படியே நாம் யோசித்துப் பார்த்தால் இன்னும் அநேக நன்மைகள் நமக்குப் புலப்படும். ஆகையால் ஆங்கிலேயருடைய ஆளுகையே மிகச் சிறந்தது. நாம் ராஜவிசுவாச முடையோராய் நமது ராஜனாலும் அவர் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராலும் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கமைந்து நடப்போமாயின் நமக்கும் நமது தேசத்திற்கும் அளவிறந்த நன்மையுண்டாம்.



## 26. தேனீ

சர்வலோக நாயகனாகிய பரம புருஷனால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பிரபஞ்சத்தில் பல்லாயிரம் பூச்சிவகைகள் உண்டு. அவற்றுள் சிறந்தது தேனீ என்றே சொல்லவேண்டும். தேனீ என்பது தேனைச் சேர்க்கும் ஈ என்று பொருள்படும். இதனாலும் அது விசேஷமான ஜந்து என்பது புலப்படும். அது மிக்க இயற்கையறிவுடையது. செய்தொழிற் றிறமையும் சிக்கனமும் சுறுசுறுப்புமுள்ள பிராணியாதலால் அது அனைவராலும் கொண்டாடப்படுகின்றது.

தேனீக்கள் தமது சுறுசுறுப்பினால் தமக்காகத் தேனைச் சேகரித்து வைப்பதுமல்லாமல் நமக்கு மிகவும் உபயோகப்படுகின்ற மெழுகையும் உண்டாக்குகின்றன. அவை

வசந்தகாலத்திலே தாம் வசிப்பதற்கேற்ற கூடொன்றைக் கட்ட ஆரம்பிக்கும். குளிர்காலம் ஒழிந்து வெயில் காலம் ஆரம்பிக்கவே தேனீக்கள் அதிக உற்சாகத்தோடு மெழுகு சேகரிக்கச் செல்லும். அவை முதலில் வேண்டியமட்டும் தேனைக் குடித்துவிட்டு பின்பு ஓரிடத்தில் அசையாமல் தங்கி ஒன்றின்கீழொன்று வரிசையாகத் தொங்கிக் கொண்டிருக்கும். அப்பொழுதுதான் அவை மெழுகுண்டாக்குவது. ஏறக்குறைய இருபத்து நான்குமணி நேரம் அப்படி அவை தொங்கிக்கொண்டிருந்த பின்பு அவைகளின் வயிற்றிலே மெழுகுண்டாகும். அம்மெழுகு அவற்றின் கீழ்ப்புறத்திலுள்ள ஒருவகையான பைபோன்ற உறுப்பில் தங்கும். பிறகு கூடு கட்டுவதற்காகத் தங்கள் கால்களினால் அம்மெழுகைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வாயிலிட்டு மென்று தேன்கூடு கட்டவேண்டிய விடத்தில் கட்டும். இவ்விதமாகத் தேவ நிர்மாணம்போல் கணித சாஸ்திர விதிப்படி சிறிதும் பிசகில்லாத பிரமாணங்களுள்ள பல அறைகளுடன் மிகவும் ஆச்சரியமான கூட்டைக் கட்டி முடிக்கும். இப்படிச் செய்து முடித்த தேன்கூடொன்றை இங்கு காட்டியிருக்கின்றோம்.

ஒரு கூட்டில் வாசம்செய்கிற ஈக்களை நான்கு வகுப்பாக வகுக்கலாம்: முதலாவது ராணி ஈ; இரண்டாவது வேலை செய்யும் ஈ; மூன்றாவது ஆண் ஈ; நாலாவது ஈக்களும் புழுக்களும். முட்டையிடுவதே ராணி ஈயின் வேலை. மெழுகு சேகரித்துக் கூட்டைக் கட்டுவதும் தேன் சேகரிப்பதும் வேலைசெய்யும் ஈக்களுடைய வேலை. ஆண் ஈக்கள் எப்பொழுதும் ராணி ஈயையே காத்திருக்கும். ராணி ஈ முட்டையிட்டவுடன் அம்முட்டைகளுக்கு யாதொரு தீங்கும் நேராவண்ணம் அவ்வாண் ஈக்கள் காக்கும். ராணி ஈ இடும் முட்டைகள் முதலில் புழுவாகப் பரிணமிக்கும்.



வேலைசெய்யும் ஈக்கள் மலர்களிலிருந்து மகரந்தப் பொடியை எடுத்துக்கொண்டுவந்து குஞ்சுகளுக்கு உணவாக ஊட்டும். அவ்வீக்களே மற்ற ஈக்களுக்கும் உணவு தேடிக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். சமயம் நேரும்போதெல்லாம் அவை தேனைக் கொணர்ந்து கூட்டின் அறைகளை நிரப்பும். தேன் கிடையாத காலத்தில் உபயோகித்துக் கொள்ளுதற்குப் போதுமான தேனைக் கையிருப்பாகக் கூட்டிலே பத்திரப்படுத்தி வைக்கும்.

ஒரு கூட்டத் தேனீக்கள் சேர்த்து வைத்த தேனை மற்றொரு கூட்டம் வந்து அபகரிக்க முயல்வதுமுண்டு. அச்சமயத்தில் அவை ஒன்றையொன்று எதிர்த்து வெகு மும்முரமாகச் சண்டைசெய்து தம் தும்பிகளினால் ஒன்றையொன்று தாக்கும்.

தேனீக்கள் சாதாரணமாக மனிதருக்குத் தீங்கு செய்வதில்லையாயினும் அவற்றின் கூட்டை யழித்துத் தேனை அபகரிக்க முயன்றால் அவை மிக்க கோபங்கொண்டு கெடுதிசெய்யத் தலைப்படும். அப்போது அவற்றிற்குத் தப்பிப் பிழைப்பது மிகவும் அசாத்தியம். அடியில் வருங் கதை இதை நன்குவிளக்கும்:

அநேக வருஷங்களுக்கு முன்னே இத்தேசத்தில் யுத்தம் நடந்தபோது ஒரு சமயத்தில் ஆங்கிலேயருடைய சேனை

மேற்கே மைசூருக்கடுத்த மலைநாட்டிலுள்ள ஒரு பெரிய காட்டின் வழியாகச் செல்லுகையில் சேனாதிபதி ஒரு பெரிய மரத்தின் கீழே தங்கவேண்டி யிருந்தது. அப்போது சேனைகள் அம்மரத்தைச் சுற்றி, தங்கள் ஆயுதங்களை நாட்டி, தளமிறங்கினார்கள். அம்மரக்கிளைகளில் பெரிய தேன் கூடுகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவர்களுக்கு அது தெரியாது.

சேனாதிபதி அங்கு இளைப்பாறிக்கொண்டிருக்கும்போது சில ஈக்கள் வந்து ஆயுதங்களில் உட்கார்ந்தன. பிறகு வேறு சில வந்தன; அப்பால் அதிகமாக ஈக்கள் வந்து சேனாதிபதி முதலியவர்களைக் கடிக்கத் தலைப்பட்டன. அவர்கள் வேதனை பொறுக்கமாட்டாமல் ஓட ஆரம்பித்தார்கள். ஆயினும் ஈக்கள் அவர்களை விடாது தொடர்ந்து சென்று கடித்தன. சேனாதிபதி என்ன செய்வதென்று தெரியாது சற்று மயங்கினார்.

அப்பொழுது சேனைகளிலொருவன் அருகிலிருந்த ஓர் குளத்திலிறங்கிக் கழுத்தளவு ஜலத்திலே போய் நின்றான். அப்பொழுதும் ஈக்கள் அவனை விடவில்லை. பிறகு அவன் நீரில் மூழ்கினான். அப்பொழுதும் ஈக்கள் அவன் திரும்பியும் தலைகாட்டுவானென்று தண்ணீரின்மேல் பறந்துகொண்டிருந்தன. அவன் தலையை நீட்டவே மீண்டும் கடிக்க ஆரம்பித்தன. தண்ணீரில் மூழ்கியிருப்பதினாற் பயனில்லையென்று கண்டு அவன் வெளிப்பட்டு ஓடினான். அப்போதும் அவை அவனைத் தொடர்ந்து சென்றன.

பிறகு சேனாவீரரில் ஒருவன் சிக்கிமுக்கிக் கல்லைத் தட்டித் தீயுண்டாக்கி, செத்தையும் சுள்ளியுமிட்டு நெருப்பெரித்தான். அப்பொழுதுதான் ஈக்கள் சற்றுப் பின்னிடைந்தன. சிப்பாய்கள் அனைவருக்கும் ஈக்கடியால் உடம்பு

வீங்கி மிக்க உபத்திரவமுண்டாயிற்று. உடனே அவர்கள் அவ்விடம் விட்டகன்றார்கள்.

தேனீக்களின் சுபாவம் இதனால் நன்கு விளங்கிற்று. தங்களுக்காவது தங்கள் தேன் கூட்டுக்காவது கெடுதி செய்பவர்களை அவை வெகுதூரம் தொடர்ந்து சென்று கடிக்கும். ஆகையால் தேன் எடுப்பவர்கள் தேன் கூட்டுக்குக் கிட்ட அணுக மிகவும் அஞ்சுவார்கள். 'நெருப்பை ஈ மொய்க்குமா' என்பது பிரசித்தமான பழமொழி: நெருப்புக்கு ஈக்கள் பயப்படுவது இயல்பு. ஒருவன் தேன் எடுக்கவேண்டுமானால் உரத்த சட்டையொன்றைப் போட்டுக்கொண்டு கையில் தீப்பிடித்துக்கொண்டுபோய் எடுக்கவேண்டும்.

தேன் மிக்க இனிமையான வஸ்து. அது மருந்திற்கு மிகவும் உபயோகப்படுகிறது. தேன் மெழுகும் மருந்திற்கு உபயோகப்படுவதுமன்றி, மரச்சாமான்களைப் பளபளக்கச் செய்வதற்கும் உபயோகப்படுகின்றது.

தேனீ வெகு சுறுசுறுப்பான ஜந்து. அது நொடிநேரமும் வீண்போக்காது. இங்குமங்கும் அலைந்து திரிந்து, ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்குச் சென்று பாடுபட்டுத் தேனையும் மெழுகையும் கொண்டுவந்து கூடுகட்டிக் கூடு நிறைய தேனை சேகரித்து வைப்பதும், சேர்த்த தேனை சிந்திச் சிதறாமல் காப்பதுமே அதன் தொழில். நாமும் தேனீயைப்போலவே சுறுசுறுப்பாய் எப்பொழுதும் வேலை செய்து பொருளைச் சேர்த்துப் பாதுகாக்கவேண்டும். தேனீ பாடுபட்டுத் தேடி வைத்த தேன் எவ்வண்ணம் பிறர்க்கு வெகு பயன்படுகிறதோ அவ்வண்ணமே நாம் உழைத்துச் சேர்க்கும் பொருள்கள் யாவும் பரோபகாரத்திற்குப் பயன்படும்படி வாழ்நாளும் பிரயாசப்படுவோமாக.

## 27. திமிங்கிலம்

திமிங்கிலம் சமுத்திரத்தில் வசிக்கும் மிக்க பயங்கர மான ஓர் பிராணி. அது சகல பிராணிகளிலும் பெரியது. அதன் நீளம் ஏறக்குறைய நூறடியும் குறுக்களவு முப்பத் தைந்தடியும் இருக்கும். திமிங்கிலம் ஜலத்தில் வசிப்பத னாலும், வடிவத்தில் மச்சத்தை ஒத்திருப்பதனாலும், சிலர் அது மச்சஜாதியுள் ஓர்வகை என்று அபிப்பிராயப்படுவர். அது மீன்வகையைச் சேர்ந்ததல்ல வென்பதற்கு அநேக காரணங்களுண்டு. மீன்கள் ஜலத்திலுள்ளிருந்துகொண்டே வாயுவை உட்கொள்ளும் சக்தியுடையவை. திமிங்கிலமோ அப்படியல்ல. சிறிதுநேரம் தண்ணீருள் அமிழ்ந்து கிடந் தாலும், மூச்சுவிடுவதற்கு அது மேலேதான் வரவேண் டும். ஆகையால் அது அரைமணி நேரத்திற்கொருதடவை சுவாசம் விடுவதற்காக மேலே வரும். அப்படி வராது நீருள்ளிருக்குமாயின் உடனே இறந்துபோகும்.

மீன்கள் முட்டையிட, அம்முட்டையிலிருந்து குஞ்சுகள் உற்பத்தியாகின்றன. திமிங்கிலம் மிருகங்களைப்போலக் குட்டிபோட்டு அக்குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க் கும். அதன் இரத்தம் மிருகங்களினிரத்தம்போலவே மிக வும் சூடாயிருக்கும். அதன் மாமிசமும் மிருகங்களின் மாமிசத்தைப்போன்ற ருசியுடையது. ஆதலால் திமிங்கிலம் மிருகமென்றே கொள்ளவேண்டும்.

திமிங்கிலத்தின் தலைமட்டும் உடலின் மூன்றிலொரு பாகத்திற்கு மேலேயிருக்கும். அது வாயைத் திறக்குமா யின் ஒரு பெரிய அறையளவு விசாலமுடையதாகும். ஒரு வன் குதிரையின்மே லேறிக்கொண்டு உட்செல்லக்கூடிய அவ்வளவு பெரியதாயுமிருக்கும். அதன் நாக்கு ஒரு பெரிய

மெத்தைபோலிருக்கும். யானையின் உருவம் மிகப் பெரியதாயிருந்தும் அதன் கண்கள் மிகச் சிறியதாயிருப்பது போலத் திமிங்கிலத்தின் உருவம் மிகப் பெரியதாயிருந்தும் அதன் கண்கள் மிகச் சிறியனவாயிருக்கும். திமிங்கிலத்திற்கு வெளியில் தெரியக்கூடிய காது கிடையாது. சத்தம் நுழையத்தக்க ஓர் சிறிய துளைமாத்திரம் தோலுக்கடியில் உண்டு. அத்துளையின் வழியாக அது சத்தத்தைக் கேட்டு அறிந்துகொள்ளும்.

திமிங்கிலத்திற்குப் பல்லில்லை. இரண்டு வரிசையாக தாடை எலும்புகள் மாத்திரம் உண்டு. இந்தப் புதுமையான கருவி இரைதேடும் விஷயத்தில் ஒரு வடிகட்டும் யந்திரத்தைப்போல அதற்கு உபயோகப்படுகின்றது. இரை வேண்டும்போது அது வாயைத் திறந்துகொண்டு தண்ணீருக்குள் வெகு விரைவாய் நீந்திச் செல்லும். அதன் பெரிய வாய்க்குள் கடல்நீர் பெருக ஏராளமான மீன்கள் அதற்குட் செல்லும். அப்பொழுது திமிங்கிலம் வாயை மூடும். மூடவே வாய்க்குட் சென்ற கடல் நீர் வாயின் இரண்டு கடையாலும் வெளியே வழிந்தோட மீன்கள் மாத்திரம் அதன் வாயில் அகப்பட்டுக்கொள்ளும். அவற்றைத் திமிங்கிலம் தனக்கு ஆகாரமாக்கிக்கொள்ளும்.

திமிங்கிலத்தின் வால் ஐந்து ஆறடி நீளமும் ஏறக்குறைய இருபதடி அகலமுமுள்ளது. அதனுதவியைக் கொண்டுதான் திமிங்கிலம் தண்ணீரில் துரிதமாகப் பாய்ந்து செல்லும். மிக்க பலமுள்ள அதன் வாலினால் அது சில சமயங்களில் ஜலத்தை அடிக்குமானால் கடல்நீர் மலைபோலக் கிளம்பிக் கொந்தளிக்கும். திமிங்கில வேட்டையாடச் செல்லும் படவுகளையும் அது வாலாலடித்துக் கவிழ்த்துவிடுவதுண்டு. அவ்வாறு ஒரு படவு அடிபட்டு அந்தரத்திற் பறப்பதை அடுத்த படத்திற் காணலாம்.



திமிங்கிலம் மூவகையாம். திமிங்கிலத்தின் கொழுப்பும் அதன் வாயில் அமைக்கப்பட்டிருக்கும் தாடை எலும்பும் மிக விலையேறப்பெற்றவை. ஏறக்குறையப் பதினாறு அங்குலம் கனமுள்ள கொழுப்பு அடையடையாகத் திமிங்கிலத்தின் உள்தோலின்மேல் பிடித்திருக்கும். குளிர்ச்சி பொருந்திய வடசமுத்திரத்தில் வாழும் அந்தப் பிராணிகளுக்கு கொழுப்பு அனல் கொடுக்கும் ஓர் போர்வைபோலும். அக்கொழுப்பைக் கொண்டு எண்ணெயும் வர்த்தியும் செய்கிறார்கள். ஒரு திமிங்கிலத்தின் கொழுப்பை உருக்கினால் ஏறக்குறைய இருநூற்று எழுபத்தைந்து பீப்பா எண்ணெய் எடுக்கலாம். திமிங்கிலத்தின் எலும்பினால் சீப்பும் கத்திப் பிடியும் செய்வார்கள். முழு வளர்ச்சியடைந்த ஒரு திமிங்கிலத்திலிருந்து எடுக்கும் எண்ணெயும் எலும்பும் ஏறக்குறைய ஒரு லக்ஷம் ரூபாய் விலைபெறும். ஒரு டன் எடையுள்ள எலும்பின் கிரயம் இரண்டாயிரத்து நானூறு பவுண்.

திமிங்கிலத்தின் விலைமதிப்புக்காகவே அதை வேட்டையாடுகிறார்கள். எஸ்கிமோ ஜாதியாரும் அமெரிக்க இந்திய



ரும் ஜப்பானியருமே திமிங்கில வேட்டையில் பேர்பெற்ற வர்கள். திமிங்கில வேட்டைக்குச் செல்பவர்கள் முன்னு ளில் கயிற்றிலே கட்டிய எறியீட்டிகளுடன் படவுகளி லேறித் திமிங்கிலமுள்ள இடங்களுக்குச் சென்று குறிப் பாய்ப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இன்னுளில் எறி யீட்டிக்கு மாறுகத் துப்பாக்கியை உபயோகித்து வரு கிறுர்கள். திமிங்கிலம் மேலே வரும்போது ஈட்டியினுல் குத்துவார்கள், அல்லது துப்பாக்கியினுல் சுடுவார்கள்.

திமிங்கிலம் சாகாமல், காயமடைந்து நீருக்குட் செல்லுமாயின் அது மறுபடியும் மூச்சுவாங்க வெளியே வரும்போது அதை மறுபடியும் குத்துவார்கள் அல்லது சுடுவார்கள். இப்படியே அது சாகிறவரையில் தாக்குவார்கள். சில சமயங்களில் காயப்பட்ட திமிங்கிலம் வாலாற் படவுகளைப் புடைத்து ஜனங்களைச் சேதப்படுத்திக் கடலில் தள்ளி, தான் தப்பிப் பிழைப்பதுமுண்டு.

திமிங்கிலத்தின் மாமிசத்தை எஸ்கிமோ ஜாதியார் வெகு இன்பமாகத் தின்பார்கள். வட கடற்கரையோரத்திலுள்ள ஜனங்களும் அதை இன்பமான உணவாகக் கொள்வர்: நாகரிகமுள்ளவர் அதைப் புசியார்.

உற்று நோக்குமிடத்து மனிதர்க்கு தரையிலுள்ள யானை எவ்வளவு உபயோகமுள்ளதோ அதனிலும் கடலிலுள்ள திமிங்கிலம் பன்மடங்கதிகமான உபயோகமுள்ளது. இத்திறத்த பெரும் பயனுள்ள பிராணியை நமதுபயோகத்திற்கு அளித்தருளிய எல்லாம் வல்ல இறைவன் திறமையை யாவரே எடுத்துப் புகழ வல்லார்.

## 28. உத்தம நகரவாசியின் கடமை

நகரவாசி என்பான் ஒரு நகரத்தின்கண் வசித்து அந்நகரத்திற்குரிய மேன்மைகளைத் தானும் அனுபவிப்பவன். அவன் உத்தமன் என்னும் பெயர் பெறவேண்டுமாயின் தன் கடமைகளைச் செவ்வனே செலுத்தவேண்டும். அக்கடமைகளுள் முக்கியமானவை எவை என்று விசாரிப்போம்.

நல்ல உத்தியோகத்தி லமர்ந்து பொருள் சம்பாதித்து உண்டு உடுத்துப் பெண்டு பிள்ளைகளுடன் சம்பிரமமாக வாழ்பவன் உத்தம நகரவாசி ஆகான். அவன் தற்பிரியங்

கொண்ட டம்பனே தவிர வேறல்ல. ஆனால் மற்றை யோருக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை.

உத்தம நகரவாசியாவான் பொதுஜன நன்மையில் பிரிய முள்ளவனுயிருத்தல் வேண்டும். தன் சுகத்தைக் கருதாது பிறருக்கு நன்மை செய்பவனுய் இருத்தல் வேண்டும். பொது நன்மைக்காகச் செய்யப்படும் எல்லா வேலைகளிலும் அவன் சேரவேண்டும். வித்தையை விருத்திசெய்வதற்காக அநேக கலாசாலைகள் ஏற்படுத்தியிருக்கிருர்களே. அவை வளர்ந்து ஓங்குவதற்கேற்ற சாதனங்களை அவன் தேட வேண்டும். அவன் அவற்றிற்குப் பணஉதவி செய்யலாம். அடிக்கடி போய் அவ்வித்யாசாலைகளைப் பார்வையிட்டு அவற்றிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி அவற்றை நீக்குதற்குரிய மார்க்கத்தைப் போதிக்கலாம்.

அவன் சுகாதார விஷயங்களைக் கவனிக்கவேண்டும். ஏழைகள் பணக்காரர் என்ற பேதமின்றி அனைவருக்கும் பயன்படுமாறு வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின் றன. அவற்றுலுண்டாகும் பிரயோஜனத்தை இவ்வள வென்று கூறுதல் அசாத்தியம். ஆனால் சில மூடஜனங்கள் வைத்தியசாலைக்குப் போகப் பயப்படுகிருர்கள். அவர் களுக்கு வைத்தியசாலைகளாலுண்டாகும் பெருநன்மையை எடுத்துப் போதித்து அவர்கள் அங்குபோய் நன்மையடை யும்படி செய்தல் உத்தம நகரவாசியின் கடமையாகும். அவ்வைத்தியசாலைகள் தங்கடமையைத் தக்கபடி நிறை வேற்றுகின்றனவா என்று விசாரித்தறிந்து, குறைவு காணப் படுமாயின் தக்ஷணமே அதை மேலதிகாரிகட்குத் தெரிவிக் கலாம். தர்ம வைத்தியசாலைகட்குத் தம்மாலியன்ற அளவு பொருளுதவி செய்யலாம்.

உத்தம நகரவாசி, நகரத்தில் தான் வசிக்கும் பாகத்தி லுள்ள தெருக்கள் சுத்தமாயிருக்கின்றனவாவென்று பார்க்க

வேண்டும். சாக்கடைகளைக் கழுவவும் தெருக்களைப் பெருக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைக்காரர்கள் அவரவர் கடமையைச் செவ்வனே நிறைவேற்றுகிறார்களாவென்று கவனித்துக் குறைவுகளைக்குறித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். தெருக்களிலுள்ள தீபங்கள் சரியானபடி ஏற்றப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

அம்மை, விஷபேதி, கொள்ளைநோய் முதலிய கொடிய நோய்கள் எங்கேயாவது காணப்படுமாயின் அவை பரவி ஜனங்களுக்குக் கெடுதியுண்டாக்காதபடி வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும். ஒரு வீட்டிலே மேற்கூறிய நோய்களில் ஏதாவது காணப்பட்டால் அவ்வீட்டிலுள்ளவர்கள் அதைக்குறித்து ஒருவருக்கும் பெரும்பாலும் தெரிவிக்கிறதில்லை. உத்தம நகரவாசி அதைக்குறித்துக் கேள்விப்பட்டவுடன் முதலில் அவ்வீட்டிலுள்ளவர்களுக்குப் புத்தி சொல்லி நோயாளியை வைத்தியசாலைக்கனுப்ப முயலவேண்டும். பிறகு அவ்வீட்டில் மருந்தைத் தெளித்து சுத்தப்படுத்தும்படி செய்யவேண்டும்.

ராஜாங்கத்தார் பிரஜைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்துவருகின்றனர். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள், கலாசாலைகள், புகைத்தேர்ப்பாதைகள், தபாற்சாலைகள், தந்திச்சாலைகள், கைத்தொழிற்சாலைகள் முதலிய யாவும் தங்கடமையைக் குறைவறச் செலுத்திவருகின்றன என்பதை யாவரும் அறிவர். இன்னும் நமது சௌகரியத்திற்காக அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள் சொல்லி முடியா. அதற்குக் கைம்மாறாக உத்தம நகரவாசி என்ன செய்யவேண்டும்?

இக்காலத்தில் பணமில்லாமல் ஒரு காரியமும் நடவாது. துரைத்தனத்தார் குடிகளாகிய நமக்கு நன்மைசெய்ய வேண்டுமானால் அளவற்ற பொருளைச் செலவு செய்யவேண்டும்.

அவர்களுக்குப் பணம் எங்கிருந்து வரும்? துரைத்தனத்தார் செய்யும் நன்மையை யடையும் ஜனங்கள் தங்கள் வரும்படிக்குத் தக்கவாறு பொருளுதவி செய்யவேண்டும். இதற்கு வரி என்று பெயர். ஆகையால் உத்தம நகரவாசி யாவான் தன் வரும்படிக்குத் தக்கவாறு வரியைத் துரைத் தனத்தார்க்குச் செலுத்துவதும் தவிர மற்றையோரும் வரியைக் கிரமமாகச் செலுத்தும்படி செய்யவும் வேண்டும். வரி செலுத்தவேண்டியது கிரமமென்று தெரிந்திருந்தும் சிலர் வரி செலுத்தும்போது மிகவும் வருத்தப்படுகிறார்கள். ஐயோ! பாழாய்ப்போன வரிக்காரன் வருகிறானே; எல்லா வற்றிற்கும் வரி போட்டுவிட்டார்களே; நாய்க்கு வரி, மாட்டுக்கு வரி, வண்டிக்கு வரி, குதிரைக்கு வரி, வீட்டுக்கு வரி, தண்ணீருக்கு வரி, இப்படி எல்லாவற்றிற்கும் வரியாய் விட்டதேயென்று குறைகூறுவதை நாம் காதினுற் கேட்டிருக்கின்றோம். இங்ஙனம் வருத்தப்படுவோர், குழாயைத் திறந்தவுடன் நடு முற்றத்திலேயே நல்ல தண்ணீர் அகப்படுவதை யோசிக்கின்றாரா? வீதிகள் நன்றாய் அமைக்க வேண்டுமென்றும், இராக்காலங்களில் ஜனங்கள் நடமாடுவதற்குச் சௌகரியமாக வீதிகளில் தீபங்கள் ஏற்றவேண்டுமென்றும், உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும், சிறுவர்கள் சம்பளமின்றிப் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் சொல்வது நியாயமாகுமா? இவற்றிற்கெல்லாம் திரவியம் வேண்டுமே. அது எங்கிருந்து வரும்? துரைத்தனத்தார் தமது ஜனன தேசத்திலிருந்து பொருள் கொண்டுவந்து செலவுசெய்தல் சாத்தியமாகுமா? ஒருபோதும் சாத்தியமாகாது. ஆகையால் உத்தம நகரவாசி துரைத்தனத்தாரிடத்திலிருந்து அடையும் எல்லா நன்மைகளுக்கும் மூலாதாரமாயுள்ள வரியைக் கிரமமாகக் காலத்தில் செலுத்தவேண்டும்.

வரி செலுத்துவதில் நகரவாசி கவனிக்கவேண்டிய சில விஷயங்களுண்டு. ஒருவனுடைய வரும்படிக்குத் தக்க படியே வரி வாங்கவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். சில சமயங்களில் வரியை ஒருவன் செலுத்த வேறொருவன் நஷ்டமடைகிறான். வீட்டுவரி வீட்டுக்காரன் மேல் விதிக்கப்படுகிறது. அவன் வரிகட்டவேண்டி யிருப் பதால் குடிக்கூலியை அதிகப்படுத்துகிறான். ஆகையால் குடியிருப்பவனே வாஸ்தவத்தில் அவ்வரியைச் செலுத்து கிறவனாகிறான். வரியை விதிக்கும்போது உண்மையில் வரி யினால் நஷ்டமடைவோருடைய நிலைமைக்குத் தக்கபடி வரி போடவேண்டும். இதற்கு மாறாக ராஜாங்கத்தார் செய்தாலும் அதிக வரி விதித்தாலும் உடனே அதைக் குறித்து அவர்களுக்கு அறிவிப்பது உத்தம நகரவாசியின் கடமையாகும்.

நமக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்து இர க்ஷிக்கும் துரைத்தனத்தாரிடத்து நகரவாசி விசுவாசமுடை யவனா யிருத்தல்வேண்டும். ஆங்கிலேயருடைய அரசாட்சி யில் நாமடைந்திருக்கும் நன்மைகள் இன்னவையென்று முன்னமே வாசித்திருக்கிறோம். அதற்குப் பிரதியாக அவர் கள் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன? ராஜவிசுவாசமே. ஆகையால் நாம்,

‘எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு’

என்கிறபடி நாம் ராஜாங்கத்தார் நமக்குச் செய்யும் நன்றியை மறவாது அவர்பால் இடையறா அன்புடையராய் இருப் போமாக. அப்பொழுதுதான் நாமும் உத்தம நகரவாசிகளா வோம்.

## 29. டிமோஸ்தினீஸ்

கிரேக்க தேசத்திலே முற்காலத்தில் பிரசித்திபெற்ற ஓர் நாவலரிருந்தார். அவர் கேட்போர் உள்ளத்தைக் கவருமாறு பிரசங்கிப்பதில் மகா நிபுணர். அவருடைய சொல்லலங்கார சாதுரியத்தையும் சொல்வன்மையையும் வியக்காதவர் எவருமிலர். அவர் அவ்வாறு பிரசித்தியடைந்ததற்குக் காரணம் அவருடைய விடாமுயற்சியே. அவர்தாம் வாக்கு வல்லமைக்குப் பெயர் பெற்ற டிமோஸ்தினீஸ் என்பவர்.

அவர் இயற்கையிலேயே வெகு பலவீனர். அவருடைய சுவாசப்பை மிகவும் பலவீனமாயிருந்தபடியால் நெடுநேரம் பேசவாவது உரத்துப் பேசவாவது அவர் சக்தியற்றவராயிருந்தார். அதுகாரணமாக அவர் பேசும்போது இடையிடையே நிறுத்திப் பேசவேண்டியதாக விருந்தது.

மேலும் பேசும்போது தெற்றித் தெற்றிப் பேசுவது அவருக்கு சுபாவத்தில் உண்டான வழக்கம். இத்தனை குறைவுகளையுடைய அவர் பிற்காலத்தில் மிக்க கீர்த்தி பெற்றுப் பெருநாவலர் எனப்பெயர் எடுத்தது எவ்வளவு ஆச்சரியம்? அப்போது கல்லிஸ்ட் ரேற்றஸ் என்னுமொரு கலைக்கியானி கிரேக்க தேசத்தின் தலைநகரமாகிய அதென்ஸ் நகரத்தில் சிறந்த உபந்நியாசங்கள் செய்துவந்தனர். அவ்வுபந்நியாசங்களைக் கேட்ட ஜனங்கள் அவரைப் பலவாறு புகழ்ந்து தக்கபடி மரியாதை செய்தனர். அம்மகானுக்கு ஜனங்கள் செய்த மரியாதை அவரை மிகவும் தைரியப்படுத்திற்று. ஆகையால் அவரைப்போல் தாமும் பிரசித்தியடையப் பிரயத்தனப்பட்டார். பிறகு அக்கலைக்கியானி பிரசங்கிக்கும்போதெல்லாம் அவரோடு கூடவேயிருந்து அவரை முற்றிலும் பின்பற்றி அவரைப்போல் நிபுணராகவேண்டுமென்று பெருமுயற்சி செய்தார்.

முதலில் டிமோஸ்தினீஸ் செய்த உபந்நியாசம் அவருடைய போஷகர் அவருடைய ஆஸ்திவிஷயமாகச் செய்த மோசத்தை ஜனங்களறியும்படி விளக்கிக் காட்டிற்று. அவ்வுபந்நியாசத்தின் பெரும்பேருக அவருடைய பிதரார்ஜிதமான சொத்தின் ஒரு பாகம் அவருக்குக் கிடைத்தது. இவ்வாறு அனுகூலமடைந்தது அவரைப் பின்னும் முயற்சி செய்யத் தூண்டிற்று. ஆகையால் அவர் ஜனங்களுக்கு முன்னே பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஆனல் அவருடைய பிரயத்தனம் வியர்த்தமாய்ப் போயிற்று. அவர் தெற்று வாயராகையால் பேசும்போது பலவிடங்களில் தெற்றிக் கொண்டு நெடுநேரம் நிற்கவேண்டியதாயிற்று. இதைக்கண்டு ஜனங்களெல்லாம் கைகொட்டிச் சிரித்தார்கள். டிமோஸ்தினீஸ் சிறிது துக்கமடைந்தாராயினும் தைரியத்தைக் கைவிடாது தமது குறைகளையெல்லாம் நிவிர்த்திக்க முயன்ருர். சில அக்ஷரங்களை உச்சரிக்க அவரால் முடியாது. பேசும்போது தெற்றுவது அவருக்குத் தாங்கொணுத் துயரைத் தந்தது. பிரசங்கத்திற்குவேண்டிய அம்சங்கள் அவரிடத்தில் ஒன்றுமில்லை. என் செய்வார், பாவம்!

தெற்றிப் பேசுவதை நிவிர்த்திசெய்வதற்காக அவர் கடற்கரைக்குப் போய் கூழாங்கற்களை வாயில் போட்டுக் கொண்டு பேசிவந்தார். அப்படிச் செய்தமையால் அவருடைய நா நன்ருகத் திருந்தியதுமன்றி வசனிப்பதற்குரிய நரம்புகளும் மிகத் திருத்தமடைந்தன. கிரேக்க தேசத்தில் அக்காலத்தில் வெளியான விடங்களில் ஜனங்கள் கூடிப் பிரசங்கத்தைக் கேட்பார்கள். அவர்களுக்கு உரத்துப்பேச வேண்டியது அவசியம். அவ்வாறு பேசும் திறமை நமது நாவலருக்கில்லாமையால் அவர் சமுத்திரக்கரையில் நின்று, சமுத்திர கோஷத்திற்கு மேலாகத் தம்முடைய சப்தம் தொனிக்குமாறு பேசுவாராம். இது அவர் அளவிறந்த

ஜனங்கள் கேட்டு உவக்குமாறு பிற்காலத்தில் பிரசங்கித்த தற்கு உதவியாயிற்று.

அவருடைய சுவாசப்பைகள் மிக்க பலவீனமானவையா யிருந்தபடியால் அவர் செங்குத்தாயும் ஏறக் கஷ்டமாயு மிருந்த மலைகளில் ஏறி இறங்கித் தமக்கு வேண்டிய தேக அப்பியாசம் செய்துவந்தார். இதனால் அவருடைய சுவா சப்பைகள் பலமடைந்தன. அவை பலமடையவே, அவர் நிறுத்தாமலும் கஷ்டமில்லாமலும் நீண்ட வாக்கியங்களை உரைக்கத் தக்கவரானார்.

பிரசங்கத்திற்கு இன்றியமையாதது அபிநயம். பிரசங் கிப்பவர் தக்க விடங்களில் அபிநயம் செய்தால்தான் கேட் பவர்களுடைய மனதை வசிகரிக்கலாம். டிமோஸ்தினீஸ் செய்யும் அபிநயம் யாவும் அவலக்ஷணமானவைகள். மேலும் அவர் பேசும்போது ஒருவிதமாய்த் தம்முடைய தோளை அடிக்கடி நெளித்துக் குலுக்குவதுண்டு. இவற்றை நிவிர்த்திசெய்வதற்காக அவர் தம்முன் ஒரு பெரிய நிலைக் கண்ணாடியை வைத்து அதன் எதிரில் நின்று பிரசங்கித்துப் பழகினார். இவ்விதமாகச் செய்துவரவே, அவரிடத்திலிருந்த அவலக்ஷணமான அபிநயங்கள் நீங்கின. ஆனால் தோளை நெளிக்கும் வழக்கமோ நீங்கவில்லை. அதற்காக அவர் ஒருபாயம் செய்தார். தாம் பிரசங்கிக்கும்போது கூரான ஈட்டியொன்றைத் தம்முடைய தோளுக்கு நேரே கட்டித் தொங்கவிட்டார். அவர் தம்மை யறியாமல் தோளை நெளிக் கும்போதெல்லாம் அவ்வீட்டி அவரைக் காயப்படுத்திற்று. இவ்விதமாக அவர் நாளுக்குநாள் திருந்தி வந்தார். அவரு டைய தோளில் ஈட்டியாலுண்டான அடையாளங்கள் பிறகு நெடுநாள்வரையிலுங் காணப்பட்டன.

சிறந்த பிரசங்கம் செய்வதற்கு, திருஷ்டாந்தங்களும் மேற்கோள்களும் இன்றியமையாதனவென உணர்ந்து அவர்

பற்பல கிரந்தங்களை ஆராய்வாராயினர். ஒருவர் பிரசங்கம் செய்யும்போது அடிக்கடி தாம் சொல்லும் விஷயத்துக்குத் தக்கவாறு உதாரணங்களை எடுத்துக் கூறி அவற்றிற்கும் விஷயத்திற்குமுள்ள ஒற்றுமையை விளக்குவதும், சிறந்த நூல்களிலிருந்து ஆதாரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதும் பிரசங்கத்தைச் சிறப்பிக்கும் வழிகளாம். ஆகையால் அவர் அரியபெரிய நூல்களை ஆராய்ந்து தமது கல்வியறிவைப் பெரிதும் விருத்தி செய்தார். தாம் நூல்களை ஆராயும்போது சந்தடி முதலியவற்றால் யாதொரு தடையும் நேரிடாவண்ணம் நிலவறை யொன்று ஏற்படுத்திக்கொண்டார். இவ்விதமாகத் தமது புலன்களை வேறு விஷயங்களிற் செல்லவிடாது காத்து, இடைவிடாது பல நூல்களை ஆராய்ச்சி செய்து வந்தார். பின்னும் தாம் அடிக்கடி வெளியே போவதும் சிநேகிதரைக் கண்டு வீண்பொழுது போக்குவதும் தம் முயற்சிக் கிடையூறுகுமென்றெண்ணி அவ்வாறு போகாதிருக்கும்படி தமது முகத்தையும் தலையையும் பாதிவரையில் விகாரமாக க்ஷெளரம் செய்துகொண்டார். இவ்வாறு விடாமுயற்சியோடு அல்லும் பகலும் ஒரே சிந்தையாகத் தமது அறிவையும் பேசும் திறமையையும் விருத்தி செய்துகொண்டுவந்தமையால் அவர் பெயர் இன்றும் பிரசித்திபெற்று விளங்குகின்றது. 'முயற்சியுடையோன் எவற்றையும் வெல்லுவன்' என்பது இவருடைய சரித்திரத்தால் நன்கு விளங்கும். ஆகையால் நாம் எவ்வளவு ஈனஸ்திதியிலிருந்தாலும் எவ்வளவு பலவீனராயிருந்தாலும் இவர்மாதிரியைப் பின்பற்றுவோமாயின் நிச்சயமாய் நாமும் புகழுடம்புகொண்டு பூமியில் பிரசித்தி பெற்று வாழலாம்.

## 30. வாந்திபேதி

இது வருஷாவாரியில் நமது தேசத்தில் அநேக ஜனங்களைக் கொள்ளைகொள்ளும் ஓர் கொடிய தொற்று நோய். இந்தநோய் பரவியிருக்கின்றது என்று கேள்விப்பட்டவுடன் ஜனங்கள் அஞ்சி நடுங்குவார்கள். இந்த வியாதி பெரும் பாலும் இராக்காலங்களில்தான் காணும்.

ஒருவனுக்கு வாந்திபேதி காணுமாயின் அவனுக்கு ஆரம் பத்தில் கஞ்சித்தண்ணீர்போல அடிக்கடி பேதியாகும். பிறகு சிறிது வாந்தியுமாகும். இது படிப்படியாய் அதி கரித்து நீர் இறங்குவது நின்றுவிடும். அப்பால் அவனுக்கு அதிக மயக்கமுண்டாக, அவனுடல் சில்லிடும். பேதியும் வாந்தியும் சிறிது சிறிதாக ஆய்க்கொண்டே இருக்கும். பிறகு உடம்பெல்லாம் ஒருவிதமான வலிப்புக் காணும். இந்த நோய் கண்டவுடனே தக்க ஔஷதம் கொடுத்துப் பரிகரியாவிடின் இது மரணத்தை விளைவிக்கும்.

கீழ்வகுப்பைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தேக ஆரோக் கியத்தைக் கவனிக்கிறதில்லை. அழுகிப் பதங்கெட்டுப்போன மச்சமாமிசங்களைக் கொண்டுவந்து வெந்ததும் வேகாததுமாகச் சமைத்து மூக்குப் பிடிக்கச் சாப்படுகிறார்கள். அப்படிச் சமைத்த பதார்த்தத்தை இரண்டு மூன்றுநாள் வரையிலும் வைத்துச் சாப்படுகிறதுமுண்டு. இப்படிப்பட்ட செய்கைகளே இவ்வியாதிக்கு பெரும்பான்மையான காரணங்களாகும்.

நன்றாய் வேகாத கிழங்கு வகைகளையும் அழுகின பழங் களையும் சாப்படுதல் அஜீர்ணத்தை யுண்டாக்கும். அஜீர்ண முண்டாகவே பேதி ஆரம்பிக்கும்.

அநேகர் சுத்தமான ஜலத்தைப் பானம்பண்ணுகிறதில்லை. பானம்பண்ணும் ஜலம் சுத்தமாயிருக்கவேண்டும் என்கிற விஷயத்தை நம்மவர் சிறிதும் யோசிக்கிறதில்லை. இத்

தேசத்திலுள்ள சில பட்டணங்களில் இப்பொழுது தண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தண்ணீர்க் குழாய்களிலிருந்து எடுக்கப்படுகிற ஜலம் குளத்து ஜலத்தைவிடச் சுத்தமானதாயிருந்தாலும், மிக்க சுத்தமானதென்று சொல்லுவதற்கிடமில்லை. சில சமயங்களில், குழாய் ஜலத்தோடு, சேறும் பூச்சியும் புழுவும் வருவதை நாம் காண்கிறோம். அந்த ஜலத்தை நன்றாய் வடிகட்டி காய்ச்சி ஆறவைத்துச் சாப்படுவதுதான் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும். குளம் குட்டைகளிலுள்ள அழுக்கு ஜலத்தைக் குடிப்பதினாலும் வாந்திபேதியுண்டாகும். சில குளங்களில் எருமைக்கடாக்கள் கிடந்து புரளுவதையும், அழுக்குத் துணிகளைத் தோய்ப்பதையும் கண்டிருந்தும் அவற்றின் அருகிலுள்ளோர் அந்நீரையே பானம்பண்ணுகின்றனர். இது எவ்வளவு பேதமை?

இந்த ரோகிகளுடைய வாந்தி, பேதி முதலிய அழுக்குப்பட்ட துணிகளை வீட்டுக் கிணறுகளினருகில் தோய்த்துக் கசக்க, பாய் படுக்கைகளை அலம்ப, அவைகளிலுள்ள கல்மஷங்கள் நிலத்தில் சுவறிக் கிணற்று நீரில் கலக்கும். துணிகளைக் கசக்குகிறவர்களுடைய கைகளிலிருந்து அவர்கள் தொட்டுத் தூக்கும் தாம்புக்கயிறுகளிலும், பாத்திரங்களிலும் கண்ணுக்குப் புலப்படாமல் ஒட்டியிருக்கும் கல்மஷங்கள் கிணற்று நீரில் கலந்துபோகும். அந்நீரைக் குடிப்பவர்களுக்கும் அவ்வியாதி காணும். இவ்வாறு சில வீடுகளில் அனைவரும் மரிக்கிறார்கள். இவ்வண்ணமே, ஓர் ஊரில் குளம் குட்டைகளில் இக்கல்மஷங்கள் கலக்குமாயின், அவைகளின் நீரைக் குடிக்கும் ஊரார் அநேகருக்கு இக்கொள்ளை நோய்க் காணும்.

பேதியினாலுண்டான அழுக்கு வெயிலிலுலர்ந்து, காற்றிலடிபட்டு, ஆகாயத்திற் பரவி, சுத்தமான ஆகாயத்தை அசுத்

தப்படுத்துவதுமுண்டு. அவ்விதமான காற்றை உட்கொள்வதனுலும் இந்நோயுண்டாகும். இந்த வியாதி காண்பவர்கள் வலுவுடையவர்களாயிருந்தால் சில சமயங்களில் பிழைத்தல் கூடும். பலவீனர்கள் பிழைப்பதரிது. ஆகையால் இவ்வியாதி நம்மை அணுகாதபடி நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

இந்நோயுள்ளவர்களைத் தனிப்படுத்தி வைக்கவேண்டும். அவர்களுக்குப் பணிவிடை செய்பவர்கள் குடிப்பதற்காக வைத்திருக்கும் நீரையும், உணவையும், வீட்டில் உபயோகிக்கும் பாத்திரங்களையும் தொடாமல் இருக்கவேண்டும். தாங்களும் உடுத்தி இருந்த துணிகளைக் களைந்து, தங்களிடம் ஒட்டியிருக்கக்கூடிய கல்மஷங்களை நீக்கத்தக்க சுத்திசெய்யும் பொருள்களைக்கொண்டு சரீரத்தை நன்ருய்ச் சுத்தி செய்துகொண்ட பிறகு சாப்படவேண்டும். இவ்வியாதியுள்ளவர்கள் இருக்குமிடங்களிலும், வியாதியைத் தொற்ற வைக்கும் ஈக்கள் மொய்க்கிற இடங்களிலும், நாம் குடிக்கும் நீரையும் உட்கொள்ளும் ஆகாரத்தையும் வைக்காமல், சுத்தமாயிருக்கும்படி காப்பாற்றிக்கொண்டோமாகில், இவ்வியாதி பெரும்பாலும் தொற்ருது. காற்றின் மூலமாய் இவ்வியாதியின் கல்மஷங்களைப் பறக்கவிடாமலும், சுத்திசெய்யாத தரையை துடைப்பமிட்டுப் பெருக்கி கல்மஷங்கள் கலந்த தும்பு தூசிகளைக் கிளப்பாமலும் இருந்தால், காற்றின் மூலமாயும் இவ்வியாதி பரவாமல் நாம் காத்துக்கொள்ளக்கூடும். நோயாளிகளின் பாய் படுக்கை, துணி முதலியவற்றையும், கல்மஷங்களையும் எரித்துவிடவேண்டும். கல்மஷங்கள் சுவறின தரையையும் நன்ருய்ச் சுத்திசெய்யவேண்டும்; அல்லது வைக்கோல் முதலானவையைப் போட்டுச் சுட்டுவிடவேண்டும். இவ்விதமான ஜாக்கிரதையுடன் இருந்தால் இந்நோய் தொற்றிக்கொள்ளுமோ என்று பயப்பட வேண்டியதில்லை.

மேலும், முக்கியமாய் நாம் தேகத்தை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். வாந்திபேதி பரவியிருக்கும் காலத்தில் இராக்காலங்களில் நெடுநேரம் விழித்திருப்பதும் தேகத்தைப் பலவீனப்படுத்துதலும் கூடாது. தேகம் இளைப் படைந்து இருந்தால், இந்நோய்க்கு எளிதில் இடம் கொடுக்கும். ஜனக்கூட்டமான இடங்களுக்கும் அதிகமாகப் போகக் கூடாது. ஆரோக்கியமான ஆகாரத்தை உட்கொண்டு சீக்கிரத்தில் சயனித்துக்கொள்ளவேண்டும். சாப்படும்போது அதிகமாகச் சாப்படாமல் மிதமாகப் போஜனம் செய்தல் வேண்டும். ஆகாரத்தை உட்கொள்ளாது பட்டினியாக விருத்தல் ஒருபோதும் தகாது. இளைப்பைத் தரத்தக்க எந்த வேலையையும் செய்யலாகாது.

பழைய சாதம், நன்ருய்க் கனியாத பழவர்க்கம், அழுகிப் போன மாமிசம், மீன், முட்டை முதலியவற்றை முற்றிலும் நீக்கவேண்டும். இன்னும் நன்ருய் ஆராயுமிடத்து, விரைவில் ஜீர்ணமாகாத எந்த வஸ்துவையும் நீக்கிவைத்தலே நலமாகும்.

போஜனம் செய்யும்போது நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. சிலர் காலக்கிரமமொன்று ஏற்படுத்திக்கொள்ளாது வேண்டும்போதெல்லாம் சாப்படுகிருர்கள். இது பெருங்கேட்டை விளைவிக்கும். குறிப்பாய்க் காலங்களை ஏற்படுத்திக்கொண்டு அவ்வேளை தவருது புசிக்கவேண்டும். நமது தேகத்திற்கு சூடுண்டாக்கக்கூடிய உடைகளையே உடுக்கவேண்டும். வயிற்றைக் கம்பளியால் சுற்றிவைத்தல் இந்நோயைத் தடுப்பதற்கேற்ற வழியாகும்.

நமது வீடு வாசல்களையும், தோட்டம் துரவுகளையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். வீட்டினருகிலும் உட்புறத்திலும் குப்பை கூளங்களைச் சேர்த்துவைப்பது நல்லதல்ல. வீட்டிலுள்ள ஜலதாரைகளும் வீட்டுமுற்றமும்

நன்றாய்ச் சுத்தப்படுத்தப்படவேண்டும். வீட்டை வெள்ளை யடிப்பது மிகவும் நல்லது.

வீட்டிற்குக் கிட்டவாவது உட்புறத்திலாவது மலமூத் திராதிகள் சேரவிடாது பார்த்துக்கொள்ளவேண்டியது. அசுசியே இந்நோய்க்குக் காரணமாகிறது.

'பத்திக்கடுத்தது சுத்தி' யென்பர் மூதறிவாளர். ஆகை யால் நாம் எவ்விதத்திலும் சுத்தியாயிருந்தால் இந்நோய் நம்மை அணுகாது.

சிலர் வாந்திபேதி ஏதோ துஷ்ட தேவதையின் கோபா வேசத்தாலுண்டாகிறதென்று கொண்டு அத்தேவதைக்குப் பெரும்பொங்கலிட்டு, ஆடு கோழிகள் வெட்டி அதிகச் சந்தடி செய்கின்றனர். அப்படிச் செய்வதனால் அந்த வியாதி நிவாரணமாகிவிடுமென்பதும் பரவாது ஒழிந்துபோமென் பதும் அவர்கள் கொள்கை. இது வெகு மூடத்தனம். நாம் மேற்கூறிய உபாயங்களை அனுசரித்து நடந்தாலொழிய அது நீங்காது. எல்லாவற்றிற்கும் மேலாக சர்வேசுவரனாகிய கடவுளுடைய கிருபையை நாம் தேடவேண்டும்.

'நோய்க் கிடங்கொடேல்'



## 31. ஒழுக்கெறும்பு

மிருகஜாதிகளுள் சிங்கம், புலி, யானை, கரடி என்னும் இவைகளை சண்டையில் பின்வாங்காது நின்று தங்களுடைய பிராணனைக் காத்துக்கொள்ளக்கூடியவை என்று நாம்

நினைக்கிறோம். இந்த ஜந்துக்களின் உடல்கள் பருமனுக்கும் பலத்திற்கும் உரிய சாமர்த்தியம் மிகச் சிறிய பிராணிகளுக்குள்ள சாமர்த்தியத்திற்கும் மனோசக்திக்கும் ஈடாக மாட்டா. அச்சிறிய பிராணிகள் பெருந்தொகையாய்ச் சேருமாயின் அவற்றின் வல்லமை எவராலும் சொல்ல அரியதாகும்.

எல்லாப் பிராணிகளிலும் எதிர்க்கக்கூடாத பிராணி எதுவென்று கேட்டால், ஒழுக்கெறும்பே என்று உறுதியாகச் சொல்லலாம்.

மத்திய ஆபிரிக்காவிலுள்ள பள்ளத்தாக்கில் ஒழுக்கெறும்பு பிரயாணம் செய்யும்பொருட்டுக் கூட்டமாகக் கூடும். அப்படி அவை கூடி ஒன்றின் பின்னொன்றாகச் சேனை செல்வதுபோல ஒழுங்காய்ச் செல்லும்போது பார்த்தால் ஒரு நீண்ட கறுத்த பட்டு நாடாவைத் தண்ணீரில் நனைத்து நிலத்தில் வைத்திருப்பதுபோல் தோன்றும். அவை எங்கிருந்து வருகின்றனவென்றும் எங்கே போகின்றனவென்றும் யாருக்கும் தெரியாது. அவற்றை ஒருவராலும் நிறுத்த முடியாது; அவை செல்லும் பாதையிலிருந்து விலகி வேறு வழியாகச் செல்லும்படி செய்யவும் இயலாது. உயிரில்லாத ஏதாவதொரு வஸ்து அவை செல்லும் பாதையைத் தடை செய்யுமாயின் அவை அவ்வஸ்துவைப் புரட்டித் தள்ளிவிட்டுச் செல்லும்; அல்லது அதின் மேலேறியாவது கீழே நுழைந்தாவது போகும். உயிருள்ள பிராணி தடை செய்யுமாயின் அவை தமது கூட்டத்தாரிற் சிலரை யனுப்பி அதை முற்றும் கொன்று தின்னும்வரையில் சண்டையிடச் செய்யும்; எறும்புச் சேனையின் பெரும்பாகம் அமைதியாகத் தம் வழியே செல்லும்.

அவை செல்லும் வழியில் ஒரு குளமாவது ஆறுவது குறுக்கிட்டால் அவற்றைத் தாண்டிச் செல்வதற்கு என்ன

உபாயம் செய்யலாமென்று யோசிப்பதற்காக அவை தண்ணீரினருகில் கூடிக் கும்பலாய் நிற்கும். என்ன செய்வதென்று தீர்மானித்துக்கொண்டபின்பு அவை அவ்விடத்தை விட்டகன்று நீருட் பிரவேசிக்கும். அப்படிப் பிரவேசிக்குங்கால் ஆயிரக்கணக்கான எறும்புகள் சாகும். ஆயினும் அவை போய்க்கொண்டேயிருக்கும். போகும்போது இறந்து மிதந்துகொண்டிருக்கும் எறும்புகளுடைய உடல்களின்மேல் ஊர்ந்துபோய்த் தாம் குறித்த விடத்தைச் சேரும். சிங்கம், யானை முதலிய விலங்குகளைக் கண்டஞ்சி மனிதனும் வழி விலகவேண்டியதுதான். மத்திய ஆபிரிக்காவிலுள்ள 'பாமுெறற்ஸ்' நாட்டவர்கள் ஒருவனைக் கொல்ல வேண்டுமானால் அவன் தேகம் முழுவதும் ஒருவிதமான கொழுப்பைத் தடவி இவ்வெறும்புகள் செல்லும் வழியில் அவனைக் கட்டிப்போடுவார்கள். அவை அவனைக் கொன்றுவிடும்.

## 32. குயினீன் என்னும் ஔஷதத்தின் பிரயோஜனம்

மலேறியாக் காய்ச்சல் என்று சொல்லப்படுகிற ஜுரத்தை குயினீன் என்னும் சிறந்த ஔஷதத்தைக்கொண்டு சொஸ்தப்படுத்துவதைப்பற்றி ஓர் அமெரிக்கா பத்திரிகையில் மிகவும் அருமையான சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

ரோமாபுரியைச் சுற்றியுள்ள காம்பாக்ஞ என்னும் அசௌக்கியமான வெளிநிலத்தைக் குடியிருப்புக்கேற்றதாகச் செய்ததும் அந்த ஔஷதந்தானென்று அப்பத்திரிகை கூறுகின்றது. காம்பாக்ஞ என்பது ரோமாபுரியைச் சூழ்ந்

துள்ள ஓர் பெரிய வெளியிடம். அது செழிப்பும் நீர்வளமு முள்ளது. அங்கு விளையும் பொருட்களை விற்பதற்கு ரோமா புரியின் மத்தியில் ஒரு சந்தையுண்டு. ஒரு காலத்தில் அதில் ஜனங்கள் மிகவும் நெருக்கமாகக் குடியிருந்தனர்; இப்பொழுது அது வெட்டவெளியாக விருக்கிறது. அதில் பத்திலொரு பாகங்கூடப் பயிரிடப்படவில்லை. கோடைகாலத் தில் மலேறியா ஜுரம் விசேஷமாகப் பரவுவதே அது அந்த ஸ்திதியிலிருப்பதற்குக் காரணம். மாரிகாலத்தில் அது வாசஞ்செய்வதற் கேற்றதாகிறது; அப்பொழுது இடையர் கள் தங்கள் ஆடுமாடுகளை அங்கு மேய்ப்பதற்காக ஓட்டிக் கொண்டு போவார்கள்; மே மாதத்தில் அவர்கள் பழையபடி சௌக்கியமான விடத்தை நோக்கிச் செல்வர்.

முற்காலத்திலும் காம்பாக்னுவில் மலேறியா ஜுரமிருந் தது; ஜனத்தொகை அப்போது அதிகமாயிருந்தமையால் அது பரவுவதற்குச் சாத்தியப்படவில்லை. எங்கும் ஜனங் கள் குடியிருந்தமையால் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு இடமில்லை. பிறகு சில முரட்டு ஜாதியார் அங்குப் படை யெடுத்து வரவே ஜனங்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கினர். பிற்காலத்தில் ராஜாங்கத்தாரும், சில பரோபகார சிந்தை யுடைய பிரபுக்களும் காம்பாக்னுவில் ஜனங்களைக் கொண்டு வந்து குடியேற்ற முயன்றும் பயன்படவில்லை; அந்த சமயத்தில் அநேகர் இறந்தனர். சொந்தக்காரராற் பயிரிடப் படாது சும்மாக் கிடக்கும் நிலங்களை ராஜாங்கத்தார் சுவா தீனஞ் செய்துகொள்வதாகவும் விளம்பரம் செய்தனர். பயிரிடும் ஜனங்களைக் கொண்டுவந்து குடியேற்றவும் அவர் களுக்கு இக்கொடிய வியாதி வராது தடுக்கவும் நிலத்திற்குச் சொந்தக்காரர் தம்மாற் கூடியளவு பிரயத்தனப்பட்டனர். யூக்காலிப்டஸ் செடிகளை விசேஷமாகப் பயிரிடுவதினால் ஜுரம் நிவாரணமாகுமென்று ஒரு காலத்தில் ஜனங்கள்

நம்பினார்கள்; பிறகு அதனாற் பிரயோஜனமில்லையென்று கண்டார்கள்.

1900-ஆம் முதல், காம்பாக்னாவில் ஜுரத்தால் அவஸ்தைப்படுபவர்களுக்கு சிகிச்சைசெய்யும்பொருட்டு இத்தாலிய சிகிச்சா சங்கத்தார் அங்கங்கு பல வைத்தியசாலைகளை ஸ்தாபித்தனர். கொசுக்களினாற்றான் மலேறியா ஜுரம் பரவுகிறதென்ற கோட்பாடும் ஏறக்குறைய இக்காலத்திற்றான் வெளிப்பட்டது. ஆகையால் வீடுகளுக்குத் தட்டிகட்டுதல் உசிதமென்று சிலர் அபிப்பிராயப்பட்டனர். ராஜாங்கத்தாரும், புகைத்தேர்ப்பாதையை ஸ்தாபித்து நடத்தும் சங்கங்களும் குடியானவர்களும் தத்தமக்குரிய கட்டடங்களுக்குத் தட்டிகளைக் கட்டினார்கள்; இதனால் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை.

கடைசியாக ரோமாபுரிச் சர்வகலாசாலையைச் சேர்ந்த சுகாதார சங்கத்தின் மேலதிகாரியாகிய ஸெல்லி பண்டிதருடைய பெருமுயற்சியினால் ராஜாங்கத்தார் குயினீன் என்னும் ஔஷதத்தை உபயோகிக்கத் தொடங்கினர். அதன் உபயோகத்தை அவர்கள் முன்னரே யறிந்திருந்தும் அது விலையேறப்பெற்ற சரக்காதலால் அதை உபயோகப்படுத்தவில்லை. பிறகு அவர்கள் தாமே தமக்கு வேண்டிய குயினீனைச் செய்துகொள்ளத் தீர்மானித்தனர். அப்பால், மலேறியா ஜுரத்தால் வருந்தும் குடியானவர்களுக்கு ராஜாங்கத்தார் குயினீன் செலவின்றிக் கொடுக்க வேண்டுமென்றும், அதிகமாக வேலைக்காரரை வைத்து வேலைசெய்விக்கும் எஜமானரும் அவ்வாறு செய்யவேண்டுமென்றும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன் பலனாய்ப் படிப்படியாகக் குறைந்து முன்னே நூற்றுக்கு முப்பத்தொரு பேருக்கு வருவதாகக் காணப்பட்ட மலேறியா ஜுரம், 1900-ஆம்

முதல் 1906-ஆம் வரையில் நூற்றுக்கு மூன்றரைப்பேருக்கு வருவதாக கணக்கிடப்பட்டது. 1906-ஆம்த்திற்குப் பின் அந்நோய் இன்னும் குறைவுபட்டு வருகிறது. காம்பாக்னு வின் நிலைமை மாறிவிட்டது. இனிமேல் அங்கு பயிர்த் தொழில் விருத்தியாகு மென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை.



## 33. குமாரனும் அடிமையும்

பண்டைக் காலத்திலிருந்த எபிரேயருக்குள் மிக்க தனி கனுக ஓர் வர்த்தகனிருந்தான். அவனிடத்திலிருந்த அள வற்ற செல்வத்தை அவனும் அவன் பந்துமித்திரரும் இஷ் டப்படி அனுபவித்து இன்புற்றிருந்தனர். அவனுக்கு ஓர் குமாரனிருந்தான். ஏகபுத்திரனுகையால் தந்தை அவனி டத்தில் மிக்க அன்புள்ளவனுயிருந்தான்.

புத்திரன் வளர்ந்து பெரியவனானபொழுது ஒருநாள் அவன் தந்தைபாற் சென்று: 'தந்தாய்! யான் இதுவரையிலும் சிறியனா யிருந்தமையால் தங்களுடனே வீட்டிலேயே யிருந்து சகலவிதமான சுகங்களையும் அனுபவித்தேன். இப்பொழுது எனக்குத் தக்க பருவம் வந்துவிட்டது. யான் பிறதேசங்களில் சஞ்சாரஞ் செய்து நாடு நகரங்களையெல்லாம் பார்த்து ஆனந்திக்கவேண்டுமென்று ஆசைகொண்டிருக்கின்றேன். ஆகையால் யான் பிறதேச யாத்திரை போய்வர உத்தரவு தருவதுமன்றி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையுஞ் செய்யவேண்டும்' என்றனன். தந்தையும் அதற்கியைந்து அவன் பிரயாணஞ் செய்வதற்காக ஒரு கப்பலை விலைக்கு வாங்கி அதற்கு வேண்டிய சாமான்களையும் சித்தம்செய்து தன்னருமைத் திருமகனை தேச சஞ்சாரஞ் செய்யுமாறு அனுப்பினான்.

யாத்திரைசெய்யப் புறப்பட்ட புத்திரன் பல தேசங்களுக்குச் சென்று அங்கங்குள்ள விநோதக் காட்சிகளைக் கண்டு களிப்பானாயினன். அவன் பிறதேசங்களில் அவ்வாறு காலங்கழித்துக்கொண்டிருக்கும்போது அவனுடைய தந்தை திடீரென்று இறந்துவிட்டான். அவன் யாரும் எதிர்பாராத வண்ணம் இறந்துவிட்டமையால் தன்னுடைய சொத்துக்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்வதற்கு அவனாற் சாத்தியப்படவில்லை. ஆகையால் அவனுடைய வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த அடிமை யொருவன் தானே வர்த்தகனுக்குக் குமாரனென்று கூறி அவனுடைய சொத்துக்கள் யாவற்றையும் சுவாதீனம் செய்துகொண்டான். வர்த்தகன் அவ்வடிமையிடத்தில் மிக்க பிரீதியாய் இருந்தமையால் அவன் செய்கையைக்குறித்து யாரும் சந்தேகப்படவில்லை. அடிமையும் தான் கைக்கொண்ட திரவியமனைத்தையும்

வைத்துக்கொண்டு மிக்க ஆடம்பரமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். இவ்வாறு பத்து வருஷங்கள் கழிந்தன.

இது இப்படியிருக்க தேசசஞ்சாரஞ் செய்யுமாறு சென்ற வர்த்தகனுடைய குமாரன் பற்பல தேசங்களுக்குச் சென்று பெரும்பொருள் சம்பாதித்துக்கொண்டு திரும்பிவரும்போது அவனுடைய கப்பல் முழுகிப்போய்விட்டது; அவனுடைய திரவியமனைத்தும் திரை கடலில் தொலைந்தது. அவன்மாத்திரம் தப்பிப் பிழைத்து வீடுவந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் வர்த்தகனுடைய சொத்துக்களுக்கெல்லாம் அதிபதியாக விருந்த அடிமை அவனை நோக்கி, 'நீ மோசக்காரன்: நானே வர்த்தகனுடைய புத்திரன், உனக்குச் சொத்துகளில் உரிமையொன்றுமில்லை, ஓடிப்போ' என்று சொல்லி அவனை அடித்துத் துரத்திவிட்டான்.

உடனே வர்த்தகனுடைய குமாரன் நியாயாதிபதியிடத்திற்போய் நடந்தவற்றையெல்லாம் விளங்கச் சொல்லித் தனக்கு நியாயங் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். நியாயாதிபதி அடிமையை வரவழைத்து விசாரித்தான். அவனோ தானே குமாரனென்றும் வர்த்தகனுடைய சொத்தெல்லாம் தனக்குரியதென்றும் சாதித்தான். நியாயாதிபதி இருவர் வாய்ச்சொல்லையுங் கேட்டபின் அவர்களைப் பார்த்து 'வர்த்தகனுடைய கல்லறையைத் தேடிக் கண்டுபிடித்துத் தோண்டி அவனுடைய எலும்புகளை எடுத்து வாருங்கள்; அவன் மரணசாதனம் செய்யாது இறந்துவிட்ட குற்றத்திற்காக நான் அவற்றைச் சுட்டெரிக்கவேண்டும்' என்றான்.

அடிமை அந்தக்ஷணமே அவற்றைத் தேடி எடுத்துக் கொண்டுவரப் புறப்பட்டான். 'குமாரனே, வேண்டாம், சற்றுப் பொறு, எல்லாத் திரவியத்தையும் நீயே வைத்துக் கொள், என்னுடைய தந்தையின் எலும்புகளைத் தீட்டுப்

படுத்தவேண்டாம்' என்றான். உடனே நியாயாதிபதி தந்தைபால் அவன் காட்டிய பக்தியைக் கண்டு அவனைப் பார்த்து 'நீயே அவனுடைய குமாரன், இவன் தன் வாழ்நாள் முற்றும் உனக்கு அடிமையாக விருக்கவேண்டும்' என்று தீர்ப்புச் செய்தான்.

## 34. எலிஸபெத் பிறை

இப்பெயர்கொண்ட மாதரசி சிறைச்சாலைகளைச் சீர்ப்படுத்தும் விஷயமாக மிக்க ஊக்கத்தோடு பாடுபட்ட வெகு சிறந்த உபகாரியாதலால் அவளுடைய சரித்திரத்தை நாம் அறியவேண்டியது அவசியம். அம்மாது சிரோமணி 'குவேக்கர்கள்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவள். அவ்வகுப்பார் மிக்க கல்வி யறிவுடையவர்கள்; கிறிஸ்து மதாபிமானம் விளங்கப் பெற்றவர்கள்; வள்ளன்மையும் நன்மை செய்வதிற் பிரியமும் அவர்களிடத்திலுண்டு. எலிஸபெத் பிறையின் குடும்பம் சிறப்பும் சீர்மையுமுள்ளது; அக்குடும்பத்திலுள்ள பெண்கள் சுறுசுறுப்பும் துடியாட்டக்குணமுமுடையவர்கள்.

அக்குடும்பம் மிகவும் பெரியது. ஜான் கர்ணியும் அவருடைய மனைவியாகிய காதறயின் பேல்லுமே அக்குடும்பத்திற்குரியவர்கள். அவர்கள் 'நார்விக்' என்னும் பழைய பட்டணத்திலே வசித்துக்கொண்டிருந்தனர். மனைவி அகால மரணமடையவே கணவனும் பதினொரு பிள்ளைகளும் அவளுடைய மரணத்தைக்குறித்து வருந்துவாராயினர். அப்பதினொரு பிள்ளைகளுள் பெண்கள் ஏழுபேர்.

அப்பெண்கள் சாதாரணமானவர்களல்ல. அழகும் திடமும் ஊக்கமும் கரவடமின்மையும் தைரியமும் அமையப் பெற்றவர்கள். சோம்பல், விபரீதபுத்தி, அதைர்யம்



முதலிய துர்க்குணங்கள் அவர்களிடத்திற் சிறிதும் காணப் படா. இளம்பருவத்திற்குரிய உற்சாகம் அவர்களிடத்தில் அதிகரித்திருந்தது. அவர்களுக்குக் களியாட்டில் வெகு

பிரீதி. தேகபலமும் உற்சாகமுமுடைய அவர்கள் கன்னிகைகளுக்கு இன்பத்தைத் தரக்கூடிய மிகச் சிறிய விஷயங்களிலும் மிக்க விருப்புடையவர்களாயிருந்தனர். நடனம் செய்வது அவர்களுக்கு மிகவும் சந்தோஷமான விஷயம். மிக்க தைரியமாய்க் குதிரைமேற் சாரிசெய்வார்கள். சுருங்கச் சொல்லின், உண்மையான ஸ்திரீகளேயும் புஜபல பராக்கிரமம் பொருந்திய புருஷர்களேயுமுடைய ஒரு சந்ததிக்குத் தகுந்த தாய்மாராவதற்குரிய தேகசௌக்கியம், சந்தோஷம், துடியாட்டம் முதலிய குணங்களேயுடைய பெண்களாயிருந்தார்கள். அவ்வேழு பெண்களுள் எலிஸபெத் ஒருத்தி. சிறுவயதில் அவள் தன் சகோதரிகளேப்போலவே இருந்தாலும் பிறகு வளர வளர அவள் பிரத்தியேகமான குணங்களேயுடையவளாகக் காணப்பட்டாள். பதினெட்டு வயதுவரையிலும் அவள் மற்றைப் பெண்களேப்போலவே நடனம் செய்தல், பந்து விளேயாடல், குதிரைச்சாரி செய்தல், உடன்பிறந்தாரோடு உலாப்போதல் முதலிய விஷயங்களில் மிக்க இன்பமாய்க் காலங்கழித்தனள். ஆயினும் பிறர்துன்பங் கண்டு பொறுக்கமாட்டாமையாகிய ஓர் சிறந்த குணம் பதினைந்து வயதாவதற்கு முன்னமே அவளிடத்தில் அதிகமாகக் காணப்பட்டு வந்தது. அக்காலத்தில் அங்குள்ள சிறைச்சாலைக்குத் தந்தை தன்னை அழைத்துப்போக, கைதிகளாய் அடைபட்டிருக்கும் ஸ்திரீகளேத் தனக்குக் காட்டவேண்டுமென்று அவள் தன் தந்தையைப் பலமுறை கேட்டதுண்டு. அவர் அவ்வளவு இளம் பருவமுடைய ஒரு பெண்ணை மனதை முற்றிலும் கெடுத்துவிடக்கூடிய அப்படிப்பட்ட குற்றவாளிகளான ஸ்திரீகள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பவில்லே. ஆயினும் பலமுறை அவள் கேட்டுக்கொண்டமையால் அவர் இணங்க வேண்டியதாயிற்று. எலிஸபெத் தன் தந்தையின்

கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கைதிகளின் முகத்தைப் பார்த்த வண்ணமாகவே சென்றாள். வீட்டுக்கு வந்தபின் தன் வாழ்வையுங் கைதிகளுடைய வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்து 'உலகம் இப்படிப்பட்டதாக விருந்தால் கடவுள் எங்கே?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டனள்.

எலிஸபெத் மிக்க நாணமும் அடக்கமுமுடையவள். சிறு பெண்ணாகவிருந்தபோது அவளிடத்தில் விசேஷ சக்தியாவது திடமான மனதாவது இருந்ததாகத் தெரியவில்லை. படிப்பில் அவளுக்கு இஷ்டமில்லை. ஆகையால் அவளுடைய கல்வியறிவு மட்டுத்தான். ஊக்கமும் கருணையுமே அவளிடத்திற் காணப்பட்ட இரண்டு விசேஷ குணங்கள். அவள் பெற்றோரை மிகவுங் கனம்பண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து மற்றைப் பிள்ளைகளைப்பார்க்கிலும் அன்பாய் அவர்களை நடத்திவந்தாள். ராகேல் என்னும் சகோதரியைப்போல அவ்வளவு அழகுடையவளல்ல வென்றாலும், எலிஸபெத் தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும் மிக்க சாதுவாகக் காணப்பட்டாள்.

இப்படிப்பட்ட அற்புதமான குணங்களுடைய எலிஸபெத்தின் வாழ்நாளில் அவளுடைய சுபாவத்தை முற்றிலும் மாற்றிவிட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒருநாள் அவள் உவில்லியம் ஸேவறி என்பவர் செய்த பிரசங்கத்தைக் கேட்கச் சென்றாள். அந்த நிமிஷம் தொடங்கி அவளுடைய உள்ளம் முற்றிலும் மாறுதலடைந்தது. அவளுடைய மதாபிமானம் நாளுக்குநாள் அதிகரித்தது. அதுமுதல் அவள் தன் சகோதரிகள் நடனம் செய்யும்போது அவர்களோடு சேருவதில்லை. பாடுவதை முற்றிலும் விட்டுவிட்டாள். மிகவும் சாதாரணமான உடுப்பைத் தரித்துக் கொண்டு அதிகமாய்ப் பேசாது வெகு அமைதியாயிருந்தாள்.

இவ்விதமான நன்னடக்கையை அவள் அனுசரிக்கவே அவளுடைய நடத்தை மிகத் திருத்தமடைந்து. அவள் சுறுசுறுப்பும் தர்மசிந்தையும் எல்லாரிடத்திலு மன்புமுடையவள். வேதாகமத்தைக் கிரமமாய் வாசிப்பதும் நோயாளிகளையும் ஏழைகளையும் சந்தித்துத் தேறுதல் சொல்வதுமே அவளுடைய வாழ்நாளின் நோக்கமாயிற்று. அவளடைந்த மாறுதலை உற்று நோக்கும்போது சர்வவல்லமையுள்ள தேவன் அவளிடத்தில் கிருபைசெய்து அவளை ஒரு புதிய வாழ்க்கைக்கு சித்தப்படுத்துவதாகக் காணப்பட்டது. பிறகு தந்தையின் உத்தரவோடு தான் அறிய வேண்டிய எல்லாவற்றையும் நேரிற் பரீக்ஷித்து நன்மையானவற்றைக் கைக்கொள்ளும்பொருட்டு லண்டன் நகரத்திற்குச் சென்றாள்.

அப்பால் அவளுக்கு விவாகமாயிற்று. லண்டன் நகரத்துச் சிறந்த வர்த்தகரிலொருவராகிய ஜான் பிறை என்பவர் அவளை விவாகம் செய்துகொண்டார். எலிஸபெத் அவருக்கு மனைவியாகி பல பிள்ளைகளைப் பெற்ற பின்புதான் உலகத்திற்கு பெருநன்மையளித்த தன்னுடைய பெரிய வேலை இன்னதென்று தானே கண்டறிந்தாள்.

பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாகத்திலும் சிறைச்சாலைகள் மிக ஒழுங்கீனமான நிலையிலிருந்தன. ஆகாரமின்மையால் அநேக கைதிகளிறந்தனர். நோயாளிகட்கென்று பிரத்தியேகமாக இடம் ஏற்படுத்தப்படவில்லை. நோயுற்றவர்களும் நோயற்றவர்களும் ஒரே அறையில் அடைக்கப்பட்டனர். அவ்வறைகள் மிகவும் அசுத்தமாக விருந்தன. சிறைச்சாலைகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் வெகுதூரத்தில் வசித்துக்கொண்டிருந்தனர். ஒருமுறை ஒரு சிறைச்சாலையில் நெருப்புப் பற்றிய போது உத்தியோகஸ்தர் கிட்ட இல்லாமையால் அநேகர்

இறக்க நேர்ந்தது. நோயாளிகளான பெண்களுக்குப் படுக்கையில்லை; அநேக ஸ்திரீகள் பளுவான சங்கிலிகளை மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டார்கள்.

சிறைச்சாலைகளில் காற்றோட்டம் கிடையாது. அதுகாரணமாக அநேகர் இறந்தனர். ஐந்நூறு பேருக்கென்று ஏற்படுத்தப்பட்ட சிறைச்சாலையில் சுமார் எண்ணூறுபேரை அடைத்தார்கள். இளைஞரும், முதியோரும், குற்றவாளிகளும், பயித்தியக்காரரும், கடன்காரரும், ஒன்றாய் அடைக்கப்பட்டார்கள். லஞ்சமும் அக்கிரமமும் எங்கும் அதிகரித்தது. சில சிறு குற்றங்களுக்கும் மரணதண்டனையே விதிக்கப்பட்டது. ஒன்பது வயதுள்ள ஒரு பிள்ளை ஜன்னல் வழியாக ஒரு குச்சியைவிட்டு இரண்டணு விலையுள்ள வர்ணத்தைத் திருடினதற்காக மரணத்தீர்ப்புப் பெற்றான். பிறகு அத்தண்டனை மாற்றப்பட்டது.

இப்படிப்பட்ட சிறைச்சாலைகளைத்தான் எலிஸபெத் பிறை சீர்ப்படுத்தப் பிரயாசப்பட்டாள். சிறைச்சாலைகளிற் புகுந்து கைதிகளைச் சீர்ப்படுத்தவாவது, கடமைகளைச் செய்யாமல் தவறி நடக்கும் சிறைச்சாலை உத்தியோகஸ்தரை தண்டிக்கவாவது, சட்டப்பிரகாரம் யாதொரு அதிகாரமும் பெறாத ஒரு ஸ்திரீ சிறைச்சாலைகளைச் சீர்ப்படுத்த முயல்வது வியர்த்தமென்று நகரத்து நியாயாதிகாரிகள் மறுத்தனர். பிறை அம்மாளோ 'நாம் பிரயாசப்பட்டுப் பார்ப்போம்' என்றனள். அப்படியே பரீட்சித்துப் பார்த்துப் பிரயாசப்பட்டுப் பலனடைந்தாள். நாளாவட்டத்தில், சிறைச்சாலைகளில் முன்குறித்த ஒழுங்கீனங்களொன்றுமில்லை. கைதிகள் கூட்டங்கூட்டமாகக் கூடிக் குடித்து வெறித்துத் தூர்ப்பாஷை பேசித் தொந்தரவு செய்வது முற்றிலும் நின்றுவிட்டது. அவளுடைய மேலான உபகாரத்தைக் குறித்து ஒருவர் பின்வருமாறு எழுதுகின்றார்.

'நான் பிறை அம்மாளோடு நியூகேட் சிறைச்சாலைக்குச் சென்று ஸ்திரீகளுக்கு வேதாகமத்தின் ஒரு பாகத்தை வாசிக்கக் கேட்டிருக்கின்றேன். ஒவ்வொரு ஸ்திரீயுடைய முகத்திலும் பாவத்தின் குறிகள் காணப்பட்டன. அது மிகவும் பயங்கரமான காட்சி. தங்களுக்குப் பிரசங்கிக்க வந்திருக்கும் பெண்மணியின் ஆழ்ந்த கருத்துள்ள இனிமையான முகத்தைப் பார்த்த வண்ணமாகவே அமைதியாய் அவர்கள் உட்கார்ந்திருந்தனர். சிறிதுநேரம் அமைதியாய் ஜெபம் செய்தபின் அந்த அம்மாள் வேதாகமத்தைத் திறந்து ஏசாயா ஐம்பத்து மூன்றும் அதிகாரத்தை வாசித்தாள். அதற்கு முன்னாவது அதின் பின்னாவது அந்த அதிகாரத்தை அவள்போல் வாசித்தவர்களை நான் கண்டதில்லை. அவளுடைய பயபக்தியும் சமயோசிதமாக அவள் தன் தொனியை மாற்றித் தெளிவாக வாசித்த சிறப்பும், ஒவ்வொரு வார்த்தையையும் உச்சரித்த அழகும் அவள் வாசித்த பாகத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் அனைவரும் நன்றாய்க் கேட்கும்படி செய்தது. அவள் வாசித்தபோது அவளுடைய புலனனைத்தையும் தேவவசனங்களிலேயே செலுத்தினாள். அத்தனை பக்தியோடு வாசித்தபின் தலையை நிமிர்த்தி தன்னைச் சூழவிருந்த ஸ்திரீகளுக்குச் சில நல் வார்த்தைகள் கூறினாள். அதைக் கேட்டவர்களுடைய முகம் மாறுதலடைந்தது. அநேகர் தங்களுடைய பாவத்தை உணர்ந்து கண்ணீர் விட்டனர்.'

எலிஸபெத் பிறையுடைய உபகாரம் இப்படிப்பட்டது. உலகத்திலுள்ள மகாத்மாக்களுடன் அந்த ஸ்திரீரத்தினத்தையும் சேர்த்துச் சொல்லுதல் தவறாகுமா? அவள் தேவானுக்கிரகம்பெற்ற உத்தமி. அவளை என்றும் மறவாதிருப்போமாக.

## இராஜ வாழ்த்துக் கீதம்

1. ஆண்டவா, எங்களை
ஆளும் நல்வேந்தனைக்
காத்தருளும்.
எங்கெங்கும் வெற்றியும்,
மங்கா நற் கீர்த்தியும்,
செங்கோல் நீள் ஆட்சியும்,
அருள் செய்யும்.

2. அருட் ப்ரகாசமும்,
பொருள், தீர்க்காயுளும்
ஈந்தருளும்.
அரச னென்றைக்கும்
தருமம் காக்கவும்,
ப்ரஜைகள் வாழவும்,
அருள் செய்யும்.

## செய்யுட் பாடம்

# நன்னெறி

1. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

2. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ? விளம்பு.

3. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று.

4. இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு?

5. தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல்?

6. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தேன்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

7. பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

8. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும்; செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி.

9. கல்லா அறிவில் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணுரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணய்! நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

10. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யுற்றன்றே? விளம்பு.

11. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வ—ரம்மா!
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

12. முனிவினு நல்குவர் முதறிஞ ருள்ளக்
தனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ? வறை.

13. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமோடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது.

14. எள்ளா திருப்ப விழிஞர் போற்றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்!

15. அறிவுடையா ரன்றி யதுபெறுர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு?

16. கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாமென்று மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டு வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

17. தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ—ரேக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிரைப்பரோ போய்?

18. நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்! கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்?

19. கற்றறியார் செய்யுங் கடுநட்புத் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீஇ!
சென்று படர்ந்த செழுங்கொடிமேன் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம்.

20. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே! யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்?

# நீதிவெண்பா

1. தாமரைபோன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்?

2. அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரேலும்புங் கர்த்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ? சொல்.

3. அறிவன் பகையேனு மன்புசேர் நட்பாஞ்
சிறுவன் பகையாஞ் செறிந்த—வறிவுடைய
வேன்றி வனசரன்றான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

4. மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது? கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று?

5. பகைசேரு மெண்ணன்கு பற்கொண்டே நன்னு
வகைசேர் சுவையருந்து மாபோற்—றுறைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுவ தனல்லோர் தொழில்.

6. காந்தனில் லாத கனங்குழலாள் பொற்பவமாஞ்
சாந்தகுண மில்லார் தவமவமாம்—ஏந்திழையே!
அன்னை யில்லாப் பிள்ளை பவமவமே
துன்னெறியில் லாருண் சுவை.

7. வ்ருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

8. நோய்தாந் திருணத்தி னெய்தாகும் வெண்பஞ்சு
நோய்தா மிரப்போ னுவலுங்கால்—நோய்யசிறு
பஞ்சுதனி னெய்யானைப் பற்றுதோ? காற்றணுக
அஞ்சுமவன் கேட்ப தறிந்து.

9. கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருண்ஞானம் பெற்றோர்க்
கனந்தம் விழியென் றறி.

10. உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க; பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி
நதிகடத்த லுண்டோ? நவில்.

11. ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியா னவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

12. கற்றோர் கனமறிவர் கற்றோரே; கற்றறியா
மற்றோ ரறியார். வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறி வாளோ? நுவல்.

13. செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்.

14. நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார்—நாவினுனி
ஆங்க டினமாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஆங்கே வருமரண மாம்.

15. ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

16. துர்ச்சனரும் பாம்புந் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ? தோகையே!—துர்ச்சனர்தாம்
எந்தவிதத் தாலு மிணங்காரே; பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்.

17. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

18. அவ்விய நெஞ்சத் தறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ?—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளியது
கந்தங் கெடுமோ? கரை.

19. துன்னு மிருமலுந் துர்ச்சனரு மொக்குமே
மன்னு மினிமையான் மாருகிப்—பன்னுங்
கடுவுங் கடுநேர் கடுமொழியுங் கண்டாற்
கடுக வசமா கையால்.

20. செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனந்
தங்கு மொழிசந் தனம்போலும்—பங்கியெறி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே! வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்.

21. ஞானமா சார நயவா ரிடைப்புகழும்
ஏனைநால் வேத மிருக்குநெறி—தான்மொழியிற்
பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர்
மேவுநெறி யென்றே விடு.

22. குணநன் குணராக் கோடியோ ரிடத்திற்
குணநன் குடையார் குறுகார்—குணமுடைமை
நண்ணுச் சமண நகரத்திற் றூசோலிக்கும்
வண்ணனுக் குண்டோ வழக்கு?

23. ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றேரு—மானே!
பிறந்தவிடத் தன்றிப் பிறிதோருதே சத்தே
செறிந்தவிடத் தன்றே சிறப்பு.

24. தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்தம்
நிலையுடைய மானவரு நிற்கும்—நிலைதவறுத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமே? தான்.

25. வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிருந்
துன்றுமத யானைச் சுடர்மருப்பும்—நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பாம்; மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மே.

26. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு;—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ? புகல்.

27. சீலமில்லா னேதேனுஞ் செப்பிடினுந் தானந்தக்
கால மிடமறிந்து கட்டுரைத்தே—யேலவே
செப்புமவ னுந்தானே சிந்தைநோ காதகன்று
தப்புமவ னுத்தமனே தான்.

28. சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ? வொலி.

29. பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போத னெறியன்றே?—காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலந்தின்
சூகரத்துக் கஞ்சியோ? சொல்.

30. தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

# நீதிநெறி விளக்கம்

1. அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

2. கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.

3. எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னும்? அஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

4. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

5. வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

6. எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல்.

7. இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமோன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினும்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற.

8. கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்?

9. முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்.

10. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று.

11. கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

12. தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த நீச்சுடர்
நன்னீர் சோரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

13. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதோன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சோலல்.

14. கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கோற்கமின் றூத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வ்ல்லுரு வஞ்சன்மி னேன்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

15. கற்றன கல்லார் சேவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிரிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தம்மை யுணராதார் தம்முணரா
வேதிலரை நோவ தெவன் ?

16. வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகோல் பூட்கைக் களிறு ?

17. குடிகோன் றிறைகோள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகோன்று பால்கோளலு மாண்பே—குடியோம்பிக்
கோள்ளுமா கோள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

18. இன்று கொளற்பால நாளைக் கொளப்போறான்
நின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவன்
ஆவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

19. முடிப்ப முடித்துப் பின்பூசுவ பூசி
யுடுப்ப வுடுத்துண்ப வுண்ணு—விடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொள்ளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

20. ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதோரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார்? தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

21. கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சி? மற் றில்லாகு—மண்டேரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமுச் செறிந்து.

22. நட்புப் பிரித்தல் பகைநட்ட லோற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

23. கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

24. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறு—வாங்கதுகோண்
டேரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று.

25. மாகஞ் சிறகக் குவித்து நிதிக்குவை
யீகையி னேக்கழுத்த மிக்குடைய—மாகோல்
பகைமுகத்த வோள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு.

C. L. S. PRESS, MADRAS—1927